



මීල්පාර්වෙ

Registered as a newspaper in Sri Lanka
GPO-QD/63/NEWS/2016 - ISSN 2012-5038

Meelparvai Fortnightly
www.meelparvai.net

සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்

இதழ் - 344 • 03 ஜூன் 2016 வெள்ளிக்கிழமை • ஷஃபான் 1437 • விலை 40.00

வெள்ளத்தில் நிவாரண நடவடிக்கைகள்?

மிகவும் திருப்தி தருகின்றது (52%)
திருப்தி தருகின்றது (40%)
திருப்தி இல்லை (8%)

மீள்பார்வை இணையத்தளம் நடத்திய கணக்கெடுப்பு
www.meelparvai.net




# இராணுவம் முஸ்லிம்களுக்கு எதிரானதா?



கிழக்கு மாகாண முதலமைச்சருக்கு எதிராக இராணுவம் எடுத்த முடிவு வாபஸ் வாங்கப்பட்டுள்ள போதிலும், இவ்வாறு தடை விதிக்கின்ற இராணுவத்தின் மனப்பாங்கு பகிரங்கமாக வெளிப்பட்டுள்ளமை முஸ்லிம் சமூகத்தில் பல கேள்விகளை எழுப்பியுள்ளது.

கடந்த மாதம் திருகோணமலை சம்பூர் வித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கடற்படை அதிகாரியொருவர் மீது முதலமைச்சர் கடும் வார்த்தை பிரயோகங்களை பயன்படுத்தினார் எனக் கூறி, முப்படைகளின் தளங்களுக்குள் நுழைய கிழக்கு மாகாண முதலமைச்சருக்கு (பக்.14)




பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. பிரதமர் ரணில் விக்ரமசிங்ஹ விசேட அதிதியாக கலந்து கொண்டார். கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் அவர்களுடைய பிறந்த தினத்தை முஸ்லிம் மாணவியர் அவருக்கு கேக் ஊட்டிக் கொண்டாடினர்.

## முதலமைச்சருக்குத் தடைவிதிக்க இராணுவத்துக்கு அதிகாரம் கிடையாது



முதலமைச்சர்களுக்கு தடைவிதிப்பதற்கு எந்தவொரு அமைச்சுக்கோ அல்லது படையினருக்கோ அதிகாரம் கிடையாது. கிழக்கு மாகாண முதலமைச்சர் முஸ்லிம் என்பதனாலேயே எதிர்ப்புக்கள் கிளம்பின என வாராந்த அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்ட அமைச்சரவை பேச்சாளர் ராஜித்த சேனாரட்ன குறிப்பிட்டார்.

ஆளுனரை ஜனாதிபதி தெரிவு செய்கிறார். முதலமைச்சரை மக்களே தேர்ந்தெடுக்கிறார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்ற வகையில் மக்களின் ஆணை முதலமைச்சருக்கு கிடைக்கின்றது. (பக்.04)



## பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு வாரம் ஒருமுறையேனும் செல்லுங்கள்.

- ஜனாதிபதி மக்கள் பிரதிநிதிகளுக்கு அறிவுறுத்தல்

## கொழும்பில் சேரும் நீரை கடலுக்கு அனுப்ப புதிதாக இரு சுரங்க வாயில்கள்



கொழும்பில் சேரும் தண்ணீரை வெளியேற்றுவதற்கென ஒல்லாந்தர் காலத்தில் அமைக்கப்பட்ட ஐந்து சுரங்கப் பாதைகளில் 1989 ஆம் ஆண்டில் மூடப்பட்ட முகத்துவாரம் சுரங்கவாயில் இன்றுவரை திறக்கப்படவில்லை. அதேபோல பேரை கால்வாய் நீரை கடலுக்கு இறைப்பதற்கான திட்டமும் தற்போது நடைமுறையில் இல்லை. கொழும்பில் சேரும் மேலதிக நீரை வெளியேற்றுவதற்கான முறையான திட்டமொன்று வகுக்கப்படாமையே இம்முறை வெள்ளம் (பக்.14)

## வாக்காளர் பதிவில் அக்கறை காட்டுங்கள்



இந்த மாதம் வாக்காளர்களை பதிவு செய்யும் மாதம் என்பதால் ஒவ்வொரு பிரதேசங்களுக்கும் கிராம சேவகர்கள் வாக்காளர் படிவங்களை விநியோகித்து வருகின்றனர். மக்கள் அந்த படிவங்களை திருப்பி ஒப்படைத்து தாம் வாக்காளர்கள் என்பதை உறுதிப்படுத்த வேண்டும் என உரையாடலுக்கும் ஆய்வுக்குமான மையம் (CDR) முஸ்லிம் மக்களைக் கோரியுள்ளது. (பக்.04)




## முஸ்லிம்களை மீள்குடியேற்றுவதற்கு வடக்கில் 16,120 வீடுகள் தேவை



வடமாகாணத்திலிருந்து முஸ் லிம்கள் வெளியேற்றப்பட்டு கால் நூற்றாண்டுகள் கழிந்துள்ள நிலையில் அவர்களை மீள்குடியேற்றுவதற்கென 16,120 வீடுகள் தேவைப்படுவதாகவும் அதனை நிர்மாணித்துக் கொடுப்பதற்கு அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு அமைச் சரவை அங்கீகாரம் வழங்கியிருப்பதாகவும் அமைச்சரவையின் இணைப் பேச்சாளர் அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்தார். (பக்.04)

## ஹஜ் முகவர்களின் பட்டியல் வெளியீடு

இவ்வருட ஹஜ் கடமைக்கென யாத்திரிகர்களை அழைத்துச் செல்வதற்கென முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஹஜ் முகவர்களின் பட்டியலை திணைக்களம் வெளியிட்டுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட 97 முகவர் நிலையங்களின் பெயர்களுடன் அவர்கள் ஒரு யாத்திரிகருக்காக அறவிடப்படும் கட்டண விபரங்களும் இந்தப் பட்டியலில் அடங்குகின்றன. 445,000 ரூபா முதல் 650,000 வரை முகவர்களின் கட்டணங்களாக குறிப்பிடப் பட்டுள்ளன. விமானக் கட்டணம், ஹஜ் சேவைக்கட்டணம், போக்குவரத்துக் கட்டணம், உணவு தங்குமிட வசதிகள், மௌலவி வழிகாட்டல் (பக்.14)

## அரசியலமைப்பு தொடர்பான மக்களின் பிரேரணைகள் சபாநாயகரிடம் கையளிப்பு



அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பில் மக்களின் கருத்துக்களைப் பெறுவதற்காக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட குழுவினர் தமது அறிக்கையினை சபாநாயகரிடம் சமர்ப்பித்துள்ளனர்.

நாடுமுழுவதிலும் இருந்து மக்களிடம் பெறப்பட்ட கருத்துக்களின் படி, முழுமையான உரிமைகளை உள்ளடக்கிய சட்டம் ஒன்றின் மூலம் அடிப்படை உரிமைகளையும் மனித உரிமைகளையும் விரிவுபடுத்தும் சட்ட ஆதிக்கத்தை ஸ்தாபிப்பது, சுயாதீன ஆணைக்குழுக்களை வலுப்படுத்துவது, அதற்கூடாக அரசு ஜனநாயகபூர்வமானதாக (பக்.04)







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மீள்பார்வை



# இவர்கள் குறை தீராமல் எப்படி நிம்மதியாக உறங்க முடியும்...?

இன்று ஒரு அழைப்பு. மறுபக்கம் ஒரு இளம்பெண். கொஞ்ச நேரம் பேச வேண்டும் முடியுமா என்று கேட்டார். ஆம் என்றேன்.

தான் ஒரு இளம் வயதுப் பெண், வெள்ள அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டவள் என்று தன்னை அறிமுகம் செய்தவரிடம் தொடர்ந்து உங்கள் தேவையை சொல்லுங்கள் என்றேன். அவர் மற்றவர்கள் போல உடனடியாக எதுவும் கேட்கவில்லை தான் கொழும்பில் தனியார் பாடசாலை ஒன்றில் அமைந்துள்ள அகதி முகாமில் வசிப்பதாகவும் தாங்கள் மொத்தம் ஐந்து குடும்பங்கள் காணப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

உங்களுக்கு என்ன தேவைகள் உண்டு என்று கேட்டேன். அவர் உடனடியாக எதுவும் பதிலளிக்கவில்லை. ஆகவே நானே தொடர்ந்தேன். உங்களுக்கு படுப்பதற்கு பாய், தலையணை பெட்சீட் உண்டா என்றேன் ஆம் என்றார். சாப்பாடு கிடைக்கிறதா என்றேன் பரவாயில்லை கிடைக்கிறது என்றார். சிறுபிள்ளைகள் உண்டா? ஏதாவது மருந்துப் பொருட்கள் தேவையா என்று கேட்டேன் இல்லை என்றார்.

நுளம்புவலை உண்டா? கிடைத்ததா என்று கேட்டேன். இல்லை முடிந்தால் தாருங்கள் என்றார். சரி நாளை மாலை உங்களுக்கு அனுப்பி வைக்கிறேன் என்று சொல்லி முடிப்போம் என்று நினைத்தேன். ஆனால் அவர் திருப்தியடையவில்லை ஏதோ சொல்ல வருகிறார் அவரால் சொல்ல முடியாமல் தயங்குகிறார் என்று புரிந்துகொண்டேன்.

எனவே தொடர்ந்தும் அவரிடம் உங்களுக்கு என்ன தேவை இருந்தாலும் தயக்கமின்றி கேளுங்கள், ஒரு சகோதரனாக எங்களால் முடிந்ததை செய்து தருகிறோம் என்றேன்.

'ஓர் நடுத்தர குடும்பம் என்னுடைய குடும்பம். எனது சகோதர சகோதரிகள் அனைவரும் திருமணம் செய்து விட்டார்கள். நானும் எனது தாயும் தந்தையும் மட்டுமே ஒன்றாக வசிக்கிறோம். எதிர்வரும் டிசம்பர் மாதம் எனக்கு திருமணம் செய்ய எனது பெற்றோர் ஏற்பாடு செய்திருந்தனர். அதற்காக கொஞ்சம் கொஞ்சமாக சிறு சிறு தொகையில் சில வீட்டுக்குத் தேவையான பொருட்களும் துணிமணிகளும் வாங்கி வைத்திருந்தனர்.

அத்தோடு திருமணத்திற்குரிய இன்னும் சில ஏற்பாடுகளும் செய்து வந்தனர். ஆனால் இந்த வெள்ளத்தினால் அனைத்தும் நாசமாகிவிட்டது. வாங்கி வைத்திருந்த புதிய பொருட்கள் மட்டுமன்றி வீட்டில் பாவித்த பழைய பொருட்களோடு சேர்த்து எல்லாவற்றையும் இழந்துவிட்டோம். வசிப்பதற்கு இடமின்றி உறவினர்கள் இன்றி சுமார் இரண்டு வாரமாக இந்தப்பாடசாலையின் வகுப்பறையிலேயே வாழ்கிறோம். எங்களை கவனிக்கவோ அக்கறை செலுத்தவோ யாரும் இல்லை. என்னுடைய திருமணத்திற்காக எனது தாய் கண்ட கனவு இன்று கேள்விக்குறியாகிவிட்டது.

இந்த விடயத்தினையும் கவலைகளையும் பகிர்ந்துகொள்ளக்கூட யாருமின்றி வாழ்கிறோம். நீங்கள் அனைவருக்கும் உதவிசெய்வதை அறிந்ததால் உங்களிடம் இதனைக் கூறுகிறேன். நீங்கள் உதவி செய்யாவிட்டாலும் பரவாயில்லை. நேரம் ஒதுக்கி பேசியதற்கும் ஆறுதல் கூறியதற்கும் நன்றி' என்று சொல்லி முடித்தார்.

இப்படி எத்தனையோ பேர் அழுது கொண்டிருக்க நாங்கள் எங்கே? எங்கள் உதவிகள் எங்கே? நாங்கள் செய்தவை சிறுதுளியல்லவா? முடிந்தவர்கள் இந்த அவலங்களைத் தீர்த்து அவர்களுக்கும் நிம்மதியான திருப்திகரமான வாழ்க்கை அமைய முன்வருவார்களா? இவர்கள் குறை தீராமல் நான் மட்டும் எப்படி நிம்மதியாக உறங்குவது?

யாஅல்லாஹ் நீயே கருணை யாளனுக்கெல்லாம் கருணையாளன்.

**- அஷ்ரப், (ரோயல் யூத்ஸ்)**

# மீண்டும் ஆரம்பத்திலிருந்து

பல நாட்களாய் அவர்கள் உறக்கம் தொலைத்தவர்கள்..உடைமைகளையும் இழந்திருக்கிறார்கள்..

அனைத்தையும் யாராலும் மீட்டுக் கொடுக்க முடியாது... துக்கத்தை மறக்கும் நிம்மதியான தூக்கத்துக்காவது உதவ முடியுமா? என்றுதான் யோசிக்க வேண்டியிருக்கிறது. வெள்ளம் வடிந்த பிர தேசங்களில் வீசுகிற துர்வாடை மீளக் குடியேறுவதை பல இடங்களில் தாமதப்படுத்தியிருக்கிறது.

ஊடக நண்பர் ஒருவர் தனது மகள் அந்ததுர்வாடையினைதாங்கவொண்ணாமல் மயங்கி விழுந்ததால் மீண்டும் தற்காலிக தங்குமிடத்திற்கே திரும்பி விட்டதாக நேற்று சொன்னார்.

நம் எல்லோருக்கும் முன்னே மிகப் பெரும் பணி காத்துக் கிடக்கிறது, அவர்களது வாழ்க்கை சக்கரத்தை மீண்டும் முதலில் இருந்து சுழற்றி விட வேண்டியிருக்கிறது. **- முஜீப் இப்ராஹீம்**

# முஸ்லிம்களின் சேவை வியக்க வைக்கின்றது



தொடராக இடம்பெற்றுவரும் வெள்ளத்தினால் பாதிப்புற்ற பிரதேசங்களின் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் பாராட்டுக்குரியது. களத்தில் அரச படைகள், அரசாங்க ஊழியர்களின் பணியை மிகைத்து முஸ்லிம் சகோதரர்களின் பணி வியக்க வைக்கின்றது. எமது பன்சலையையும், இப்பிர தேச வீடுகள் அனைத்தையும் முஸ்லிம் அமைப்புக்களே சுத்திகரிப்பு செய்கின்றன. தொடராக பல ஊர்களில் இருந்து பல அமைப்புக்களில் இளைஞர்கள், பெரியோர் சுத்திகரிப்பு நடவடிக்கைகளுக்காக வருகை தருகின்றனர். இது சிறந்ததோர் ஆரம்பம். இன்று மனிதர்களின் உடல் மட்டுமே பள்ளிக்கோ, பன்சலைக்கோ வருகின்றது. உணர்வுகளோ பணம், தொழில் அல்லது வேறு எந்த சிந்தனையிலோதான் இருக்கின்றது. இது ஒரு பாடம், மனித மனங்களிலோ குரோதம். மனிதன் இறைவனை உளப்பூர்வமாக நினைவு கூறாததன் விளைவுதான் இது.. மனிதாபிமானம் மற்றும் சகவாழ்வு என்பன இல்லாமல் போனதற்கான அடையாளம்தான் இந்த அனர்த்தம்.

சமூகத் தலைமைகள் எங்கிருந்து நல்லிணக்கத்தை ஆரம்பிப்பது என்று சிந்தித்தே காலம் கழிகின்ற நேரத்தில் முஸ்லிம்களின் இவ்வகையான ஆரம்பம் மகிழ்ச்சி தருகின்றது. இதுதான் காலத்தின் தேவை. **- வெல்லம்பிட்டிய பதில் விகாராதிபதி**






# துளிர்க்கும் மனிதம்



அரநாயக்க மலையில் மண் சரிந்து கொண்டிருந்த போது, பெருமழையையும், தனது உயிரையும் பொருட்படுத்தாது, அப்பிரதேசத்துக்குச் சென்று, கிட்டத்தட்ட 80 ஊர் வாசிகளை உயிரோடு மீட்ட முதல் மனிதர் இவர்.

மூன்று மாதக் குழந்தையின் தந்தையான இந்த இளைஞரும், இவரது தம்பி நதீஷவுமே மண்சரிவில் சிக்கியவர்களை மீட்டெடுப்பதில் மிகுந்த முனைப்போடு செயலாற்றியவர்கள். இந்த இளைஞரும், தம்பியும் இணைந்து காப்பாற்றிய 80 பேரும் தற்போது முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருக்கின்றனர். ஆனால் இவர்கள் தற்போது உயிரோடு இல்லை.

அரநாயக்க, எளிங்கிபிடிய பிரதேச மலையில் மண் சரிந்து கொண்டிருக்கிறது. மக்கள் மூழ்கிக் கொண்டிருக்கிறார்கள். நானும், தம்பியும் இணைந்து முடிந்தவரையில் அவர்களைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறோம். உடனடியாக இங்கு அம்புலன்ஸ் வண்டிகளையும், ஏனைய வாக னங்களையும் அனுப்பி வையுங்கள்' என மண்சரிவு குறித்து முதன்முதலாக வெளியுலகுக்குச் சொன்ன முதல் நபரும் இவர்தான். அந்தத் தகவலின் மூலமாகத்தான் உடனடியாக வாகனங்களை அனுப்பி, நிறையப் பேரைக் காப்பாற்ற முடிந்தது.

இந்த இளைஞரின் வீடு இப் பிரதேசத்திலில்லை. எல்லோரையும் போல வெறுமனே மண் சரிவினை வேடிக்கை பார்த்திருக்கலாம். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. கொட்டும் மழையைப் பொருட்படுத்தாது, உடனடியாக தம்பியுடன் மோட்டார் சைக்கிளில் அங்கு சென்று, அவர்களைக் காப்பாற்றியிருக்கிறார்கள். மீதமானவர்களைத் தேடும் போது, கற்பாறைகளும், மண்ணும் அந்த இருவரையும் கூட மூடிவிட்டது.

சடலங்களைத் தேடியெடுக்கும் பணியின் போது, முதன்முதலில் கிடைத்த சடலம் அந்த மனிதருடையதுதான்.

- எம்.ரிஷான் ஷெரீப்

# வெள்ள அனர்த்த வைத்திய முகாம்















'முஸ்லிம் எயிட்' நிறுவனம் (MFCD) மற்றும் ஷபாப் உடன் இணைந்து கொடிகாவத்த, கொத்தட்டுவ பகுதிகளில் நடாத்திய இலவச மருத்துவ முகாம்!









நைதுவ - மாபோல பகுதியில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டோருக்காக நடைபெற்ற ஸ்ரீ லங்கா தவ்ஹீத் ஜமாத்தின் (SLTJ) இலவச மருத்துவ முகாம் இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுனாமியின் பினாமி

## ஒரு கள அனுபவம்

ஹஸ்ரீம் இஸ்மாயில்





எந்தவொரு செயற்பாடும் அல்லாஹு தஆலாவின் முன்னேற்பாட்டின் அடிப்படையிலேயே நிகழ்கின்றன என நமது உலமாக்கள் ஏற்படுத்தி வைத்துள்ள ஆழமான நம்பிக்கை, இலங்கை முஸ்லிம்களை ஒவ்வொரு அனர்த்தத்தின் போதும் முன்னோக்கி நகர்த்திக் கொண்டிருக்கிறது.

2004 சுனாமிப் பேரலையின் பின்னர் இலங்கைத் தீவைப் பாதித்து வருகின்ற அநேகவித அனர்த்தங்களின் போதும் முஸ்லிம்கள் செயற்பட்டு வருகின்ற விதம் பலரதும் கவனத்தை ஈர்த்து வருகின்றது. குறிப்பாக முஸ்லிம்களைப் பாதித்த பொதுபலசேனா அனர்த்தம் இலங்கை முஸ்லிம்களை ஒரே அணியில் இணைந்து செயற்படுவதற்கான தூண்டுதல்களை அளித்திருந்தது. இதன் விளைவாக பல்வேறு கட்டங்களிலும் இணைந்து செயற்படத் துடித்த முஸ்லிம் சிவில் அமைப்புக்களை, அடாது பெய்த கடும் மழை ஒரே குடையின் கீழ் இணைத்திருக்கிறது.

1989 இன் பின்னர் கொழும்பைப் பாதித்த இந்தப் பெருவெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கவென அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா விடுத்த அறைகூவலுக்கு முஸ்லிம் அமைப்புக்கள் செவி தாழ்த்தி ஒன்று கூடின. நிலைமை நிவாரணத்தைத் தாண்டி மீட்புப் பணி, சுத்திகரிப்புப் பணி, வீட்டுக்குத் திரும்பச் செல்ல வைக்கும் பணி என பெருக்கெடுத்துச் செல்வதை உணர்ந்த சமூகத் தலைமைகள், எல்லா சமூக அமைப்புக்களையும் ஒரு விரிப்பாக விரித்து, அதிலே சமூகத்தின் ஹஜருல் அஸ்வத் சுமையை வைத்து, சமூகத்தின் பாரத்தை ஒன்றாகச் சுமப்பதற்கு முடிவு செய்தன.

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா, முஸ்லிம் கவுன்ஸில் ஒப் ஸ்ரீ லங்கா, தேசிய ஷூறா சபை ஆகிய தேசிய சமூக நிறுவனங்களுடன் கொழும்பு மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனமும் இணைந்து RCC (Releif Cordinating Centre) நிவாரண ஒருங்கிணைப்பு மையம் ஒன்றை உருவாக்கி, ஒருங்கிணைந்து களத்தில் பணியாற்றின. முஸ்லிம் கவுன்ஸில் ஒப் ஸ்ரீலங்கா, தேசிய ஷூறா சபை ஆகியவற்றில் உறுப்புரிமை பெற்றுள்ள கலாச்சாரத்துக்கும் அபிவிருத்திக்குமான முஸ்லிம் நிறுவனம் (MFCD) உடன் இணைந்து களப்பணி ஆற்றும் வாய்ப்பு எனக்கும் கிடைத்தது.

வெள்ளம் வடிந்து விட்டது என்ற தகவல் கிடைத்த வியாழக்கிழமை காலையிலேயே அவர்கள் தமது சுத்திகரிப்புப் பணியை ஆரம்பித்தார்கள். வெல்லம்பிட்டிய பிரதான பாதை அருகில் ஒரு காரியாலயம் அமைக்கப்பட்டது. நாடு முழுவதும் தமக்கிருக்கின்ற தொண்டர் படையில் அவர்கள் வைத்திருந்த நம்பிக்கை வீண் போகாத வண்ணம் தொண்டர்கள் வந்து குவிந்தார்கள். இதுவரை தொண்டர்கள் அர்ப்பணத்துடன் MFCD நிறுவனத்துடன் இணைந்து வேலை செய்திருக்கிறார்கள்.

மழை வெள்ளத்தை விட சாக்கடை வெள்ளமே வெல்லம்பிட்டியவை மூழ்கடித்திருந்தது. அதனால் தொண்டர்களின் பாதுகாப்புப் பற்றி MFCD நிர்வாகிகள் கூடுதல் கவனம் செலுத்தியிருந்தார்கள். தொண்டர்களுக்கு பூட்ஸ், கையுறைகள், மூக்குக் கவசம் போன்றன வழங்கப்பட்டதோடு, கிருமிகளில் இருந்து பாதுகாப்புப் பெறவென அன்டிபயாடிக் வில்லைகளும் வழங்கப்பட்டன. இத்தனை முன்னெச்சரிக்கைகளை ஏன் செய்கிறார்கள் என்பது களத்துக்குப் போன போது புரிந்தது.

ஒவ்வொரு வீடும், அரிதாக இருக்கின்ற முற்றங்களும் பாதையும் அழுகி நாறிக் கொண்டிருந்தன. தாறு மாறாகப் புரண்டிருக்கின்ற வீட்டுத் தளபாடங்களும் உடைமைகளும் வெறுங் கையால் தொட முடியாத அளவு சேற்றிலும் அழுக்குத் தண்ணீரிலும் ஊறிப் போயிருந்தன. பிரிட்ஜ், அலுமாரிகள், ஷோபா செட்டுகள் தண்ணீரில் கூரை வரை மிதந்து சென்று வேறு வேறு இடங்களில் தரை தட்டியிருந்தன. எம்.டி.எப். போர்டினால் செய்யப்பட்ட பெரிய பெரிய தளபாடங்களும் ஊறிப்போன காகிதக் கூழ்களாக குவிந்திருந்தன.

இலத்திரனியல் சாதனங்கள் அனைத்தும் மீண்டும் பயன்படுத்தப்பட முடியாத குப்பைக் கூழங்களாக மாறியிருந்தன. பாய்கள், தலையணைகள், மெத்தைகள், தொட்டில்கள் அனைத்திலும் ஊறிப் போயிருந்த தண்ணீரைப் பிழிந்தால் மற்றுமொரு வெள்ளம் வரும் அபாயம் நேரலாம் போலிருந்தது. மொத்தத்தில் சுனாமியின் பினாமியாகத்தான் இந்த வெள்ள அனர்த்தம் தோன்றியது.

வியாழன் காலையில் சுத்திகரிப்புக்காக வீடுகளுக்குச் சென்றபோது, தமக்கு உதவுவதற்கு முன்வந்த முதலாமவர்களாக பாதிக்கப்பட்டவர்கள் எங்களை நோக்கினார்கள். அது வரை அவர்களது உறவினர்களும் அங்கு வந்திருக்கவில்லை. ஆபத்தில் உதவும் நண்பர்களும் வந்து சேர்ந்திருக்கவில்லை. கிராமப் பகுதிகளை விட இதுபோன்ற இடங்களில்தான் தொண்டர்களின் சேவை அதிகமாகத் தேவைப்படுகிறது. ஏனெனில், பக்கத்து வீட்டான் யாரென்றே தெரியாமல் வளர்ந்தவர்கள் இவர்களில் அநேகம் பேர் இருக்கிறார்கள்.

நிவாரணப் பணிகளை விட சுத்திகரிப்புப் பணிதான் முக்கியமானது என்பதை, அங்கு நிறுவப்பட்டிருந்த களப் பணியகத்துக்கு வந்து குவிந்த கோரிக்கைகள் வெளிப்படுத்தின. எங்களது வீட்டுக்கு வாருங்கள் என்று அழைக்கின்ற ஏராளமான அழைப்புக்களுக்கு செவி தாழ்த்தி, முடியுமான இடங்களுக்கெல்லாம் தேவையான உபகரணங்களுடன் தொண்டர்கள் அனுப்பி வைக்கப்பட்டார்கள். வெல்லம்பிட்டி பகுதியில் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் முஸ்லிம்கள் என்ற போதிலும் தம்மை நாடிவந்த ஏனைய இனத்தவர்களையும் கவனத்தில் எடுத்து உதவினார்கள்.

அழிவுகளின் பாதிப்பை பாதிக்கப்பட்டவர்களின் மனப்பாங்குகள் வெளிப்படுத்தின. மீண்டும் பூச்சியத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டிய கொடுமையை நினைத்து அவர்கள் ஏங்கிக் கொண்டிருந்தார்கள். வீடுகளில் இருந்து பொருட்களின் கழிவுகளை அப்புறப்படுத்தும் பொழுதெல்லாம் அவர்கள் உதவிக்கு வராமை ஆச்சரியத்தைத் தந்தாலும், காலங் காலமாக துளித் துளியாய்ச் சேர்த்து வாங்கிய ஒவ்வொரு பொருளையும் எடுத்து வெளியே வீசுவதை பார்த்துக் கொண்டிருப்பதைத் தவிர தம்மால் செய்ய வேண்டியது எதுவுமில்லை என்பதை அவர்களது முகபாவம் காட்டியது.

தன்னுடைய வீட்டிலிருந்த அனைத்துமே வீசப்பட்டதன் பின்னர் முச்சக்கர வண்டிச் சாரதியான வீட்டுடைமையாளர், தன்னிடம் நாற்பது ரூபா மட்டுமே எஞ்சியிருக்கிறது என்று சொன்னபோது பாவமாக இருந்தாலும், அல்லாஹ் மீண்டும் அனைத்தையும் தருவான் என்று அவர் சொன்ன வார்த்தைகள் மனதை சாந்தப்படுத்தியது.

சுத்திகரிப்புப் பணியில் ஈடுபடுவதற்கு பல்வேறு ஊர்களிலும் இருந்து வந்திருந்த தொண்டர்களில் பலதரப்பட்டவர்களும் கலந்திருந்தார்கள். அலுவலக உத்தியோகத்தர்கள், ஆலிம்கள், கூலித் தொழிலாளிகள், ஹாஜிமார்கள், வர்த்தகர்கள், மாணவர்கள் என பல்வேறு மட்டங்களில் இருந்தும் தொண்டர்கள் MFCD உடன் இணைந்து பணியாற்றினார்கள். சனி, ஞாயிறு தவிர்ந்த வேலை நாட்களிலும் தமது அன்றைய நாளின் வருமானத்தைத் துறந்து இவர்கள் வேலை செய்தார்கள்.

தூர இடங்களில் இருந்து பஸ் ஏற்பாடு செய்து படைபடையாக வந்தவர்கள் தமது போக்குவரத்துச் செலவுகளையும் தாமே சுமந்தார்கள். இன்னும் சில ஊர்கள் சுத்திகரிப்புக்கான பொருட்களையும் எடுத்து வந்தார்கள். மேலும் சில ஊர்கள் நிதியைத் திரட்டிக் கொண்டு வந்தும் கொடுத்தார்கள்.

பேருவளையில் இருந்து வந்த 35 பேர் கொண்ட குழுவில் ஒரு குருடர் வந்திருந்தமை ஸஹாபாக்களின் தியாகத்தை நினைவூட்டியது. சமூகத்துக்கு ஒரு துயரம் வந்துவிட்டது என்றதும் இவர் களத்துக்கு ஓடி வந்திருக்கிறார். இவரால் என்ன செய்ய முடியும் என்று யோசித்த போது, இவர்தான் எமது குரூப் லீடர் என அவர்களில் ஒருவர் இவரை அறிமுகப்படுத்தினார். தான் தலைமை தாங்கி அழைத்து வந்த 35 பேரினதும் பெயர்களைப் பதியவைத்து, அவர்களைக் குழுக்களாகப் பிரித்து களத்துக்கு அனுப்பும் பணியை அவர் செய்தார். பின்னர் மாலையில் குழுக்கள் அனைத்தும் திரும்பி வந்த பொழுது, அவர்களுடைய பொருட்களை ஒப்படைத்து விட்டு குழுவின் அனைவரையும் ஒன்று சேர்த்து அழைத்துச் செல்லும் வரை அவர் அலுவலகத்தில் இருந்து கண்ணும்(?) கருத்துமாகச் செயற்பட்டார்.

அது போல சொகுசு வாழ்க்கை வாழ்ந்து அதுவரை சுத்திகரிப்புப் பணியிலே ஈடுபடாதவர்களும், வீட்டையாவது நீங்கள் கூட்டிப் பெருக்கியதில்லை, அங்கே போய் என்ன செய்யப் போகிறீர்கள் என்ற மனைவியின் நையாண்டிப் பேச்சுக்கு மத்தியிலும் இங்கு வந்து கடுமையாக, உண்மையாக உழைத்ததை காண முடிந்தது. வரகாபொல தாருல் ஹஸனாத் அகடமி மாணவர்கள், தாம் சுத்தம் செய்த வீட்டில் கண்டெடுத்த ஐந்து இலட்சம் ரூபாக்களையும் வீட்டாரிடம் ஒப்படைத்த செய்தி, எவ்வளவு தூய்மையாக களத்திலே வேலை நடந்திருக்கிறது என்பதற்கு சான்றுபகரப் போதுமானது.

நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட, நேர்த்தியான கட்டமைப்புடன், தியாகமும் அர்ப்பணமுமாக, சமூகம் பற்றிய ஆழமான அக்கறையுடன் உழைக்கின்ற ஒரு நிறுவனத்துடன் பணியாற்றக் கிடைத்த அனுபவம் எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை மனதுக்குள் வெள்ளமாய்ப் பெருக்கெடுக்கச் செய்தது. அனர்த்தமொன்று ஏற்பட்டுத்தான் சமூகம் ஒற்றுமைப்பட வேண்டும் என்ற நிலை மாறி, ஒற்றுமைப்பட்ட சமூகமாக வாழ்வதன் ஊடாக அனர்த்தங்களைக் குறைப்பதற்கு இனி நமது சமூகத்தால் முடியும் என்ற நம்பிக்கை இம்முறை களத்திலே உழைத்த யாவரினதும் மனதில் துளிர்த்திருக்கும்.

# வற்றாத கருணை வெள்ளம்



MFCD நிறுவனத்தின் மூலம் புத்தளம் பகுதியில் இருந்து சுத்திகரிப்பு செய்வதற்காக வெல்லம்பிட்டியவில் இருக்கும் எமது வீட்டிற்கு இளைஞர்கள் வருகை தந்துள்ளனர். முன்பு இப்படியெல்லாம் இல்லை, ஆனால் இப்போதைய இளைஞர்களுக்கு இவ்வாறு உதவ வேண்டும் என்ற எண்ணம் வந்திருக்கின்றது. ஓர் வெள்ளம் அல்லது அனர்த்தம் நிகழ்ந்தால், பொதுவாக எல்லோரும் பொருள் வசதி, பண வசதி என்பவற்றையே வழங்க வேண்டும் என்று எண்ணுகின்றனர்.

அரிசி, பருப்பு, சீனி என்பவற்றை அவர்களுக்கு கொடுத்துவிட்டால் போதுமென்று நினைக்கின்றார்கள். இப்படிப்பட்ட உடல் உழைப்புக்கள், சுத்திகரிப்பு தேவைகள் இருப்பதை பலர் உணர்வதில்லை. ஒவ்வொருவரும் பாதிக்கப்பட்ட மக்களின் வீடுகளுக்கு சென்று ஒருமுறை பாருங்கள், அவர்கள் இறந்த பின்னர் அஞ்சலி செலுத்துவதற்கு அல்லது துக்கம் விசாரிப்பதற்கு மட்டும் செல்ல வேண்டாம், இருக்கும் போதே சென்று சிறு உதவியையாவது செய்து கொடுங்கள் என்பதே பொதுமக்களுக்கான எனது கருத்து.


– புர்கான் பீ இப்திகார், பிரபல வானொலி அறிவிப்பாளர்



நாம் பிரெண்டியாவத்தையின் உள் பகுதியில் உள்ள வென்னவத்தையில் வசிக்கின்றோம். இப்பகுதிகள் முழுதுமே வெள்ளத்தில் மூழ்கிய பிரதேசம், வெள்ளம் வடிந்து தற்போது இங்கு சேறும் சகதியுமான நீர் வீடெங்கும் பரவி இருக்கின்றது. நாம் எமது வீட்டை பழைய நிலைக்கு மீட்க இங்கு MFCD நிறுவன முஸ்லிம் சகோதரர்களே பாரிய உதவியை செய்திருக்கின்றார்கள். இங்கு தற்போது தண்ணீர் வசதியோ, மின்சார வசதியோ இல்லை.

சுத்திகரிப்புக்காக பொருட்களை சிலர் விநியோகிப்பதை அறிந்தோம், அவர்கள் வெல்லம்பிட்டிய நகருக்கு அண்டிய பகுதி மக்களுக்கே அவற்றை விநியோகம் செய்துள்ளனர். உள் பகுதிகளில் வாழும் மக்களால் பிரஷ் ஒன்றை வாங்கவும் வசதி இல்லாத நிலை தற்போது. உண்மையாக எனக்கு உதவியது இந்த முஸ்லிம் சகோதரர்கள்தான். இந்த இளம் சகோதரர்கள் தான் என் வீட்டை பழைய நிலைக்கு எனக்கு மீட்டுத் தந்தார்கள்! இன, மத பேதமின்றி உதவிய முஸ்லிம் சமூகத்துக்கு நான் எனது ஆழ்ந்த நன்றிகளை தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன். உண்மையாக நான் இப்போது முஸ்லிம்களை மதிக்கின்றேன்.

(சகோதர இன சகோதரி)



வைத்தியர் ரியாஸ் காஸிமின் அமாயாஸ் யூனானி ஹேர்பல் சென்டர் இல் நான் பணிபுரிகின்றேன். நான் ஜெஸ்மின். வெல்லம்பிட்டிய பகுதியில் இருக்கும் எமது வைத்திய [illegible] சேதமாகி இருக்கின்றது. தற்போது இங்கு MFCD சகோதரர்கள் சுத்திகரிப்பில் ஈடுபடுகின்றனர் அல்ஹம்துலில்லாஹ். தனது வைத்திய நிலையத்தின் நிலைமையை பற்றி அலட்டிக்கொள்ளாமல் எமது வைத்தியர் சமூக சேவை பணியில் தற்சமயம் இருந்து கொண்டிருக்கின்றார்.



வெள்ளம் வடிந்தபின் வீட்டுக்கு வந்து பார்த்தபோது வீட்டுச் சாமான்கள் எல்லாம் குப்பைகளாகவே காட்சி தந்தன. நானும், என் மனைவியும் அநாதரவாக இருப்பதை உணர்ந்தேன். எமக்கு இங்கு உதவ யாருமிருக்கவில்லை. நாம் இருவரும் நோயாளிகள். MFCD என்று ஒரு நிறுவனம் சுத்திகரிப்பில் ஈடுபடுவதாக அறிந்து விரைந்தேன். வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதளவு உதவியை எமக்கு இந்நிறுவனம் செய்துள்ளது. இவர்கள் ஒரு சில மணி நேரங்களில் எம் வீட்டை சுத்தப்படுத்திவிட்டனர், இல்லாவிடில் பல வாரங்கள் நாம் இருவரும் சுத்தம் செய்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகியிருக்கும். நாம் உங்களுக்கு மிகவும் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளோம். அதிகம் பிரார்த்திக்கின்றோம்.


– ஜனித்



நான் சஜீவனி. லன்சியாவத்தையில் ஆடை தொழிற்சாலை ஒன்றை நடாத்தி வருகின்றேன். இப்பகுதியைச் சேர்ந்த 9 பெண்மணிகள் இத்தொழிற்சாலையில் வேலைபார்க்கின்றனர். அவர்களின் வீடுகளும் வெள்ளத்தில் மூழ்கி கடும்பாதிப்பில் உள்ளன. எனது நிறுவனத்தில் இருந்த ஆடைகள், இயந்திரங்கள் பெரும்பாலானவை சேதம். 2, 3 லட்சங்கள் எமக்கு நஷ்டம், மிகுந்த அசாதாரண நிலையில் இருக்கின்றேன். பாதிப்பில் இருக்கும் ஊழியர்களுக்கும் நிதி உதவிகள் செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம்.

சில பொருட்களை மட்டுமே எம்மால் பாதுகாக்க முடிந்தது, அதுவும் இப்பிரதேசத்தை சுற்றியுள்ள முஸ்லிம் சகோதரர்கள் ஓடி வந்து எமக்கு உதவியதாலேயே சாத்தியமானது. அவை வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டவை. இங்கு ஏழு MFCD தம்பிமார் வேலை செய்கின்றனர், நாம் வேண்டிக் கொண்ட அடுத்த கணம் எமக்கு இவர்களின் உதவிகள் கிடைத்தன. நாம் இவர்களுக்கு மிகவும் கடமைப்பட்டவர்கள். முஸ்லிம் சகோதரர்கள் தான் எமக்கு இந்த கடினமான நிலையில் உதவியவர்கள்! உங்களுக்கு மிக்க மிக்க நன்றி!

– சஜீவனி, லன்சியாவத்தை



இவர்கள் (MFCD) யாரென்று எனக்கு தெரியாது. இவர்கள் எனது வீட்டை சுத்தம்செய்து தரும்போது ஒவ்வொரு பொருட்களையும் மிக அவதானமாகவும், கவனமாகவும் கையாண்டதை அவதானித்தேன், எனக்கு மிகவும் சந்தோசம். பெரிய உதவியொன்றை செய்துள்ளீர்கள். எனக்கு யாரும் இல்லை. நான் உடல்நிலை முடியாமல் எனது கடைசி காலத்தில் வாழ்கின்றேன். (பரிதாபமாக அழுகின்றார்) இதற்குமுன் இரு இராணுவ வீரர்கள் வந்து சிறு உதவிசெய்து விட்டு சென்றனர். அதற்குப்பின் வந்து முழுமையாக சுத்திகரிப்பில் நீங்கள்தான் ஈடுபட்டீர்கள்!

– கவிரத்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EDITORIAL
49, St. Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258 077 222 7569
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

## பாதிக்கப்பட்ட வர்த்தக சமூகம் தொடர்பில் நமது பணி

வெள்ளம் வடிந்துவிட்டது. நிவாரணப் பணிகளில் ஈடுபட்டவர்களும் ஓய்ந்து விட்டார்கள். வீடுகளில் இருந்து இடம் பெயர்ந்தவர்கள் தங்களது இருப்பிடங்களுக்கு வரத் தொடங்கிவிட்டார்கள்.

இனி எங்கிருந்து ஆரம்பிப்பது என்ற கேள்விக்குறியால் வளைந்து போயிருக்கிறது பாதிக்கப்பட்ட சமூகம். ஒரு வாரத்துக்கு மேல் நீர் தேங்கி இருந்ததால் அவர்களுடைய உடமைகள் அனைத்தும் மீளப்பயன்படுத்த முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. பூச்சியத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டிய நிலையில்தான் பெரும்பாலானவர்கள் இருக்கிறார்கள்.

வீடுகளில் பிள்ளைகளின் பாடசாலை உபகரணங்கள் அனைத்தும் அழிந்து போயிருக்கின்றன. உண்ணவும் உறங்கவும் பயன்படுத்தப்பட்ட அனைத்தும் வெள்ளத்தில் சேதமாகியிருக்கின்றன. இருப்பிடங்கள் பாழாகிப் போன நிலை. வாழ்வாதாரங்கள் அனைத்தும் துண்டிக்கப்பட்டிருக்கின்றன. கோடிக்கணக்கில் சொத்துக்களை இழந்து விட்டு நாடு தவிக்கிறது.

உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இருந்து வருகின்ற உதவிகள் பெரும்பாலும் நிவாரணங்களாகவே அமைந்துள்ளன. இவற்றில் எத்தனை வீதம் இதுவரை பாதிக்கப்பட்டவர்களைச் சென்றடைந்துள்ளன என்ற தகவல்கள் இதுவரை வெளியிடப்படவில்லை. நிவாரணத்தைத் தாண்டி நடைபெறுகின்ற விடயங்களில் இருப்பிடங்கள் அமைத்துக் கொடுப்பது தான் அதிக பட்ச நிவாரணமாக வழங்கப்படுகிறது. பாதிக்கப்பட்டவர்களுக்கென சீனா நட்புறவுக் கிராமம் என்ற பெயரில் மற்றுமொரு திட்டத்தை அமுல்படுத்த முன்வந்திருக்கிறது.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட காலங்களில் நிவாரணங்கள் கிடைத்தாலும், வீடுகள் சுத்திகரிக்கப்பட்டு மீளக்குடியமர்வதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டாலும் இனிமேல் வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்கான வழிவகைகள் இன்றித் தவிக்கும் ஏராளமான மக்களுக்கு என்ன செய்வது என்பது தொடர்பில் யாரிடமும் பதில் இல்லாத நிலையே காணப்படுகிறது.

வெல்லம்பிட்டி பகுதி கொள்கலன்கள் தரித்து நிற்கின்ற பகுதி. நிறைய களஞ்சிய சாலைகள் இந்தப் பகுதியிலே காணப்படுகின்றன. இந்தக் களஞ்சியசாலைகளில் எல்லாம் தண்ணீர் தேங்கி நின்று களஞ்சியப் பொருட்களை நாசமடையச் செய்திருக்கின்றது. காலம் காலமாக சிறுகச் சிறுகச் சேமித்து அல்லது கடன் வாங்கி நடத்தப்பட்டுக் கொண்டிருந்த வியாபாரங்கள் வெள்ளத்தோடு மூழ்கிவிட்டிருக்கின்றன. கோடிக் கோடியாக கையிலே பணம் புரண்டவர்கள் இன்று ஒட்டாண்டியாகியிருக்கிறார்கள்.

பெரியதொரு வர்த்தக சமூகம் வெள்ளத்தினால் நடுத்தெருவுக்கு வந்திருக்கிறது. கடனை அடைக்க முடியாமலும் நஷ்டத்தை ஈடுசெய்ய முடியாமலும் மானத்தைக் காத்துக் கொள்ள வேண்டி திக்கு முக்காடுகிறது. இதனுடைய பாதிப்பு சமூகத்தின் பல்வேறு மட்டங்களையும் ஆட்டம் காணச் செய்யப் போகிறது.

நிவாரணங்களும், மீள்குடியமர்த்தல்களும் நிறைவடைந்துள்ள நிலையில் பாதிக்கப்பட்டுள்ள இந்த சமூகத்தின் பக்கம் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. இது தொடர்பில் சமூக மட்டங்களில் கலந்துரையாடல்கள் நடத்தப்பட வேண்டும். இவர்களது இழப்புக்களை ஈடுசெய்ய முடியாவிட்டாலும் மீளவும் தலை தூக்குவதற்கான ஆதாரமொன்றை இவர்களுக்கு வகுத்துக் கொடுக்க வேண்டும்.

முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்தவரையில் முன்வருகின்ற ரமழானுடைய காலப்பகுதியை இதற்கெனப் பயன்படுத்த முடியும். முஸ்லிம் சமூகத்துக்குள்ளால் பெறப்பட வேண்டிய ஸகாத் பணத்தை இம்முறை இந்தச் சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்காகப் பயன்படுத்த முடியும். இந்த வர்த்தக சமூகத்தைக் கட்டியெழுப்பும் நோக்கத்துக்கென்றே ஸகாத் திரட்டும்போது அதிகமான வர்த்தகர்கள் இதில் ஈடுபாடு காட்ட முடியும்.

நாளை தங்களுக்கும் இந்த நிலை வருவதிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக, ஸகாத் கடமையானவர்கள் இந்த விடயத்தில் ஆர்வத்துடன் முன்வர முடியும். ஒரு தேசிய அமைப்பு இந்த விடயத்தை முன்னெடுக்குமாக இருந்தால் மக்கள் நம்பிக்கையுடன் ஒத்துழைப்புத் தருவதற்கு முன்வருவதற்கு இடமிருக்கின்றது.

அனைத்தையும் இழந்து இடிந்து போயிருக்கின்ற இந்த வர்த்தக சமூகத்துக்கு, தமது இக்கட்டான நிலையில் தமக்குக் கைகொடுக்கின்ற சமூகம் முன்வருவமாக இருந்தால் இதே சமூகம், ஒட்டு மொத்த சமூகத்தினதும் விடிவுக்காக கைகொடுக்கின்றவர்களாக மாற முடியும். பணத்தால் பொருளால் கைகொடுப்பது போலவே வழிகாட்டல்கள், செயலூக்கப்படுத்தல்கள் போன்றவற்றின் ஊடாகவும் இவர்களுக்கு நாங்கள் உதவி செய்ய முடியும்.

தன்மானத்துடன் வாழ்ந்தவர்களை கையேந்த வைக்காமல் சமூகமாக முன்வந்து இவர்களுக்கு உதவி ஒத்தாசை புரிவதுதான் காலோசிதமானது.

# யுத்த வெற்றி கொண்டாடப்பட வேண்டிய ஒன்றல்ல

மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தினால் மே 18 ஆம் திகதி நடாத்தப்பட்டு வந்த யுத்த வெற்றிக் கொண்டாட்டம் எனும் இராணுவக் கண்காட்சியை நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டமை குறித்த கௌரவம் அரசாங்கத்துக்கு கிடைக்க வேண்டும். அது நாட்டின் சகவாழ்வு, இனங்களுக்கு மத்தியிலான நல்லிணக்கத்தை எதிர்பார்க்கும், தீவிரப்போக்கற்ற மக்களின் கோரிக்கை நிறைவேற்றப்பட்ட ஒரு சந்தர்ப்பமாக அமைகிறது.

மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட குழுவினர் இத்தீர்மானம் காரணமாக மிகவும் கோபமடைந்தனர் என்பதைக் காண முடிந்தது. மே 18 ஆந் திகதி யுத்த வெற்றியைக் கொண்டாடுவதன் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டி மஹிந்த ராஜபக்ஷ ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டதோடு, அவரைப் பின்பற்றும் பிக்குகளும், அரசியல்வாதிகளும் அரசாங்கத்தின் அத்தீர்மானத்தினை விமர்சித்து ஊடகங்களுக்கு கருத்துக்களைத் தெரிவித்தனர்.

2009 மே 18 ஆந் திகதி மோதல் முடிவுக்கு வந்தாலும் அது ஒரு வெற்றியல்ல. அரசாங்கம் வெளிநாடொன்றிலிருந்து வந்த ஆக்கிரமிப்பாளர் குழுவொன்றுக்கு எதிராக யுத்தம் செய்யவில்லை. தமது உரிமைகளைக் கோரி பல தசாப்தங்களாகப் போராடி, இறுதியில் ஆயுத ரீதியாகத் தமது அதிருப்தியை வெளிப்படுத்திய எமது நாட்டின் சகோதர மக்கள் பிரிவினரோடுதான் அந்த யுத்தம் மேற்கொள்ளப்பட்டது.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் போன்றே இப்போதும் நாம் கூறுவது நடுநிலையான சாட்சியாளர்கள் இல்லாமல் மேற்கொள்ளப்பட்ட அந்த யுத்தம் நியாயமானது அல்ல என்பதாகும். மே 18 ஆந் திகதியாகும்போது தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் ஆயுதங்களைக் கொண்டே அடக்கப்பட்டாலும், அதனை வெற்றியாகக் கொண்டாடுவதற்கு எந்த வகையிலும் அது பொருத்தமில்லை. ஏனெனில், தோற்கடிக்கப்பட்டனர் என்று கூறப்படுபவர்களும் எம்மவர்களே.

இதனைப் பாரிய வெற்றியாக்கி, இதனைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு, அதன் மூலம் பொதுமக்களின் கண்களில் மண்ணைத் தூவி, அதன் ஊடாக தன்னுடையதும் தனது குடும்பத்தினதும் அதிகார அரசியல் நிகழ்ச்சி நிரலை முன்கொண்டு செல்வதே மஹிந்த ராஜபக்ஷவுக்குத் தேவையாகக் காணப்பட்டது.

யுத்தத்தின் பின்பு அவசரமாக ஜனாதிபதித் தேர்தலையும், பொதுத் தேர்தலையும் நடாத்தியது மாத்திரமன்றி, 18 ஆவது அரசியலமைப்பு சீர்திருத்தத்தினை பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொண்டதன் ஊடாகவும் மஹிந்தவின் அந்த உள்நோக்கம் சிறப்பாக வெளிக்கொணரப்பட்டது. அதன் பின்பு ஒவ்வொரு வருடமும் சுதந்திர தினத்திற்கு மேலதிகமாக யுத்த வெற்றிக் கொண்டாட்டமொன்றைப் பாரியளவான இராணுவத்தினரின் பங்குபற்றலுடன் அவர் நடாத்தி வந்தார். அதன் ஊடாக ஒவ்வொரு வருடமும் பெரும்பான்மை இனத்தினர் மத்தியில் ஆக்கிரமிப்புத் தன்மை வாய்ந்த தேசிய உணர்வுகள் தூண்டப்பட்டதோடு, இனக் குழுக்கள் மத்தியிலான சமாதானம், நல்லிணக்கத்திற்கான வாயில்கள் மேலும் இறுக்கமாக மூடப்பட்டு வந்தன.

இராணுவக் கண்காட்சிகளை நடாத்தி, பெருமை பேசிக் கொண்டு தெற்கில் வெற்றியைக் கொண்டாடும்போது அந்த மோதலின் பங்குதாரரான வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் அது குறித்து எவ்வாறு சிந்திப்பர் என்பதை அவர் கருத்திற் கொள்ளவில்லை.

அதற்குப் பதிலாக யுத்தம் காரணமாக மரணத்தைத் தழுவிய தமது பிள்ளைகள், துணைவர்கள், உறவினர்கள், நண்பர்களைத் தனிப்பட்ட முறையில் நினைவுகூரும் உரிமை கூட அவர்களிடமிருந்து பறிக்கப் பட்டிருந்தது.

தேசியவாதத் தெற்கினால், ''நாம் யுத்த வெற்றியைக் கொண்டாடினால் தமிழ் மக்களுக்கு எவ்வாறு மனவேதனை ஏற்படும்?'' என்ற காட்டுமிராண்டித் தனமான கேள்வி கேட்கப்பட்டது. அதற்கான பதிலும் அவர்களிடமே காணப்படுகிறது. ''நாம் யுத்த வெற்றியைக் கொண்டாடும்போது தமிழ் மக்களுக்கு மனவேதனை ஏற்பட வாய்ப்பில்லை. நாம் தீவிரவாதிகளை மாத்திரமே அழித்தோம்'' என்பது அவர்களது பதிலாகக் காணப்பட்டது.

2016 ஆம் ஆண்டில் அரசாங்கம் யுத்த வெற்றியைக் கொண்டாடும் இராணுவ நிகழ்வுகளை ரத்துச் செய்த பின்பு, இன்று மஹிந்த ராஜபக்ஷ குழுவினரால் அந்த கேள்வியே கேட்கப்படுவதோடு, அவர்களது பதிலும் அதுவாகவே காணப்படுகிறது.

எனினும், யுத்த வெற்றியைக் கொண்டாடும்போது நீங்கள் எதனை உணர்கிறீர்கள் என்பதை வினவ வேண்டியது தமிழ் மக்களிடம் அல்லவா? பதில் வழங்க வேண்டியவர்களும் அவர்கள் அல்லவா?

தற்போது நாம் செய்ய வேண்டியது மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அதி தீவிர இராணுவவாதிகளின் தேவைகளை நிறை வேற்றி, நட்டின் இனங்களுக்கு மத்தியில் பகைமையை அதிகரிக்கும் நகைப்புக்கிடமான வெற்றிக் கொண்டாட்டங்களை நடாத்துவது அல்ல. இன்றைய தேவை நாடு தற்போது காணப்படும் கவலைக்கிடமான நிலையிலிருந்து மீட்டு நல்லிணக்கத்தை நோக்கி அதனை வழிநடாத்துவதாகும்.



நல்லிணக்கம் தொடர்பாக ராஜபக்ஷவினரிடம் ஒரு திட்டமோ, தேவையோ இல்லை. எனினும் தொலைநோக்கும், வேலைத் திட்டமும் அரசாங்கத்திடமே காணப்பட வேண்டும். யுத்த வெற்றிக் கொண்டாட்டத்தை ரத்துச் செய்து, மரணித்தோரை நினைவுகூரும் வகையில் அதனை மாற்றி, யுத்தம் காரணமாக அழிவுற்ற தமக்கு நெருக்கமானவர்களின் உயிர்களை நினைவுகூர்வதற்கு வடக்கு கிழக்குத் தமிழ் மக்களுக்கு சந்தர்ப்பம் வழங்குவதும் அந்த நல்லிணக்கத்திற்கான பயணத்தில் முதல் எட்டு மாத்திரமே. அதனை விடவும் துணிச்சலான, கனகச்சிதமான தீர்மானங்களை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று எதிர் பார்க்கிறோம்.

ராவய ஆசிரியர் தலைப்பு - 2016.05.29
தமிழில் - அபூ பத்ஹான், ஹேனேகெதர

## வாக்காளர் பதிவில்... (1ம் பக்கத் தொடர்)

இது தொடர்பில் அந்த நிறுவனத்தின் தலைவர் சிராஜ் மஷ்ஹூர் தெரிவிக்கையில், வாக்காளர் பதிவில் எமது சமூகம் பெரிதாக அக்கறை காட்டுவதில்லை. வாக்காளர் பதிவில் உள்ள முக்கியத்துவத்தை அறியாமல் இருப்பதும் இதற்கு முக்கிய காரணமாகும். இதனால் பாதிக்கப்படுவது தாம்தான் என்பதை அவர்கள் உணர மறுக்கின்றனர். தம்மை வாக்காளர்களாக பதியாவிட்டால் தேர்தலில் வாக்களிப்பது மட்டுமே பாதிக்கப்படும் என பலர் நினைக்கின்றனர். ஆனால் வாக்களிக்கும் உரிமையை இழப்பதால் கல்வித்துறை, தொழில்வாய்ப்பு, சுகாதாரம், காணி உரிமை என அனைத்திலும் உரிமைகளைப் பெறுவது பாதிக்கப்படுகிறது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே ஒவ்வொருவரும் தம்மை வாக்காளர்களாக பதிவு செய்வது அவசியமாகும். வாக்காளர்களாக பதிவு செய்ய தகுதி பெற்ற அனைவரும் அதனை பதிவு செய்வதை உறுதிசெய்வதற்காக அவ்வப்பிரதேசங்களில் உள்ள சிவில் நிறுவனங்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். குறிப்பாக வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்துள்ளவர்கள் தொடர்பில் கூடுதல் கரிசனை செலுத்தப்பட வேண்டும் எனவும் CDR இன் தலைவர் கேட்டுக் கொண்டார்.

## அரசியலமைப்பு... (1ம் பக்கத் தொடர்)

அமைவது போன்றன மக்கள் அரசியலமைப்பில் எதிர்பார்க்கும் விடயங்களாக இருந்ததாக குழுவின் தலைவர் சட்டத்தரணி லால் விஜேநாயக்க தெரிவித்தார்.

சிவில் அமைப்புக்களும் பொதுமக்களும் அரசியலமைப்பு விடயத்தில் கருத்துத் தெரிவிப்பதற்கு வெகுவாக ஆர்வம் காட்டினார்கள். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை முற்றாக ஒழிக்க வேண்டும் என பெரும்பாலானவர்கள் தெரிவித்துள்ளனர். நீண்டகாலமாகப் புரையோடிப் போயிருக்கும் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளைத் தீப்பதற்கு, அர்த்தமுள்ள வகையில் அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும் என பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

குழுவினர் முன்வைத்த அறிக்கையை மூன்று மொழிகளிலும் www.yourconstitution.lk என்ற இணையத்தளத்தில் கண்டு கொள்ளலாம்.

## முஸ்லிம்களை... (1ம் பக்கத் தொடர்)

அதனுடன் மீள்குடியேறுகின்ற சிங்களக் குடும்பங்களுக்காக 5543 வீடுகளும் நிர்மாணித்துக் கொடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். இதுவரை யாழ்ப்பாணத்தில் மீள்குடியேறுவதற்காக 2108 குடும்பங்கள் பதிவு செய்துள்ளதாகவும், இவர்களுள் 503 குடும்பங்களே மீளக்குடியேறியுள்ளார்கள் எனவும் எஞ்சியிருப்பவர்களில் 300 க்கும் குறைவானவர்களே வீட்டுத் திட்டங்களுக்காக யாழ் பிரதேச செயலகத்துக்கு விண்ணப்பித்திருக்கிறார்கள் எனவும் யாழ்ப்பாண பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

தற்போது மீள்குடியேற்றத்துக்காக பதிவு செய்துள்ள குடும்பங்கள் வீட்டுத் திட்டங்களுக்காக விண்ணப்பிக்க முன்வரவேண்டும் என்றும், காணிகள் தேவைப்படுவோர் அவற்றுக்காக விண்ணப்பிக்க முன்வர வேண்டும் என்றும், இந்த விடயத்தில் யாழ்ப்பாண முஸ்லிம்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்றும் வடமாகாண சபை உறுப்பினர் ஐயூப் அஸ்மின் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## முதலமைச்சருக்குத்... (1ம் பக்கத் தொடர்)

எனவே முதலமைச்சர் ஒருவருக்கு எதிராக தடை விதிப்பதற்கு எந்தவொரு அமைச்சுக்கும் படையினருக்கும் அதிகாரம் கிடையாது. இராணுவம் என்பது அரசாங்கத்தின் ஒரு திணைக்களமாகும். முதலமைச்சர் பதவி என்பது மக்கள் தெரிவு செய்வதாகும். இச்சம்பவம் தொடர்பாக கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் ஜனாதிபதியிடமும் பிரதமரிடமும் எழுத்து மூலம் மன்னிப்புக் கேட்டுள்ளதோடு கவலையையும் தெரிவித்துள்ளார்.

[illegible] படையினர் விதித்த தடையை ஜனாதிபதி நீக்கியுள்ளார். அத்தோடு கிழக்கு மாகாண முதலமைச்சரின் சம்பவம் தொடர்பில் அவர் சார்ந்த கட்சியும் அரசியல் நாகரிகத்துடன் நடந்து கொண்டது என அவர் மேலும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஊழல் குற்றச்சாட்டுகள்: ராஜபக்ஷாக்களை காப்பாற்றி வருவது யார்?



நல்லாட்சி அரசாங்கம் அமைக்கப்பட்டு 16 மாதங்கள் கடந்த நிலையில், மைத்திரி அரசாங்கத்தின் வாக்குறுதிகள் மீதான மக்கள் நம்பிக்கை வெகுவாகக் கலைந்து வருகின்றது. ஊழல் பேர்வழிகளைத் தண்டிப்போம் என்ற மைத்திரியின் வாக்குறுதி இதுவரை நிறைவேற்றப்படவில்லை. மறுதலையாக அதனை மீறும் வகையிலான நடவடிக்கைகளில் அரசு இறங்கியுள்ளது.

பொலிஸார், சட்டமா அதிபர் திணைக்களம், விசாரணைக் குழு என்பன மாறி மாறி ஒருவரை ஒருவர் குற்றம் சுமத்தி வருகின்றனர். விசாரணைகளின் தாமதத்திற்கு இவைதான் காரணம் என்று மக்களை இதற்கு மேலும் ஏமாற்ற முடியாது.

அமைச்சரவையில் இடம்பெறும் ராஜித சேனா ரத்ன, சம்பிக்க ரணவக்க, அர்ஜுன ரணதுங்க, சரத் பொன்சேகா ஆகியோர் சமீபத்தில் அமைச்சரவைக்கு சமர்ப்பித்துள்ள கடிதமொன்றில், இவ்விவகாரத்தை அமைச்சரவைக்கு உணர்த்தியுள்ளனர்.

ராஜபக்ஷ அரசாங்கத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் எல்லையற்ற ஊழல் மற்றும் நிதி முறைகேடுகள் குறித்து 2015 ஜனவரி முதல் 2016 ஜனவரி வரை பல்வேறு அரச நிறுவனங்கள் மீதும் ராஜபக்ஷாக்கள் மீதும் புகார்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆயினும், முறைப்பாடுகள் குறித்து இதுவரை முழுமையாக நடவடிக்கை எடுக்கப்பட்ட எந்தவொரு வழக்கும் பதிவாகவில்லை.

சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுவதற்கும் ஊழல் மோசடிகளை முற்றாக ஒழிப்பதற்கும் நல்லாட்சியை நிறுவுவதற்கும் ஜனநாயகத்தை நிலைநாட்டவும் சுற்றாடல், சமூகம், பொருளாதாரம் ஆகியவற்றில் சமூக நீதியை நிலைநாட்டவுமே மைத்திரிக்கு மக்கள் ஆணை வழங்கப்பட்டது. பாராளுமன்றத் தேர்தலிலும் அந்த மக்கள் ஆணை மீள வலியுறுத்தப்பட்டது. எனினும், ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல் மேடைகளில் ரணிலும் மைத்திரியும் வாய் கிழியக் கத்திய அளவுக்கு இங்கு எதுவும் நடந்துவிடவில்லை.

ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுர குமார குறிப்பிடுவது போன்று, மைத்திரியின் நல்லாட்சியில் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது போலவே அரசியல் காட்சிகள் நடந்தேறுகின்றன. ரணில் ஒருமுறை பாராளுமன்றத்தில் சொன்னது போல மஹிந்தவின் மூலமே நாம் அதிகாரத்திற்கு வந்தோம். ஆதலால் நாம் அவரைப் பாதுகாப்போம் என்ற வாசகம் உண்மைப்பட்டு வருகின்றது.

முன்னைய ஆட்சி குறித்து காரசாரமான நிலைப்பாட்டைக் கொண்டிருந்த இந்த நான்கு அமைச்சர்களும் சமர்ப்பித்துள்ள கடிதத்தில் பல்வேறு விடயங்கள் உள்ளடங்கியிருக்கின்றன. அதன் சுருக்கம் வருமாறு.

விசாரணைகளின் முன்னேற்றங்கள் மந்த கதியில் உள்ளமை மக்களிடையே பெரும் மனக் கிலேசத்தை உருவாக்கியுள்ளது. முன்னைய அரசாங்கத்தில் இடம்பெற்ற பாரிய லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரித்து வழக்குகளை முடிவுக்குக் கொண்டு வருவதில் ஏற்பட்டுள்ள தாமதம் குறித்து பொது மக்களிடையே சந்தேகம் எழுந்துள்ளது.

முதலாவது, 2015 ஜனவரி 08 இற்கு முன்னர் இடம்பெற்ற பாரிய ஊழல் மோசடி பற்றிய விபரங்கள் தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் நன்கு நிறுவப்பட்டுள்ளன. எனவே, குற்றவாளிகளைத் தண்டிப்பதில் அரசாங்கம் காட்டும் தாமதம் ஊழல் மோசடிக்காரர்களுக்கும் ஊழல் மோசடி தொடர்வதற்கும் அரசாங்கம் ஆதரவளிக்கின்றது என்ற கருத்தையே மக்கள் மத்தியில் உருவாக்குகின்றது. ஊழல் மோசடிக்காரர்களைக் கண்டுபிடிப்பதிலும் மோசடிகள் இடம்பெற்று வருவதாக சிவில் சமூகம் சந்தேகித்து வருகின்றது.

இரண்டாவதாக, முன்னாள் ஜனாதிபதியின் கீழ் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல், மோசடி தொடர்பான தகவல்கள் அனைத்தும் பொய்யானவை என்று மக்கள் நம்பத் தொடங்குகின்ற ஓர் நிலை இதன் மூலம் உருவாக்கப்படுகின்றது. இது அரசாங்கத்திற்கு ஒரு சவாலாக மாறி விடும்.

மூன்றாவது, முன்னாள் ஜனாதிபதியும் அவரது உயர் அதிகாரிகளும் எந்தக் குற்றமும் இழைக்கவில்லை. ஊழல் மோசடிகளிலும் ஈடுபடவில்லை. நல்லாட்சி அரசாங்கம் மேற்கொள்வதெல்லாம் அவர்கள் மீதான வெறும் அரசியல் பழிவாங்கலே என்ற எண்ணம் பொதுமக்களிடையே பரவி வருகின்றது. ஏற்கனவே இது போன்ற கருத்தை நல்லாட்சி அரசாங்கத்தின் எதிரிகள் -அதாவது மஹிந்தவின் பக்தகோடிகள்- பிரச்சாரம் செய்து வருகின்றனர். ஊழல் பேர்வழிகளை சட்டத்தின் முன் நிறுத்துவதில் அரசாங்கம் காட்டும் தாமதத்தை, தனக்கெதிரான அரசியல் பழிவாங்கல்தான் எனக் காட்டுவதற்கு மஹிந்த முயன்று வருகின்றார்.

நான்காவது, குற்றச்சாட்டுக்கள் குறித்த விசாரணைகள் அனைத்தும் அரசியல் உள்நோக்கம் கொண்டவைதான் என மக்கள் நம்பத் தொடங்கியுள்ளனர்.

ஐந்தாவது, சிறு சிறு ஊழல் சம்பவங்கள் குறித்து கடும் நடவடிக்கை எடுக்கப்படும் அதேவேளை, பெருமளவிலான ஊழல் மோசடிகளில் ஈடுபட்டோர் சட்டத்திலிருந்து தப்பித்து வருவது நல்லாட்சி அரசாங்கம் குறித்த நம்பிக்கையீனத்தையே மக்கள் மத்தியில் உருவாக்குகின்றது.

ஆறாவது, இந்நிலை தொடர்ந்தால் ஊழல் பேர்வழிகளை வெளிப்படுத்துவதற்கு சிவில் சமூகம் வீதிக்கு இறங்க வேண்டிய ஒரு நிலை உருவாகும். 2004-2014 இடைப்பட்ட 10 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் இலங்கையில் அனைத்து மக்களினதும் வீட்டு வருமானங்களின் எவ்வித அதிகரிப்பையும் கொண்டு வரவில்லை.

அரசாங்க புள்ளிவிபரங்களின்படி குறிப்பிட்ட சில தனிநபர்கள் அதன் மூலம் பயனடைந்துள்ளனர். நிதி மோசடி குறித்த சர்வதேச ஆய்வுகளின்படி கடந்த ஒரு தசாப்தத்தில் 20 பில்லியன் டொலர்கள் நாட்டிலிருந்து சட்டவிரோதமாக வெளிச்சென்றுள்ளது. அதேவேளை, முன்னைய அரசாங்கத்தினால் நாட்டின் தேசிய சொத்துக்கள் சூறையாடப்பட்டுள்ளன. இதன் சுமையை இப்போது அரசாங்கம் ஏற்றிருக்கின்றது. பொதுமக்களும் அதை சுமக்கத் தொடங்கியுள்ளனர்.

இந்த முறைகேடுகளுக்குப் பொறுப்பானவர்கள் இன்று இந்த அரசாங்கத்தை குற்றம்சாட்டி வருகின்றனர். முறைகேடுகளும் லஞ்ச ஊழல்களும் மிகக் கவனமாக சட்டத்தின் பிடியில் மாட்டிக் கொள்ளாத வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த வகையில் அமைச்சரவைக்கு பின்வரும் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுகின்றோம்.

1. ஜனவரி 2015 - ஜனவரி 2016 இடைக் காலத்தில் சிவில் சமூக நிறுவனங்களால் முன்னைய அரசாங்கத்தின் பல்வேறு நிறுவனங்கள் குறித்து செய்யப்பட்ட ஊழல் மோசடிகள் குறித்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை. இக் குற்றச்சாட்டுக்களின் சட்டத் தன்மை மற்றும் அவற்றுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்.

2. இலங்கை பொலிஸ் உட்பட ஊழல் மோசடி விசாரணைகளின் தற்போதைய முன்னேற்றம்

3. இவ்வழக்குகள் குறித்து சட்டமா அதிபர் திணைக்களத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய விபரங்கள்.

இவ்வாறு நான்கு அமைச்சர்களும் சமர்ப்பித்துள்ள கடிதம் நீண்டு செல்கின்றது.

அமைச்சரவையில் மஹிந்த ஆதரவு அமைச்சர்களும் இடம்பெற்றுள்ளதால் இவர்களின் கடிதம் எந்தளவு வலுவானதாக இருக்கும் என்பது ஐயத்திற்குரியதாகும். அமைச்சரவை கலந்துரையாடல்களையும் அதன் தீர்மானங்களையும் உடனுக்குடன் மஹிந்தவிற்குத் தெரிவித்து வரும் அமைச்சர் ஒருவர் அமைச்சரவையில் இடம்பெறுகின்றார். அவர் யார் என்பது ஜனாதிபதிக்குத் தெரியும் என ராஜித சேனாரத்ன அமைச்சரவைக் கூட்டமொன்றில் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியினர் முன்னைய அரசாங்கத்தின் ஊழல் குற்றச்சாட்டு குறித்து அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கத் தயாரில்லை என்பது போலவே நடந்து வருகின்றனர். ஜனாதிபதி மைத்திரியோ பிரதமர் ரணிலோ தேர்தல் காலங்களில் அனல் பறக்கக் கூச்சலிட்ட அளவுக்கு தற்போது இவ்விடயத்தை மேலெழுப்பதற்குத் தயாரில்லை. ஏனெனில், சில குற்றச்சாட்டுக்கள் மிகத் தீர விசாரிக்கப்பட்டு, சட்டமா அதிபர் திணைக்களத்தின் அங்கீகாரத்தையும் பெற்றுள்ளது. ஆனால், அவ்வாறான குற்றவாளிகள் கூட இதுவரைக் கைதுசெய்யப்படவில்லை.

42 வழக்குகள் முழுமையாக விசாரிக்கப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்டோருக்கு எதிரான சாட்சியங்கள் தெளிவாகப் பதிவுசெய்யப்பட்டு, குற்றவாளிகள் என்பதும் நிரூபணம் செய்யப்பட்டுள்ளனர். அதில் சட்டமா அதிபர் திணைக்களம் தனது அங்கீகாரத்தை வழங்கியுள்ள நான்கு முக்கியமான வழக்குகள் முற்றாக நிறைவடைந்துள்ளன. அதில் இரண்டுடன் முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ரோஹன ராஜபக்ஷ குற்றவாளியாக்கப்பட்டுள்ளார்.

(பக்.14)

# இலங்கையில் சுகாதாரப் பிரச்சினையாக வளர்ந்து வரும் கருக்கலைப்பு



இலங்கையில் கருக் கலைப்பு சட்டவிரோதமானது. தாயின் உயிருக்கு ஆபத்து எனக் கருதப்படும் பட்சத்தில் மாத்திரமே அது அனுமதிக்கப்படுகின்றது. 2007 இல் இலங்கை முழுவதும் இயங்கி வந்த கருக் கலைப்பு நிலையங்கள் அரசாங்கத்தினால் மூடப்பட்டன. அதில் UNFPA யினால் நிதி ஆதரவளிக்கப்பட்டு, மத்திய கொழும்பில் இயங்கி வந்த கருக் கலைப்பு நிலையமும் ஒன்று.

இலங்கையில் நாளாந்தம் சாராசரியாக 658 கருக் கலைப்பு சம்பவங்கள் நடைபெறுவதாக ஊடக அறிக்கையொன்று கூறுகின்றது. அதன்படி வருடாந்த கருக்கலைப்பு 240170 ஆகும். எவ்வாறாயினும், இவ் விபரம் 1990 இல் சமூகநல மருத்துவர் பேராசிரியர் லாலனி ராஜபக்ஷவினால் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்விலிருந்து பெறப்பட்டதாகும்.

வருடாந்தம் 250,000 பேர் கருக் கலைப்பில் ஈடுபடுகின்றனர் என்பது யதார்த்தமற்ற ஒரு தகவல் என வைத்தியர் கபில ஜயரத்ன கூறுகின்றார். ஏனெனில், இலங்கையில் வருடாந்தம் பிறக்கும் மொத்தக் குழந்தைகளின் எண்ணிக்கையே 350,000 ஆகும். எவ்வாறாயினும், கருக்கலைப்பு பற்றிய சரியான புள்ளிவிபரங்களைப் பெறுவது கடினமானது. சட்டவிரோதமானது என அறிவிக்கப்பட்டுள்ள போதும் மறைவான வழிகளில் கருக்கலைப்பு நடைபெற்று வருகின்றது.

2001-2014 வரையான காலப் பகுதியில் தாய்மார் இறப்பு வீதம் பற்றி மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் வேறு சில உண்மைகள் வெளிப்படுத்தப்பட்டன. உலகில் தாய் இறப்பு வீதம் குறைந்த நாடாக இலங்கை உள்ளது. வருடாந்தம் இயற்கையாகவோ திட்டமிட்டோ கருக் கலைப்புக்காக 45,000 தொடக்கம் 50,000 பேர் வரை வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுகின்றனர். 2014 இல் நாடு முழுவதும் 112 தாய்மாரே இறந்தனர்.

கிராமப் பகுதியிலிருந்து 65 வீதமும் தோட்டப் பகுதியிலிருந்து 10 வீதமும் தாய் இறப்பு சம்பவித்துள்ளது. இலங்கையில் தாய் இறப்புக்கான மூன்றாவது காரணமாகவே கருக் கலைப்பு அமைந்துள்ளது. வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்படுகின்றவர்களின் தொகையை கருத்திற் கொண்டு சுமார் 50,000 பேர் வருடாந்தம் தமக்கு அனாவசிமானவை என்று கருதுகின்ற கருக்களை கலைக்கின்றனர். இயற்கையாகவே தமது விருப்பத்[illegible] மாறாக கருக் கலைதலும் (Natural Abortion) இதில் உள்ளடங்கும். இந்தத் தகவலில் தனியார் வைத்தியாசலையில் கருக்கலைப்புக்கு அனுமதிக்கப்படும் தாய்மார்களின் தொகை உள்ளடங்கவில்லை.

அதேவேளை, சுயமாக கருக் கலைப்பு செய்கின்றவர்களும் உள்ளனர். கறுப்புச் சந்தையில் அதற்குத் தேவையான மருந்துகளை அவர்கள் பயன்படுத்துகின்றனர். சமீபத்தில் கருக் கலைப்பு குறித்து தீவிர ஆராய்ச்சிகளில் இறங்கியவர்கள் என வைத்தியர் கருக்ஷி அரம்பபொல, பேராசிரியர் லேலனி ராஜபக்ஷ ஆகியோர் கருதப்படுகின்றனர்.

2014 இல் இவர்களது ஆய்வு 'இலங்கையில் பாதுகாப்பற்ற கருக் கலைப்பு தொடர்பாக தீர்மானம் மேற்கொள்ளல்' என்ற பெயரில் வெளியிடப்பட்டது. 8 மாவட்டங்களில் 9 வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்ட 171 பெண்களை ஆய்வாளர்கள் நேர்கண்டுள்ளனர். பாதுகாப்[illegible] அவர்களில் 46 வீதமானோர் இரண்டு தடவைக்கு மேல் கருக் கலைப்பாளர்களைச் சந்தித்துள்ளனர். 14 வீதமானோர் 5 தடவைக்கு மேல் கருக் கலைப்பாளர்களை -அதாவது வைத்தியர்களைச்- சந்தித்துள்ளனர்.

1000 முதல் 30,000 வரை இதற்கென அறவிடப்படுகின்றது. பல இடங்களில் பயன்படுத்தப்படும் ஆயுதங்கள் பொருத்தமற்றவை எனவும், மேலதிக வலியைத் தரக் கூடியவை எனவும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டோர் தெரிவித்துள்ளனர்.

தமது எதிர்கால நிலைப்பாடு என்னவென்று வினவப்பட்டபோது 14 வீதமானோர் தாம் அனாவசியமாகக் கருவுற்றால் அதனைக் கலைக்கவே விரும்புவதாகத் தெரிவித்தனர். 47.5 வீதமானோர் அடுத்த கட்டம் பற்றிய தீர்மானம் இதுவரை தெளிவாக இல்லை என அறிவித்தனர். கருக் கலைப்பில் ஈடுபடுகின்றவர்களில் அநேகமானோர் 25-29 வயதுக் குழுவினர் எனவும், 30 வயதுக்கு குறைவானவர்களே அதிகம் கருக் கலைப்பில் ஈடுபடுகின்றனர் எனவும் இந்த ஆய்வறிக்கை கூறுகின்றது. பெரும்பாலானவர்கள் திருமணம் செய்தவர்கள் எனவும், சிங்கள பௌத்தர்கள் எனவும் ஆய்வறிக்கை மேலும் தெரிவிக்கின்றது.

30 வயதாகும்போது கருவுறும் பெண்கள் அதிகம் கருக் கலைப்பை நாடுகின்றனர். அதற்கான பிரதான காரணங்களாக ஏற்கனவே போதுமானளவு குழந்தைகள் உள்ளதாகவும் கடைசிக் குழந்தை மிகக் குறைந்த வயதில் உள்ளதாகவும் குழந்தைகளை வளர்ப்பது கடினம் எனவும் பல்வேறு காரணங்கள் தெரிவிக்கப்பட்டன.

இந்த அபிப்பிராயங்கள் கருக்கலைப்பு இலங்கையில் நீடிக்கும் என்பதையே காட்டுகின்றது. குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளில் ஒன்றாகவே அது பலராலும் கருதப்படுகின்றது. ஆனால், தாயின் ஆரோக்கியத்திற்கு கருக் கலைப்பு பாதகமானது என்பதை அநேகர் புரிந்து கொள்ளவில்லை.

இதுவேளை பாலியல் பலாத்காரம், வல்லுறவு மற்றும் மாதவிடாய் சீர்குலைவு போன்ற காரணங்களை முன்னிறுத்தி அத்தகைய சூழ்நிலையில் கருக்கலைப்பை அனுமதிக்க வேண்டும், என்ற குரல்களும் ஒலித்து வருகின்றன.

பாலியல் துஷ்பிரயோகத்தால் கருவுறும் பெண்கள் குழந்தைப் பேற்றுக்குப் பின்னர் பாரிய மன அழுத்தத்திற்கும் உளநோய்களுக்கும் ஆளாவதனால் அவர்களது கருக்கலைப்பை அங்கீகரிக்க வேண்டும் என குருணாகல போதனா வைத்தியசாலையின் சிரேஷ்ட உள மருத்துவர் வைத்தியர் ஜிஹான் அபே வர்த்தன கூறுகின்றார்.

இலங்கையில் 1970 களிலும் 2000 களிலும் கருக் கலைப்பு தொடர்பான சட்டங்களில் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. இது குறித்த எதிரும் புதிருமான விவாதங்கள் முன்வைக்கப்பட்டும் வருகின்றன.

இலங்கையின் சமூகக் கட்டமைப்பிலுள்ள அடிப்படைப் பிரச்சினைகளை கவனத்திற் கொள்ளாது வெறுமனே சட்டத்தை மாற்றுவதனால் பிரச்சினை தீர்ந்து விடப் போவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸலாஹுத்தீன்

# வெள்ளத்தில் மூழ்கும் சமூக ஓடம்

அண்மைய வெள்ளப் பெருக்கு முஸ்லிம் சமூகத்தில் ஏற்படுத்திய பாதிப்புக்களிலிருந்து முஸ்லிம் சமூகம் மீண்டெழுவதற்கு பல வருடங்கள் பிடிக்கலாம். ஒவ்வொருவரும் இழந்த சொத்துக்களின் விபரம் இதுவரை கண்டறியப்படவில்லை. உண்மையில் கணக்கிடப்படுமிடத்து இது பல நூறு கோடிகளைத் தாண்டும் என்று மதிப்பிடப்படுகிறது. களத்திலே வழங்கப்பட்டுள்ள வெள்ள நிவாரணங்கள் இவர்களது இழப்புக்கு மத்தியில் சோளப்பொறியாகவே அமைய முடியும்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதில் எமது சமூகம் ஒரு படி மேலே இருந்ததாகத் தான் சொல்ல வேண்டும். பாதிக்கப்பட்டவர்களின் கருத்துக்களின்படி, தமது தேவைக்கும் அதிகமாகவே நிவாரணங்கள் வந்து குவிந்ததாக அவர்கள் தெரிவிக்கின்றனர். சிலர் மேலதிகமாகக் கிடைத்த நிவாரணங்களை பாதிக்கப்படாத தமது குடும்பத்தார்களுக்கு பங்கீடு செய்யும் அளவுக்கு நிவாரண வெள்ளம் பெருக்கெடுத்திருக்கிறது. சமைத்த உணவுப் பொதிகளில் சுவையானதை தெரிவு செய்து எடுத்து விட்டு சாதாரண உணவுப் பார்சல்களை ஒதுக்கிவிடும் அளவுக்கு வகை வகையான உணவுப் பார்சல்கள் கிடைத்திருக்கின்றன.

கட்டுமீறிய நிவாரணப் பணிகளை ஒருங்கிணைத்து தேவையானவர்களுக்கு தேவையானதை வழங்குவதில் இம்முறை பள்ளிவாசல்கள் காத்திரமான பணியைச் செய்திருக்கின்றன. இதையும் தாண்டி சில சமூகம் சார் அல்லது கொள்கை சார் நிறுவனங்கள் களத்தில் பணி செய்ய முனைந்ததால் சில சலசலப்புக்களும் கைகலப்புக்களும் கூட வெள்ளக் களத்திலே நடந்திருக்கின்றன.

முஸ்லிம் சமூகத்தில் இயங்கும் சில அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் களத்திலே இம்முறை வெள்ள அனர்த்தத்தின் போது பெரும் பணியாற்றியிருக்கின்றன. தமது இலட்சினைகள் பொறித்த ஆடை அணிகலன்களுடன் பனர்கள் விரித்து போட்டோக்களும் எடுத்து சமூக ஊடகங்களில் பரப்புரையும் செய்திருக்கின்றன.

இவர்களுக்கு நிதி உதவி வழங்குகின்ற அரபு நாட்டு தனவந்தர்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்காக, சமூகம் விரும்பாத போதும் இவ்வாறு போட்டோக்களும் வீடியோக்களும் இவர்களால் எடுக்கப்படுகின்றன. ஆடுகிற மாட்டை ஆடிக் கறந்தேனும் சமூகத்துக்குப் பால் வார்க்க வேண்டும் என்பது இவர்களது எதிர்பார்ப்பு.

அதே போல முஸ்லிம் சமூகத்தில் மலிந்து கிடக்கும் கொள்கை சார் அமைப்புக்களும் வரிந்து கட்டிக் கொண்டு களத்திலே கடும் பணியாற்றியிருக்கின்றன. இவர்களும் டீ ஷேர்ட்டுடனும் தொப்பியுடனும் களத்திலே தொழிற்பட்டது சில சச்சரவுகள் தோன்றக் காரணமாகவும் இருந்திருக்கின்றன. குழுவாக களத்திலே இயங்குகின்ற பொழுது தமது அடையாளத்தைப் பேணுவதற்காகவும் குழு உணர்வை அதிகரிக்கச் செய்வதற்காகவும் இவ்வாறான உத்திகள் பயன்படுத்தப்படுவதுண்டு.

இருந்த போதிலும் இதுவே சமூகத்தில் பிளவை ஏற்படுத்துகின்ற விதமாக பிரதிவிம்பம் எடுத்த சந்தர்ப்பங்களும் களத்திலே நடைபெற்றுள்ளன.

வெள்ள நிவாரணங்களின்போது மல்வானையில் நடந்த சில சம்பவங்கள் சமூக ஒழுங்கை மீள்பார்வை செய்யத் தூண்டியிருக்கின்றன. மல்வானை என்பது எல்லோரும் தெரிந்து வைத்திருப்பது போல இஸ்லாமிய அடிப்படையில் அமைந்த ஒரு சிந்தனைப் பிரிவின் ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசம். இங்கு தமது சிந்தனைப் பாரம்பரியத்தைத் தவிர்த்து ஏனைய இஸ்லாமியக் கொள்கைகள் ஊடுருவக் கூடாது என்பதில் இவர்கள் கவனமாக இருக்கிறார்கள். வெள்ள நிவாரணப் பணிகள் என்ற பெயரில் எந்தக் கொள்கைகளும் மல்வானையில் ஆதிக்கம் செலுத்த வந்துவிடுமோ என்கிற பயம் இவர்களை கவனமாக காய்நகர்த்த வைத்திருந்தது.

இம்முறை நிவாரணப் பணிகளின் போது நடைபெற்ற சம்பவங்களையும் இந்தப் பின்னணியிலேயே நோக்க வேண்டியிருக்கிறது. வெள்ளத்தினால் சூழப்பட்டவர்களை மீட்பதற்காக, மல்வானையில் மேலாதிக்கம் செலுத்தும் சிந்தனைப் பிரிவுடன் முரண்படுகின்ற ஒரு ஜமாஅத்தினர், படகுகளை கொண்டு வந்தபோது, செத்தாலும் தாம் அதிலே ஏறப் போவதில்லை என ஊர்வாசிகளில் சிலர் அடம்பிடித்துள்ளனர். சவூதி அரசாங்கம் வழங்கிய உணவுப் பார்சல்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன. பின்னர் அவை சிங்கள ஊர்களில் விநியோகிக்கப்பட்டிருக்கின்றன.

கொலன்னாவ, வெல்லம்பிட்டிய என பல பிரதேசங்களும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட போதும், மல்வானையின் பெரும்பாலானவர்களின் நாயகம் அவர்கள் மல்வானைக்கு பிரத்தியேக விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். நாயகம் அவர்கள் அங்கிருந்து புறப்பட்டவுடன், காத்தான்குடியில் இருந்து ஒரு லொறியில் நிவாரணப் பொருட்களை கொண்டு வந்து விநியோகித்த மற்றுமொரு (பக்.14)

# முஸ்லிம் சமூகத்தின் தன்னார்வத் தொண்டர்களின் தியாகம் அளப்பரியது

MFCD தலைவர் ஹனான் ஹுஸைன்

அனர்த்தம் என்பது ஒரு அசாதாரண நிகழ்வாகும். இது பாரிய சேதங்களை உண்டு பண்ணக் கூடியது. சம்பந்தப்பட்டவர்களால் மாத்திரம் இதற்குத் தீர்வு காண முடியாது. தேசிய, சர்வதேச உதவிக் கரங்கள் இவர்களை நோக்கி நீட்டப்பட வேண்டும்.

அந்த வகையில் இம்முறை வெள்ள அனர்த்தத்தின்போது பாதிக்கப்பட்டவர்களுக்காக எமது சமூகத்தினர் தாமாக முன்வந்து அர்ப்பணத்துடன் செய்த பணிகளை நாங்கள் பாராட்டியாக வேண்டும் என கலாசாரத்துக்கும் அபிவிருத்திக்குமான முஸ்லிம் நிறுவனத்தின் (MFCD) தலைவர் ஹனான் ஹுஸைன் தெரிவித்தார்.

இடர்குறைப்புக்கும் மீட்புப் பணிக்குமான ஆசிய வலையமைப்பின் (ADRRN) அங்கத்துவம் பெற்றுள்ள MFCD நிறுவனம், இம்முறை வெள்ள அனர்த்தத்தின்போது மீட்புப்பணி, நிவாரண உதவி, மீளக் குடியமர்வதற்கான சுத்திகரிப்புப் பணி என அனைத்திலும் ஈடுபட்டிருந்தது. தேசியத் தலைமைகளால் உருவாக்கப்பட்ட R.C.C அமைப்பின் கீழ் இது வெல்லம்பிட்டியவில் களப் பணியகத்தை நிறுவித் தொழிற்பட்டது. தேசிய ஷூறா சபையிலும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் கவுன்ஸிலிலும் இந்நிறுவனம் அங்கத்துவம் பெற்றுள்ளது.

நாடு முழுவதிலும் இருந்து வந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொண்டர்கள் மிகவும் அர்ப்பணத்துடனும் தியாகத்துடனும் உழைத்தார்கள். இன மத பேதமின்றி நாட்டின் அனைத்துத் தரப்பு மக்களதும் கஷ்டங்களைக் களைவதற்காக தூர இடங்களில் இருந்தெல்லாம் வந்து கடுமையாக கஷ்டப்பட்டார்கள். இவர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, இனி வரும் காலங்களிலும் சமூகத்துக்காக தொடர்ந்து உழைப்பதற்கு இதுபோல முன்வருமாறு அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறோம் என ஹனான் ஹுஸைன் மேலும் தெரிவித்தார்.

தொண்டர்களின் விபரம்

| | |
|---|---|
| பேருவலை | 287 |
| காலி | 241 |
| அட்டுளுகம பத்ரியா பாடசாலை | 116 |
| வரகாபொல தாருல் ஹஸனாத் | 112 |
| புளிச்சாக்குளம் | 88 |
| சம்பொல | 76 |
| குருநாகல | 74 |
| மூதூர் | 64 |
| தர்கா நகர் | 55 |
| கெகுனுகொல்ல இர்பானியா அரபுக் கல்லூரி | 47 |
| அக்கரைப்பற்று | 43 |
| எஹட்டிமுல்ல | 42 |
| கந்தளாய், முள்ளிப்பொத்தான | 42 |
| ஜாமிஆ நளீமியா | 36 |
| புல்மோட்டை | 35 |
| அக்குரணை | 33 |
| திக்வெல்ல | 30 |
| கிண்ணியா | 22 |
| பலாங்கொட | 20 |
| பாதிஹ் கல்வி நிலையம் | 20 |
| கலகெதர | 19 |
| கெலிஓய | 18 |
| சம்மாந்துறை | 18 |
| மல்வான | 17 |
| பொகவந்தலாவ | 16 |
| தெஹிவல | 14 |
| ஒலுவில் | 14 |
| பாணந்துறை | 14 |
| பலாந்தொட்ட | 12 |
| தல்கஸ்பிட்டிய | 12 |
| கல் எலிய | 10 |
| சியம்பலாகஸ்கொடுவ | 10 |
| கஹட்டோவிட்ட | 7 |
| மாத்தறை | 7 |
| திருகோணமலை ஜமாலியா | 5 |
| வெலிமட | 5 |
| ரம்புக்கன | 4 |
| Omsed | 3 |
| ரிபாத் | 1 |
| மொத்தம் | 1689 |
| நிர்வாகம் (கொழும்பு...) | 232 |
| முழு மொத்தம் | 1916 |

01.06.2016 வரை சுத்தி கரிக்கப்பட்டவைகளின் விபரம்

| | |
|---|---|
| வீடுகள் | 523 |
| [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] |
| கடைகள் | 17 |
| பாதை - மீட்டரில் | 1540 |
| பாடசாலை | 1 |
| மின்சார திருத்த வேலைகள் | 15 |
| கிணறுகள் | 20 |

01.06.2016 வரை

தங்களது உழைப்புக்கு மேலாக இந்தச் சுத்திகரிப்புகளுக்குத் தேவையான உபகரணங்கள், தொண்டர்களுக்குத் தேவையான உணவு வகைகள், மருந்து வகைகள், ஏனைய செலவுகளுக்கென நிதியுதவி செய்த தனவந்தர்களுக்கும் நிறுவனங்களுக்கும் MFCD யின் தலைவர் நன்றி தெரிவித்தார்.

| | |
|---|---|
| மீட்புப் பணி | 03 படகுகள் 05 நாட்கள் மல்வான, வெல்லம்பிட்டி |
| சமைத்த உணவு | 3500 பொதிகள் |
| உலர் உணவு | 580 பொதிகள் |
| மருத்துவ முகாம் | 5 முகாம்கள் - 1203 பயனாளிகள் |
| பாட உபகரணப் பொதி | 150 மாணவர்கள் |

இந்தப் பணியை சிறப்பாகச் செய்வதற்கு அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா, தேசிய ஷூறா சபை, முஸ்லிம் கவுன்ஸில் ஒப் ஸ்ரீலங்கா, கொழும்பு மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனம் ஆகியன எமக்கு வழங்கிய ஆலோசனைகள், வழிகாட்டல்களுக்காக நாங்கள் அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் [illegible] ஹனான் [illegible] மேலும் தெரிவித்தார்.




இம்தியாஸ் பாக்கிர் மாக்கார்

## எமது தவறுகள் மீள விசாரிக்கப்பட வேண்டும்

இன்று 18 வீதமான முஸ்லிம்கள் சிறையில் உள்ளார்கள். இலங்கையிலுள்ள முஸ்லிம்களின் சதவீதத்தை காட்டிலும் இத்தொகை அதிகம். இந்நிலைக்குரிய காரணம் என்ன? இவர்கள் எந்தப் பின்னணியில் கைதிகளானார்கள்? இவர்கள் எத்தகைய குற்றச் செயல்களை இழைத்துள்ளார்கள்?

எமது சமுகத்திலுள்ள உளவியலாளர்கள் இது விடயம் தொடர்பில் ஆழமான ஆராய்ச்சிகளில் ஈடுபட வேண்டும். சமுக மட்டத்தில் பரந்துபட்ட கலந்துரையாடல்களை தோற்றுவிக்க வேண்டும். இவற்றுக்கூடாக சமூக விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான் எமக்கு இவ்விவகாரத்தின் தாற்பரியத்தை விளங்க முடிகிறது. வெறுமனே பயான் பண்ணுவதில் மாத்திரம் அர்த்தமில்லை.

எமது சமூகத்தில் அதிகமாக விவாரத்துகளும் இடம்பெறுகின்றன. இவை குறித்தும் ஆழமாக ஆராயப்பட வேண்டியுள்ளது. வைத்தியர்களையும் பொறியியலாளர்களையும் உருவாக்குவதற்கு புலமைப் பரிசில்களை வழங்க எமது சமூகத்தில் ஏகப்பட்ட அமைப்புக்களும் தனிநபர்களும் உள்ளனர். ஆனாலும் உயர் மனிதப் பண்புகளுடன் கூடிய துறைசார் வளவாளர்களை உருவாக்க எவரும் முன்வருவதில்லை.

தொல்பொருளியல், வரலாற்றுத்துறைகளை எடுத்து நோக்கினால் இந்நிலையை கண்டுகொள்ள முடிகிறது. வரலாற்று ரீதியிலான ஆவணமொன்றை தயாரிப்பதற்கோ அல்லது வரலாற்றுக் கட்டுரையொன்றை வடிப்பதற்கோ நாம் லோனா தேவராஜா போன்றவர்களுடைய ஆய்வுகளையே ஆதாரமாகக் கொள்கிறோம். எமது சமூகத்தில் எத்தனை வரலாற்றிசிரியர்கள் உள்ளார்கள்?

போர்த்துக்கேயர்கள் வருவதற்கு முன்னர் நாம் நாட்டிற்கு வழங்கிய பங்களிப்புக்கள் என்ன? போர்த்துக்கேயர்களுடைய காலத்தில் முஸ்லிம்கள் இலங்கைக்கு செலுத்திய பங்களிப்புக்கள் என்ன? இவை ஆராயப்பட வேண்டியுள்ளன. வர்லாற்றில் நாம் விட்ட தவறுகளை மீள்வாசிப்புக்கு உட்படுத்த வேண்டும். அதற்கூடாக எமது சமகால நிலைமைகளை புரிந்துணர்வோடு முன்னகர்த்த முடிகிறது.

வெள்ளையின மக்களின் ஆதிக்கமுள்ள லண்டன் நகரின் மேயராக ஒரு முஸ்லிம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். மக்கள், உணர்வுகளை விடவும் அறிவுக்கு முன்னுரிமை வழங்கிச் செயற்பட்டதொரு நிகழ்வாக லங்காதீப பத்திரிகை இவ்விடயத்தை ஆசிரியர் தலையங்கத்திற்கூடாக மேற்கோள்காட்டியுள்ளது.

முழு உலகமும் இன்று ஐசிஸ் பற்றியும் முஸ்லிம் பயங்கரவாதம் பற்றியும் பேசிக்கொண்டிருக்கும் இத்தருணத்தில் லண்டன் நகரில் வரலாற்றில் எந்தவொரு மேயருக்கும் கொடுக்காத வாக்குகளை அளித்து சாதிக்கானை லண்டன் நகர பிதாவாக தெரிவு செய்திருப்பதன் மூலம் அம்மக்கள் உலகிற்கு வழங்கியுள்ள செய்தி தொடர்பிலேயே லங்காதீப ஆசிரியர் தலையங்கம் இலங்கை மக்களுக்கும் படிப்பினை பெருமாறு சுட்டிக்காட்டியுள்ளது.

சாதிக்கானின் அரசியல் கொள்கைகள் தொடர்பில் எமக்கு மாற்றுக் கருத்துக்கள் இருக்கலாம். ஆனால் பிரித்தானிய மக்கள் அவரை தமது நாட்டுப் பிரஜையாக ஏற்றுக்கொண்டதொரு சந்தர்ப்பமாகவே நான் அதனை காண்கிறேன். இதுவே முக்கியம். இந்நிகழ்வு எமது சமூகத்திற்கும் ஒரு செய்தியைச் சொல்கிறது. நாம் வாழும் நாட்டின் பிரஜைகள் என்ற உணர்வு எம்மத்தியில் உருவாக வேண்டும். நாம் எத்தகைய மதங்களைப் பின்பற்றினாலும் அவ்வுணர்வு எம்மில் என்றும் மேலோங்கியிருக்க வேண்டும். அப்போதுதான் எம்மில் நல்லிணக்கமும் சக வாழ்வும் நீடிக்கும்.

லங்காதீப ஆசிரியர் தலையங்கத்தின் இறுதிப்பகுதி இவ்வாறுள்ளது. சாதிக்கானின் கையில் இரண்டு தேசியக் கொடிகள் இல்லை. அவர் ஒருபோதும் எமது நாடான பிரித்தானியாவை தோற்கடித்து பாகிஸ்தான் வெற்றிபெற்றதென்று கூற மாட்டார் என்பதில் அம்மக்கள் எம்மை விட நம்பிக்கை பெற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இது இந்நாட்டிலுள்ள பெரும்பான்மையின மக்கள் மற்றும் முஸ்லிம்கள் சிந்திக்கும் முறை பற்றி இவ்வாசிரியர் தலையங்கம் எமக்குச் சொல்ல விளைகிறது. இவ்வாசிரியர் தலையங்கத்தில் 90 வீதம் நல்ல பக்கம் உள்ளபோதும் இங்கு எம்மத்தியில் ஒரு கேள்வியும் முன்வைக்கப்படுகிறது. இது பற்றி நாம் சிந்திக்க கடமைப்பட்டுள்ளோம்.

எனது இளைய மகனுக்கு குர்ஆனை கற்றுக் கொடுக்க வந்த ஒருவர் இலங்கை பாகிஸ்தான் கிரிக்கட் போட்டிகள் இடம்பெறும் பொழுது பாகிஸ்தானுக்குத்தான் அவர் ஆதரவு வழங்குவதாகக் கூறினார். எனது மகன் அவருடைய கருத்தை எதிர்த்து அவரோடு வாதம் புரிந்தார்.

நாம் கிணற்றுத் தவளைகளைப் போல் சிந்திப்பதை விட்டும் வெளியே வர வேண்டும். இஸ்லாம் எமக்கு போதிப்பது அதையல்ல. தான் பிறந்த நாட்டை நேசிக்குமாறே இஸ்லாம் எமக்குப் போதிக்கிறது. எனவே எம்மில் நாட்டுப் பற்று அதிகம் இருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் மீது அதிக வரி சுமத்துவது ஆரோக்கியமானதல்ல



**மந்தனா இஸ்மாயீல் அபேவிக்ரம**
(சண்டே லீடர் மற்றும் இருதின பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர்)

மந்தனா இஸ்மாயீல் கொழும்பை பிறப்பிடமாக கொண்டவர். சமூக ஆர்வலர், புலனாய்வுத் துறை ஊடகவியலாளர். கடந்த ராஜபக்ஷ ஆட்சிபீடத்தை கடுமையாக விமர்சித்ததனால் கொலை அச்சுறுத்தலுக்கு உள்ளானவர். 2013 இல் இவரது வீடு காடையர்களால் தாக்கப்பட்டது. சில காலம் வெளிநாட்டில் பாதுகாப்புப் பெற்று வந்த இவர், தற்பொழுது சண்டே லீடர் மற்றும் இருதின பத்திரிகைகளின் பிரதம ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார். மீள்பார்வை பத்திரிகைக்கு அவர் வழங்கிய பிரத்தியேக செவ்வி இங்கு தரப்படுகிறது.

**நேர்காணல்: ஹெட்டி ரம்ஸி – உதவி: அனஸ் அப்பாஸ்**

- ***உங்களை பற்றி...***

1998 இல் நான் உயர்தரம் எழுதி விட்டு சண்டே லீடர் பத்திரிகையில் இணைந்து கொண்டேன். 2004 இல் சில மாதங்கள் TNL தொலைக்காட்சியில் ஆங்கிலச் செய்தி ஆலோசனை ஆசிரியராகப் பணியாற்றினேன். முதலில் நான், சண்டே லீடர் பத்திரிகையில் பிரசுரமான 'நிவ் மெகஸின்' என்னும் சஞ்சிகையில் எழுதினேன். அதன் பின்னர் பத்திரிகையில் செய்திகளை எழுதினேன்.

பொலிஸ் நிலையங்களுக்குச் சென்று செய்திகளை திரட்டவும் நான் நியமிக்கப்பட்டேன். பிறகு நீதிமன்றச் செய்தியாளராக இருந்தேன். அதன் பிறகு பாராளுமன்ற செய்திகளை தொகுப்பதற்குப் பணிக்கப்பட்டேன். தேர்தல் காலங்களில் அதனோடு தொடர்புபட்ட வன்முறைகளை எழுதினேன். யுத்த காலப்பகுதியில் யுத்த களச் செய்திகளை வடித்தேன்.

சில காலம் சண்டே லீடர் பத்திரிகையின் துணை ஆசிரியராக இருந்தேன். 25 ஆவது வயதில் நான் செய்தி ஆசிரியராகப் பணியாற்றினேன். பிறகு நான் புலனாய்வுத் துறை தகவல்களை தொடராக எழுத ஆரம்பித்தேன். சில காலத்தின் பின்பு நான் பிரதம துணை ஆசிரியராக நியமிக்கப்பட்டேன். இக்காலப்பகுதியிலேயே லசந்த விக்ரமதுங்க கொல்லப்பட்டார்.

பின்னர் பெட்ரிகா ஜேன்ஸ் சண்டே லீடர் பத்திரிகையின் பிரதம ஆசிரியரானார். அவ்வேளையில் நான் பத்திரிகையில் சமகால அரசியல் கட்டுரைகளை எழுத ஆரம்பித்தேன். 2012 இல் நான் நிர்வாக ஆசிரியராக நியமனமானேன். அதன் பின்னர் 2013 ஆகஸ்ட் 23 ஆம் திகதி அப்போதைய ஆட்சி பீடத்தை விமர்சித்து தொடர்ந்தேர்ச்சியான கட்டுரைகளை எழுதி வந்ததனால், ராஜபக்ஷ அரசாங்கத்தின் கீழால் பல அச்சுறுத்தல்களை சந்திக்க நேர்ந்தது. விளைவாக, வெளிநாட்டில் சில காலம் தஞ்சம் புகுந்தேன்.

அக்காலப்பகுதியில் சண்டே லீடர் பத்திரிகை ராஜபக்ஷவுக்கு சார்பான ஒருவரின் கைக்குச் சென்றது. அப்போது நான் பதவி கவிழ்க்கப்பட்டேன். அதன் காரணமாக நான் 2013 செப்டம்பர் மாதம் தொடக்கம் 2015 ஜூன் மாதம் வரையில் வெளிநாட்டில் இருந்தேன். அதன் பின்னர் 2015 ஜூன் மாதத்தில் நான் மீண்டும் சண்டே லீடர் பத்திரிகையில் இணைந்தேன். அங்கு முகாமைத்துவ ரீதியில் பல மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன. அன்று தொடக்கம் நான் சண்டே லீடர் மற்றும் இருதின பத்திரிகைகளின் பிரதம ஆசிரியராக இருந்து வருகிறேன்.

- ***சண்டே லீடர் மற்றும் இருதின பத்திரிகைகளை பற்றியதொரு அறிமுகத்தை வழங்க முடியுமா?***

சண்டே லீடர் பத்திரிகை 1994 இல் ஆரம்பிக்கப்பட்டது. குரலற்றவர்களின் குரலாகவும் ஊழல் மோசடிகளை ஒழித்து நல்லாட்சியையும் ஜனநாயகத்தையும் ஸ்தாபிப்பதனை மூல வேதமாகக் கொண்டே சண்டே லீடர் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது. இப்பத்திரிகையின் ஸ்தாபகர் லசந்த விக்ரமதுங்க. யுத்தம் நிலவிய காலப்பகுதியில் சிறுபான்மையின தமிழர்களின் உரிமைகள் பற்றிப் பேசப்பட்டதனால் அவருக்கு புலி முத்திரை குத்தப்பட்டது.

சண்டே லீடர் பத்திரிகை தேசிய சர்வதேசிய விருதுகளை பெற்றுள்ளது. பெயர் பெற்ற பல ஊடகவியலாளர்களை உருவாக்கியுள்ளது. 2004 பொதுத் தேர்தலுக்கு முன்னர் இருதின பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது. மொஹால் லால் பியதாஸ என்பவர் பிரதம ஆசிரியராக நியமிக்கப்பட்டார். இப்பத்திரிகையும் பல விருதுகளை பெற்றுள்ளன.

இருதின மற்றும் சண்டே லீடர் பத்திரிகைகள் ஏனைய பத்திரிகைகளைப் போன்ற சாதாரண வாராந்தப் பத்திரிகைகளல்ல. இவை புலனாய்வுத்துறை ஊடகவியலை முதலில் அறிமுகப்படுத்திய பத்திரிகைகள். நாம் சாதாரண விடயங்களுக்கு அப்பால் சென்று ஆய்வு ரீதியிலான தகவல்களை வெளிப்படுத்தி வருகிறோம். அரசியல் ரீதியில் நன்கு புரிதல் உள்ளவர்களாகவும் சமூக மாற்றமொன்றை விரும்புகின்ற ஜனநாயகம், நல்லாட்சி போன்ற முன்னேற்றகரமான சமூக முறையை நோக்கி செல்ல விரும்புகின்றவர்களாகவும் உள்ள மக்களே எமது பத்திரிகைகளின் வாசகர்களாக உள்ளனர்.

- ***சண்டே லீடர் பத்திரிகை கடந்த காலப்பகுதிகளில் பல்வேறுபட்ட அடக்குமுறைகளுக்குட்பட்டு வந்தது. அதற்குரிய காரணம் என்ன?***

மக்களுடைய குரலாகவே நாம் எப்போதும் இருந்துள்ளோம். மக்களுடைய சொத்துக்கள் மோசடி செய்யப்படுகின்ற பொழுது, மக்கள் அடக்குமுறைகளுக்குட்படும் பொழுது அவர்களுக்கு நீதி நிலைநாட்டப்படாத பொழுது சண்டே லீடர் பத்திரிகை அவற்றுக்காக வேண்டி குரல் எழுப்பியுள்ளது. சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சிக் காலத்தில் சண்டே லீடர் பத்திரிகை தாக்குதல்களுக்கு உட்பட்டன.

2005 இல் ராஜபக்ஷ ஆட்சி துவங்கிய பொழுது சந்திரிகா அம்மையார் லசந்த விக்ரமதுங்கவை சந்தித்து தன்னை பேட்டி எடுக்குமாறும் அதில் பல தகவல்களை வெளிப்படுத்தவுள்ளதாகவும் தெரிவித்திருந்தார். உடனே லசந்த அவரை நேர்கண்டிருந்தார் இரண்டரை பக்களில் அந்நேர்காணலை பிரசுரித்தோம். அப்பத்திரிகை அவ்வகையிலேயே மக்களின் தோழனாக இருந்தது.

எமக்கு யார் யார் என்பது முக்கியமல்ல. நாம் யாரினதும் தனிப்பட்ட கோபங்களை வைத்து எழுதுவதுமில்லை. தவறுகள் எங்கு இழைக்கப்பட்டாலும் அதை எழுதுவோம். அது சரி செய்யப்பட்டு சமூகத்திற்கு நலன் ஏற்பட வேண்டுமென்பதே எமது எதிர்பார்ப்பு.

- ***நல்லாட்சி அரசாங்கத்தின் செயற்பாடுகள் குறித்த உங்களுடைய அவதானங்கள் என்ன?***

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை நிலைநாட்டி நல்லாட்சியை நிறுவ வேண்டுமென்ற நோக்கிலேயே இவ்வரசாங்கம் ஏற்படுத்தப்பட்டது. தற்பொழுது ஒரு வருடத்திற்கும் அதிகமான நாட்கள் கழிந்துள்ளன. பாதிக்கப்பட்ட தரப்பினர்களுக்கு நீதி நிலை நாட்டப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள் எனக் கூறப்பட்டது. தற்பொழுது ஒரு சில விவகாரங்களே நுனிப்புல் மேயப்படுகின்றன.

பரிசோதனைகள் மந்த கதியிலுள்ளன. தராதரம் பாராமல் நீதி நிலைநாட்டப்படுவதாகவே எமக்குக் கூறப்பட்டது. கடந்த ஆட்சிக் காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வந்த பரிசோதனைகளின் அறிக்கைகள் கூட இன்னும் வெளியிடப்படவில்லை. தற்பொழுது இவ்வாட்சி நிலவி ஒரு வருடங்களுக்கும் அதிகம். பரிசோதனைகளை நிறைவுக்கு கொண்டு வர இன்னும் அதிக காலம் எடுக்கலாம். ஆனாலும் நீதி நிலை நாட்டப்படும் என்னும் நம்பிக்கை மக்கள் மத்தியில் உருப்பெற வேண்டும்.

அந்நம்பிக்கை இன்னும் மக்கள் மத்தியில் தோன்றவில்லை. ஏனெனில், கடந்த அரசாங்கம் நிலவிய காலப்பகுதியில் கடுமையான குற்றச்சாட்டுக்களுக்கான பலர் இவ்வரசாங்கத்துடனும் கூட்டுச் சேர்ந்துள்ளனர். சில விவகாரங்களுடன் தொடர்புடைய தகவல்களை பெற அவர்கள் சாட்சியாளர்களாகக் கொள்ளப்படலாம். ஆனாலும் அதற்காக வேண்டி அவர்கள் மீதுள்ள குற்றச்சாட்டுக்களை கவனத்திற்கொள்ளாமலிருப்பது எந்த விதத்தில் நியாயமாகிறது? இவற்றை மக்கள் அவதானித்துக் கொண்டுள்ளார்கள்.

ராஜபக்ஷ அரசாங்கம் கூடுதலான கடன் தொகைகளைப் பெற்று பிரயோசனமற்ற வேலைத்திட்டங்களை முன்னெடுத்ததினூடாக பல கோடிக்கணக்கான நிதித்தொகை கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. அக்கடன் தொகையை அடைப்பதற்காக வேண்டி இவ்வரசாங்கத்தின் கீழாலுள்ள மக்கள் மீது அதிக வரி சுமத்துவது ஆரோக்கியமான விடயமொன்றல்ல. அதன் பெறுபேறுகளை இவ்வரசாங்கத்திற்கு கிட்டிய காலத்தில் சந்திக்க நேரிடும்.

அவர்கள் கடன்பட்டார்கள் என்பதற்கு மக்கள் வரி செலுத்த வேண்டியதில்லை. ராஜபக்ஷ ஆட்சிபீடம் கொள்ளையடித்த சொத்துக்கள் அரசுடைமையாக்கப்பட வேண்டும். இன்று மக்களுடைய செலவுகள் இரட்டிப்பாகியுள்ளன. கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளில் வரி அதிகரிக்கப்பட்டுள்ளமையினால் மக்கள் மிகுந்த அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர்.

- ***சண்டே லீடர் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் லசந்த விக்ரமதுங்கவின் கொலை தொடர்பிலான பரிசோதனைகள் தற்பொழுது முன்னேற்றகரமான நிலையில் உள்ளனவா? அவருடைய கொலை தொடர்பில் சண்டே லீடர் பத்திரிகையின் அவதானங்களும் முன்மொழிவுகளும் என்ன?***

லசந்தவின் கொலை தொடர்பிலான பரிசோதனைகள் இடம்பெற்று வருகின்றன. அதன் வேகம் குறித்த பிரச்சினைகள் எமக்குள்ளன. 2009 ஜனவரி 8 இல் லசந்த விக்ரமதுங்க கொல்லப்பட்டார். அவர் கொலை செய்யப்பட்டு ஏழு வருடங்கள் கடந்துள்ளன. பரிசோதனைகளில் எவ்வித முன்னேற்றமும் இல்லை. இராணுவ உளவுப் பிரிவினர் மீதே சந்தேகங்கள் கூடுதலாக வலுத்துள்ளன.

பிரகீத் எக்னெலிகொட விவகாரத்திலும் இராணுவ உளவுத்துறையிலுள்ள சிலரே விசாரிக்கப்பட்டனர். யுத்தம் முடிவுறும் காலப்பகுதியிலேயே லசந்த கொல்லப்பட்டார். நாட்டில் அது உச்சகட்ட பாதுகாப்பு நிலவிய காலப்பகுதி. தேசிய பாதுகாப்பு அதிகாரிகள் அடிக்கடி சந்தித்து வந்த காலப்பகுதி. கொழும்பு மற்றும் அதற்கு அண்மித்த பகுதிகளில் அதியுச்ச பாதுகாப்பு நிலவிய காலப்பகுதி.

எனவே இவ்வாறானதொரு காலப்பகுதியில் ஒரு கோஷ்டி ஆயுதங்களை ஏந்திக் கொண்டு மோட்டார் வண்டிகளில் எவ்வாறு சுற்றித் திரிவார்கள்? எல்லா தொலைத் தொடர்பு வலையமைப்புக்களும் கண்காணிக்கப்பட்டு வருகின்ற வேளையில் இக்குழுவினர் எப்படி கையடக்கத் தொலைபேசிகளை பயன்படுத்திக் கொண்டு கொழும்பு பிரதான வீதிகளில் சுற்றி திரிந்து இச்செயலை புரிந்திருப்பார்கள்?

மக்களுக்கும் இவ்விடயம் தொடர்பில் சாதாரண சந்தேகங்கள் உள்ளன. எனவே லசந்தவை கொலை செய்தவர்கள் இராணுவத்துடன் தொடர்புடையவர்கள் (பக்.14)



## எழுவாய், பயமில்லை

அபூ ஷாமில்

## நிவாரண வெள்ளம் தொடர வேண்டும்

கடந்த காலங்களில் நாங்கள் எதிர்நோக்கிய இனவாத, முஸ்லிம் எதிர்ப்புச் செயற்பாடுகள் மறக்க முடியாதவை. அச்சத்தில் உறைந்து போயிருந்த காலப்பகுதி அது. காலம் காலமாக ஒன்றாயிருந்தாலும் எங்களைப் பற்றி இவ்வளவு மோசமாக எடை போட்டிருக்கிறார்களே என்பதை எங்களுக்குப் புரிய வைத்த நாட்கள் அவை. இனங்களுக்கிடையிலான நல்லுறவுக்கு இன்னும் நாங்கள் எவ்வளவு உழைக்க வேண்டியிருக்கிறது என்பதை முஸ்லிம் சமூகம் புரிந்து நடப்பதற்கு இந்தத் துன்பியல் நிகழ்வுகள் உந்துதலாய் அமைந்தன.

இந்தவகையில் கடந்த ஆண்டு இன நல்லிணக்கத்துக்கான பல நிகழ்ச்சிகள் முஸ்லிம்களால் முன்வந்து ஏற்பாடு செய்யப்பட்டன. இதில் நாட்டின் பல பாகங்களிலும் சிங்களச் சகோதரர்களை அழைத்துச் செய்யப்பட்ட இப்தார் நிகழ்ச்சிகள் பிரதானமானவை. பௌத்த மதகுருக்கள் பள்ளிவாயல்களுக்கு வந்து உபந்நியாசம் புரிகின்ற அளவுக்கு இவை களைகட்டியிருந்தன.

அரசியல்வாதிகள், அரசாங்க நிறுவனங்கள், வர்த்தகர்கள், வர்த்தக சங்கங்கள், இஸ்லாமிய இயக்கங்கள், அமைப்புக்கள், பள்ளிவாசல்கள் என சமூகத்தின் பல்வேறு தரப்புகளும் சிங்கள முஸ்லிம் உறவை வளர்ப்பதற்கும் மேம்படுத்துவதற்குமான இப்தார்களை ஏற்பாடு செய்திருந்தன. இவற்றினால் விளைவுகள் வராமலுமில்லை. சிங்களவருக்கு இப்தார் கொடுக்கலாமா, பள்ளிவாசல்களுக்கு சிங்களவர்களை அழைக்கலாமா போன்ற வேலிகளை சமூகமே முன்வந்து உடைத்தெறிந்தது.

இசைக் கச்சேரிகள், விளையாட்டுக்கள், சுற்றுப் போட்டிகள், சுற்றுலாக்கள் போன்ற அனாச்சாரங்கள் கலந்த நிகழ்ச்சிகள் தான் இரண்டு சமூகமும் கலந்து வாழ்வதற்கான இடங்கள் என்ற நிலையை மாற்றி, மார்க்க அனுஷ்டானங்கள், ஆன்மீகச் செயற்பாடுகளிலும் இரு சமூகங்களும் சந்திக்க முடியும் என்பதை சமூகமே நிரூபித்துக் காட்டியது.

நாளுக்கு நாள் தூரமாகிப் போன சிங்களவர்களின் உள்ளங்களை நெருக்கமாக்கும் வாய்ப்புக் கிடைத்தது. எங்களுக்கு எதிராகப் பேசும் சக்திகளுக்கு பதிலளிக்கும் வகையில் அவர்களுக்கு தெளிவுகள் கிடைத்தன. அவர்களுக்கு நேர்வழி காட்டும் பணியில் இன்னும் அதிகமாக உழைக்க வேண்டும் என்ற உணர்வை சமூகம் பெற்றுக் கொண்டது. மொத்த சிங்கள சமூகத்தையும் வக்கிரமாகப் பார்க்காமல் அவர்களில் இருக்கின்ற புல்லுருவிகளை கண்டறிந்து கவனமாகப் பழகக் கூடிய அறிவை முஸ்லிம் சமூகம் பெற்றுக் கொண்டது. முஸ்லிம் சமூகமும் தன்னில் பிளவுபடாமல் பொது வேலைத்திட்டத்தில் தன்னைப் பிணைத்துக் கொள்ளும் பாக்கியம் கிடைத்தது.

அல்லாஹுத்தஆலா ரமழானை வெற்றியின் மாதமாக ஆக்கியிருப்பதனூடாக கடந்த காலத்தில் நாங்கள் அடைய முடியுமான வெற்றிகள் இவை. இந்த இடத்திலிருந்து இதனை வளர்த்துச் செல்வதுதான் வெற்றியைத் தக்க வைத்துக் கொள்வதற்கான சாணக்கியம். எப்பொழுதும் போல சோடா காஸ் ஆகிவிடாமல் இந்த முயற்சியில் தொடர்ச்சியான உழைப்பு தேவைப்படுகிறது.

கட்டவிழ்த்து விடப்பட்ட முஸ்லிம் விரோத உணர்வுகள் நல்லாட்சியிலும் குறைந்ததாகத் தெரியவில்லை. சாம்பலுக்கு அடியில் மறைந்திருக்கின்ற நெருப்பாக அது அடங்கிப் போயிருக்கிறது. எந்நேரமும் வீறுகொண்டு எழுவதற்கான வாய்ப்புக்காக அது காத்திருக்கிறது என்பது வீசிக் கொண்டிருக்கின்ற உஷ்ணக் காற்று புரிய வைக்கிறது.

இன்றைய இனிப்பை விட நாளைய இருப்பு பற்றி நாங்கள் சிந்திப்போமாக இருந்தால் நல்லிணக்கத்துக்கான எமது பணிகள் தொடரப்பட வேண்டும். எங்களது சந்ததிகள் தொழுவதற்குத் தேவைப்படுமே என இப்பொழுதே பென்னாம் பெரிய பள்ளிவாசல்களை கட்டி வைப்பது போல, நாளைய எமது சந்ததி இந்த நாட்டில் வாழ வேண்டுமே என்பது பற்றியும் சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

எமது சமூகத்துக்குள்ளால் இந்த நோக்கத்துக்காகப் பாடுபட்டு உழைக்கின்ற எத்தனையோ நிறுவனங்கள், அமைப்புக்கள், ஜமாஅத்துக்கள் காணப்படுகின்றன. இவை தமக்கிடையிலான உறவைப் பலப்படுத்திக் கொள்வதற்கு இந்த ரமழானைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இஸ்லாமியவாதிகளிடம் இருந்த கொள்கைப் பிரச்சினைகளை சமூகமே ஒதுக்கித் தள்ளிவிட்டது. இனி சமூகத்தின் இருப்புக்காக, பாதுகாப்புக்காக, சமூகத்தின் நற்பெயருக்காக முன்வந்து உழைப்பவர்களையே சமூகம் மதிக்கத் தலைப்பட்டிருக்கிறது.

அந்த வகையில் எல்லா அமைப்புக்களும் பரஸ்பரம் சந்தித்துக் கொள்வதற்கு இப்தார் நிகழ்வுகள் கால்கோளாக அமைய முடியும். தேசிய ரீதியாகச் செயற்படுகின்ற ஜமாஅத்துக்கள், சபைகள் இணைந்து இப்தார் செய்ய முடியும். சில ஊர்களிலே ஒன்றுக்கு மேற்பட்ட பள்ளிவாசல்கள் இயங்குகின்றன. இவற்றினது நிர்வாகிகள் இப்தாரிலே இணைய முடியும்.

அதேபோல வெள்ள நிவாரணங்களின்போது சகோதர இனத்தாருக்கு செய்த ஒத்தாசைகள் ரமழானில் தொடரப்பட வேண்டும். நாங்கள் மனித நேயம் மிக்கவர்கள் என்பதை அவர்கள் பாராட்டுகின்ற இந்த வேளையில் இதனை உறுதிப்படுத்தும் வகையிலான நடவடிக்கைகள் ரமழானிலும் தொடர்ந்து நடக்க வேண்டும். வெசாக் காலம் பௌத்தர்களது விருந்தோம்பலை வெளிக்காட்டுவது போல ரமழானை மனித நேயத்துக்கும் சகவாழ்வுக்குமான காலமாக நாங்கள் பிரகடனப்படுத்த வேண்டும்.

ரமழான் வரும்போது மட்டும் ஆன்மீகத்தை உயிர்ப்பிப்பது போல இந்த விவகாரங்களில் செயற்பட முடியாது. நிலையான மாற்றமொன்றுக்காக தொடர்ந்து உழைக்க வேண்டும். ரமழான் ஏற்படுத்தித் தருகின்ற சந்தர்ப்பத்தை ஏனைய காலங்களிலும் சாதகமாகப் பயன்படுத்த வேண்டும். அப்போது தான் எமது இருப்புக்காக, நாளைய சந்ததிக்காக எதையோ செய்து விட்டதாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரியாவில் ரஷ்யா தொடர்ந்தும் நடத்தி வரும் தாக்குதல்களை துருக்கி கண்டித்துள்ளது



## சர்வதேசப் பார்வை

சிரியாவின் பல்வேறு பகுதிகளிலும் ரஷ்யா மேற்கொண்டு வரும் தாக்குதல்களில் ஒரு வாரத்தில் 6 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இத்லிப் நகர் மீது ரஷ்ய விமானப் படை மேற்கொண்ட தாக்குதலில் அங்கிருந்த வைத்தியசாலை பெருமளவு சேதமடைந்துள்ளது.

சிரியாவின் வடமேற்கு நகரான இத்லிப் மீது ரஷ்ய-சிரிய கூட்டுப் படையினர் மேற்கொண்டு வரும் இத்தாக்குதல்கள் பாரிய சிவிலியன்களின் உயிரிழப்புக்குக் காரணமாகியுள்ளது என துருக்கி தனது கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

சிரியாவில் எட்டு இடங்களை ரஷ்யா இலக்கு வைத்து வருவதாக நாம் அறிகின்றோம். சிரியாவின் இறைமைக்கு குந்தகம் விளைவிக்கும் ரஷ்ய விமானப் படை அங்கிருந்து வெளியேற வேண்டும் என துருக்கி வேண்டியுள்ளது.

சிரியாவின் கூட்டு எதிர்க்கட்சிகளது இராணுவ அணி தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ள இப்பகுதியை ரஷ்யா திட்டமிட்டு இலக்கு வைத்துள்ளது. அஹ்ரார் அஷ்ஷாம் எனப்படும் பலமான எதிரணியினர் இங்கிருந்தே இயங்குகின்றனர். ரஷ்யாவின் நடவடிக்கை அமைதி ஒப்பந்தத்திற்கு எதிரானது என்று துருக்கி குற்றம் சாட்டியுள்ளது.

# ஈராக்கில் அரச படைக்கும் ஐசிஸ் கிளர்ச்சியாளர்களுக்குமிடையில் கடும் மோதல்



பலூஜா நகரை மீளக் கைப்பற்றும் நோக்கில் தாக்குதலைத் தீவிரப்படுத்திய ஈராக்கிய அரச படைகள் மீது ஐசிஸ் பயங்கரவாதிகள் கடும் எதிர்த் தாக்குதல்களை மேற்கொண்டு வருவதால் ஈராக்கிய இராணுவம் நிலை குலைந்து போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஈராக்கிய இராணுவம் சுற்றிவளைக்கப் பட்டு, முற்றுகையின் கீழ் வந்துள்ளதாக குவைத் டைம்ஸ் பத்திரிகை தெரிவிக்கின்றது.

பலூஜா நகரில் 50,000 மக்கள் இதன் மூலம் பொறியில் சிக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஐசிஸின் பிடி இறுகுமானால் மிகப் பெரும் மனிதாபி மான நெருக்கடிகள் தோன்றும் என ஐ.நா. செயலாளர் பான் கீ மூன் எச்சரித்துள்ளார்.

பலூஜாவின் புறநகர்ப் பகுதியான நாயிமாயாவில் ஐசிஸ் போராளிகள் கடும் பதிலடியில், ஈடுபட்டுள்ளனர் என ஈராக்கிய இராணுவ அதிகாரி லெப்டினன் ஜெனரல் அப்துல் வஹ்ஹாப் அல் ஸஆதி ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார். ஈராக்கிய இராணுவத்தில் பொலிஸ், தரைவழி இராணுவம் என்பவற்றோடு விஷேட அதிரடிப்படையும் இணைந்துள்ளது என அவர் தெரிவித்தார்.

பதிலடியில் ஈடுபட்டுள்ள ஐசிஸ் கிளர்ச்சியாளர்கள் குண்டுகளை நிரப்பிய கார்களோடு ஈராக்கிய இராணுவத்தை எதிர் கொள்வதனால் அரச படைக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. எனினும், உயிரிழந்த அரச படையினரின் எண்ணிக்கையை அவர் குறிப்பிடவில்லை.

இப்ரில் மாகாணத்தின் பெரும் பகுதியை ஈராக்கிய படைகள் கட்டுப்படுத்தியுள்ள போதும், ஐசிஸ் தீவிரவாதிகளின் முன்னேற்றம் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது என்று அங்குள்ள ஜஸீராவின் ஊடகவியலாளர் உமர் ஸாலிஹ் தெரிவிக்கின்றார்.

பலூஜா பக்தாதின் மேற்குப் புறமாக 50 கி.மீ. தொலைவிலுள்ள மிக முக்கிய நகரங்களில் ஒன்றாகும். நீண்டகாலமாக அது ஐசிஸ் பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்து வருகின்றது. அவர்களது கட்டுப்பாட்டிலுள்ள இரண்டாவது பெரிய நகரம் மௌசூல் ஆகும்.

இரு படைகளினதும் தாக்குதல்களுக்கு இடையில் பெருமளவு சிவிலியன்கள் சிக்கியுள்ளனர். அவர்களுக்கான உணவு, குடிநீர், மருந்து என்பவற்றை விநியோகிப்பது பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது என்று மனித உரிமைகள் நிறுவனம் தெரிவிக்கின்றது.

# தொடர்ந்தும் காஸாவுக்கு உதவப் போவதாக துருக்கி அறிவித்துள்ளது



காஸாவில் மனிதாபிமான நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள மக்களுக்கு தொடர்ந்தும் உதவியளிப்பதற்கு துருக்கி அரசு முன்வந்துள்ளது. பலஸ்தீன் அதிகார சபைக்கான துருக்கியத் தூதுவர் சமீபத்தில் நடத்திய பத்திரிகையாளர் மாநாடொன்றில் துருக்கி அடுத்த கட்டமாக 1.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை காஸாவின் சுகாதாரத் துறையை மேம்படுத்துவதற்கு வழங்கும் என உறுதியளித்துள்ளார். ஏற்கனவே காஸாவின் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்கு துருக்கி நிதி ஆதரவு அளித்து வருவது குறிப்பிடத்தக்கது.

# பின் அலியின் திருட்டுச் சொத்துக்களில் ஒரு பகுதியை சுவிஸ் மீளக் கையளித்தது

துனிஸியாவின் முன்னாள் ஆட்சியாளர் பின் அலி நாட்டிலிருந்து சட்டவிரோதமாகத் திருடிச் சென்றதாகக் கூறப்படும் சொத்துக்களின் ஒரு பகுதியை சுவிஸ் அரசாங்கம் துனிசியாவிடம் மீளக் கையளித்துள்ளது.

துனிசியாவிலுள்ள சுவிஸ் தூதரக அதிகாரி 500,000 துனிசிய தீனார் பெறுமதியான காசோலை ஒன்றை துனிசியாவிடம் கையளித்தார். துனிசியாவின் முன்னாள் ஆட்சியாளர்களின் சொத்துக்களை மீளப் பெறுவது தொடர்பான பயிற்சிப் பட்டறைகளை அந்நாட்டின் புதிய அரசு நடத்தி வருகின்றது.

ஐ.நா. வின் கீழுள்ள ஐ.நா. விசாரணை குற்றம் மற்றும் நீதி ஆணை நிறுவனம், ஐரோப்பிய ஒன்றியம் என்பன திருட்டுச் சொத்துக்களை மீளப் பெறுவது தொடர்பான பொறிமுறையை உருவாக்குவதற்கு துனிசிய அரசுக்கு ஆலோசனை வழங்கி வருகின்றது.



துனிசியாவின் அரச சொத்துக்கள் மற்றும் காணி விவகார அமைச்சர் ஹாதிம் அல் ஆஷி துனிசியாவுக்கு வந்து சேர வேண்டிய 60 மில்லியன் யூரோக்கள் இன்னும் சுவிஸ் வங்கியில் உள்ளது என்று குறிப்பிட்டார்.

# ஷாட்டின் முன்னாள் சர்வதிகாரிக்கு ஆயுள் சிறை



ஷாட்டின் முன்னாள் சர்வதிகாரி ஹிஸ்ஸீன் ஹிப்ரீக்கு அந்நாட்டின் விஷேட நீதிமன்றம் ஒன்று ஆயுள் சிறைத் தண்டனை வழங்கியுள்ளது. போர்க் குற்றங்களையும், மனித இனத்திற்கு எதிரான குற்றங்களையும் முன்னிறுத்தியே தண்டனை வழங்கப்பட்டுள்ளதாக செனகல் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இது உலகளாவிய சர்வதிகார ஆட்சியாளர்களுக்கு ஒரு எச்சரிக்கை என நோக்கப்படுகின்றது. அந்நாட்டில் 1982-1990 வரை இடம்பெற்ற இவரது ஆட்சியில் 40,000 மக்கள் கொல்லப்பட்டதோடு, கடத்தல், சித்திரவதை, பாலியல் பலாத்காரம் என்பனவும் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது. இவர் மீது சுமத்தப்பட்ட போர்க் குற்றங்களை அடுத்தே ஆயுள் சிறைத் தண்டனை தீர்ப்பாகியுள்ளது.

# அறபு நாடுகளோடு பேச்சுவார்த்தை நடத்த விரும்புகின்றோம் - நெடன்யாஹு



எதிர்பாராத வகையில் இஸ்ரேலியப் பிரதமர் நெடன் யாஹு அறபு நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்த விரும்புகின்றோம் எனத் தெரிவித்துள்ளார். லீபெமென் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டதை அடுத்து இஸ்ரேலிய பாராளுமன்றத்தில் (நெசட்) நெடன் யாஹுவும் லீபெமனும் இணைந்து நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே நெடன் யாஹு இவ்வாறு தெரிவித்தார்.

"நான் பலஸ்தீனர்களோடும் எமது அனைத்து அண்டை நாடுகளுடனும் பேச்சுவார்த்தை நடத்த தயாராக உள்ளேன். ஏற்கனவே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளை மீட்டுவதற்கும், மீள்கரிசனைக்கு உட்படுத்தவும் இஸ்ரேல் தயாராக உள்ளது என அவர் கூறினார். இரு நாட்டுத் தீர்வில் தொடர்ந்தும் உடன்பாடு உள்ளதென்றும் அவர் கூறினார்.

# சவூதியை பாதுகாப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்



யெமனிலிருந்து இவ்வாரம் சவூதி அறேபியாவை நோக்கி ஏவப்பட்ட ஏவுகணைகளை அறபு கூட்டுப் படையினர் இடைமறித்து அழித்துள்ளனர். எதிர்காலத்திலும் சவூதி அறேபியாவுக்கு எதிரான எந்தவொரு இராணுவ நடவடிக்கையையும் எதிர்கொள்ளத் தயார் என அறபு நாடுகளின் இராணுவக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

சவூதி அறேபியா, குவைத், பஹ்ரைன், ஐக்கிய அறபு அமீரகம், ஓமான் என்பன இக்கூட்டணியில் இடம்பெறுகின்றன. ஏப்ரல் 10 இல் யெமனில் அமைதி ஒப்பந்தம் அமுலுக்கு வந்த பின்னர் இரண்டு முறை ஷீஆ ஹூதி கிளர்ச்சியாளர்கள் மே 09 இலும், மே 31 இலும் சவூதி மீது ஏவுகணைத் தாக்குதல்களை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# சிரியாவில் ஈரான் படைகள் நிலைகொண்டுள்ள இடங்களின் வரைபடம் வெளியாகியுள்ளது

சிரியாவில் செயல்படும் சிரியாவின் மனித உரிமை நிறுவனங்களில் ஒன்றான சிரியா ஜுஸூர் நிறுவனம் சிரியாவில் ஈரானியப் படைகள் நிலைகொண்டுள்ள இடங்களை துல்லியமாக அடையாளம் காட்டும் வரைபடம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதன்படி சிரியாவின் அனைத்து மாகாணங்களிலும் 12 இடங்களில் ஈரானியபுரட்சிப் படை நிலைகொண்டுள்ளது. ஈரானின் இராணுவ ஆலோசகர்கள் தங்கியுள்ள இடங்களையும் இவ்வரைபடம் வெளிப்படுத்தியுள்ளது.

இதேவேளை அறேபிய மற்றும் ஆபிரிக்க விவகாரங்களுக்கான ஈரான் துணை வெளிநாட்டமைச்சர் ஹுஸைன் ஆமிர் கருத்து வெளியிடுகையில், ஈரான், சிரியா ஆகிய அரசாங்கங்களின் வேண்டுகோளின் பெயரிலேயே ஈரானிப் படை அங்கு நிலைகொண்டுள்ளதாகத் தெரிவித்தார். தொடர்ந்தும் ஈரானிப் படை அங்கு நிலைத்திருக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜோர்தான் - இஸ்ரேல்: உறவுகளின் பின்னணி என்ன?

றவூப் ஸெய்ன்

மத்திய கிழக்கில் 400 மில்லியன் அறபுகளில் வாசற்படியில் 4 மில்லியன் யூதர்களோடு உருவாக்கப்பட்டுள்ள இஸ்ரேல் எந்தவொரு அறபு நாட்டுத் தலைவரினதும் முன்னறிவின்றி திடீரென்று வானத்திலிருந்து வீழ்ந்த தேசமல்ல. ஐரோப்பிய ஏகாதிபத்திய சக்திகள் ஐரோப்பாவுக்குத் தலையிடியாக இருந்த யூதர்களை மத்திய கிழக்கில் குடியேற்றி, ஒரு யூத நாட்டை பலஸ்தீன மண்ணில் உருவாக்கினார்கள் என்றால் அதற்குப் பின்னணியில் அறபு நாட்டுத் தலைவர்களின் சம்மதம் இல்லாமல் இருக்க முடியாது.

பிரிட்டிஷ் காலனித்துவவாதிகள் இஸ்ரேலை உருவாக்குவதற்கு முன்னர் கிழக்கு ஐரோப்பாவில் சிதறிக் கிடந்த யூதர்களை பலஸ்தீனில் குடியேற்றுவதற்கு அறபு நாட்டுத் தலைவர்களின் ஆதரவை ஒன்றுதிரட்டித் தருமாறு பிரிட்டிஷ் விசுவாசியான இரு அறபு நாடுகளிடம் கோரியது. பிரிட்டிஷாரின் கோரிக்கைக்கு செவிசாய்த்து, இஸ்ரேலை பலஸ்தீனத்தில் உருவாக்குவதற்கு சம்மதமளித்த அந்த இரண்டு அறபு நாடுகளில் ஒன்று ஜோர்தான்.

அப்போதைய ஜோர்தான் மன்னர் பலஸ்தீனில் யூதர்கள் சட்டவிரோதமாகக் குடியேற்றப்படுவதையும் யூத நாடொன்று உருவாவதையும் முன்கூட்டியே அறிந்திருந்தார். அதற்குரிய ஆதரவையும் வெளிப்படையாகவே தெரிவித்திருந்தார்.

காலனித்துவவாதிகளுக்கும் மத்திய கிழக்கு மன்னர்களுக்கும் இடையில் இருந்த கள்ளத் தனமான ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளுமே இஸ்ரேலின் தோற்றத்தை சாத்தியப்படுத்தியது. பலஸ்தீனின் ஒரு பகுதி ஜோர்தான் கட்டுப்பாட்டிலும் இன்னொரு பகுதி எகிப்தின் கட்டுப்பாட்டிலும் இருந்தன. உஸ்மானிய பேரரசு பலஸ்தீனை தனது ஆளுகையின் கீழ் கொண்டு வர முன்னர் இதுவே வரலாறாக இருந்தது.

ஜோர்தானின் ஹாஷிமிய்ய வம்சத்தினர் ஏகாதிபத்தியவாதிகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் விளைவாகவே இஸ்ரேல் உருவானது. இதற்கு இன்னொரு அறபு நாடும் உடந்தையாக இருந்தது. இவ்விரு நாடுகளும் இன்று வரை இஸ்ரேலை அளவுக்கதிகமாக ஆதரித்து வருவதோடு, நெருக்கமான உறவுகளையும் பேணி வருகின்றது.

வெளிப்படையில் இஸ்ரேல் விரோத நாடுகள் என்று வெளியுலகிற்குக் காண்பித்தாலும், பிராந்தியத்தில் இஸ்ரேலை தனிமைப்படுத்தக் கூடாது என்பதிலும் பலஸ்தீனர்களை அடிபணிய வைப்பதன் மூலமேனும் இஸ்ரேலின் சட்டத் தன்மையை அங்கீகரிக்க வேண்டும் எனவும் இவ்விரு நாடுகளும் கருதுகின்றன.

ஏற்கனவே ஜோர்தான் இஸ்ரேலுடன் பல்வேறு ஒப்பந்தங்களைச் செய்துள்ளது. கிழக்கு ஜெரூசலத்தின் நிலைப்பாடு பற்றிய ஒப்பந்தம் அதில் முக்கியமானது. ஆனால், அவ்வொப்பந் தத்தை இஸ்ரேல் ஒருபோதும் மதித்து நடந்ததில்லை. வெட்கம் கெட்ட அறபுத் தலைவர்கள் இஸ்ரேலின் ஒப்பந்த மீறலை தட்டிக் கேட்கவுமில்லை. பெட்டிப் பாம்புகளாய் அடங்கிப் போன அறபு மன்னர்கள், அமெரிக்காவுக்கு முன்னால் அடிக்கும் ஜால்ராவின் குரூரமான பக்க விளைவுகளில் ஒன்றே அவற்றின் இஸ்ரேல் ஆதரவாகும்.

தமது கண்களுக்கு முன்னால் அறபுலகின் வாசற்படியில் எங்கிருந்தோ வந்த யூதர்கள், தமது சொந்த சகோதரர்களான பலஸ்தீன அறேபியர்கள் மீது கட்டவிழ்க்கும் வன்முறைகளைக் கைகட்டி, வாய்பொத்தி பார்த்துக் கொண்டிருக்கும் அறபுத் தலைவர்களின் கோழைத் தனத்தை எந்த வார்த்தையால் வர்ணிப்பது?

மத்திய கிழக்கின் இன்றைய புதிய போக்கில் ஒன்று ஜோர்தான் மீளவும் இஸ்ரேலுடன் பகிரங்கமான இரு தரப்பு உறவுகளைப் பலப்படுத்த எடுக்கும் பிரயத்தனமாகும். ஜோர்தானின் இரண்டாவது அப்துல்லாஹ் ஹானி முல்கி என்பவரை புதிய பிரதமராக நியமித்துள்ளார். பொருளாதார நெருக்கடி நாட்டைச் சூழ்ந்துள்ளதாகவும் அகதிகள் பிரச்சினையே அதற்குக் காரணம் எனவும் கூறி, பாராளுமன்றத்தைக் கலைத்துள்ள அப்துல்லாஹ், அடுத்த தேர்தலுக்கு முன்பாக இடைக்கால அரசாங்கமொன்றை அமைக்கும் பொறுப்பை ஹானி முல்கியிடம் வழங்கியுள்ளார்.

அடுத்த 4 மாத காலத்திற்கு ஒரு இடைக்கால அரசாங்கமே செயல்படவுள்ளது. அதன் பிரதமராக ஹானி முல்கி நியமிக்கப்பட்டுள்ளார். முன்னாள் பிரதமர் அப்துல்லாஹ் அன்ஷூரை பதவி விலகிக் கொள்ளுமாறு மன்னர் கட்டளை பிறப்பித்துள்ளார்.

ஜோர்தான் அரசியலமைப்புக்கு உட்பட்ட மன்னராட்சி (Constitutional Monarchy) நாடாகும். பாராளுமன்றத் தேர்தல் என்பது அங்கு ஒரு கண் துடைப்பு. மன்னரே எல்லா அதிகாரங்களும் கொண்டவர். சர்வாதிகாரத்திற்கு மற்றொரு பெயரே அரசியலமைப்பு மன்னராட்சி என்பது.

பலமான எதிர்க்கட்சியாக விளங்கும் சகோதரத்துவ அமைப்பின் இஸ்லாமிய செயல் முன்னணிக் கட்சி, தீவிர ஒடுக்குமுறைக்கு உள்ளாகியிருக்கின்றது. அதன் பிராந்திய காரியாலயங்கள் மூடப்பட வேண்டும் எனவும், அரசியல் செயற்பாடுகள் தடுக்கப்பட வேண்டும் எனவும் மன்னராட்சி ஆதரவாளர்கள் உரத்துக் குரலெழுப்பி வருகின்றனர்.

பிரதமரையும் அமைச்சரவையையும் மன்னரே தீர்மானிப்பார். அந்தளவுக்கு மன்னரிடமே அதிகாரங்கள் அனைத்தும் குவிந்து கிடக்கின்றன. சட்டவாக்கம், நீதித்துறை, நிருவாகம் என அனைத்துத் தளங்களிலும் நிறைவேற்று அதிகாரம் பெற்றவர் மன்னர்.

40 ஆண்டு கால ஹுஸைனின் ஆட்சிக்குப் பின்னர் அவரது மகன் 2ஆம் அப்துல்லாஹ் அதிகாரத்தைக் கைப்பற்றினார். முன்னாள் இராணுவ அதிகாரியான இவர், இஸ்ரேலின் நெருங்கிய நண்பர். அவர் கொண்டு வந்த சர்ச்சைக்குரிய பொருளாதார சீர்திருத்தங்கள் ஜோர்தானியர்களிடையே பாரிய அதிருப்தி அலைகளை உருவாக்கியுள்ளது.

அரசியலமைப்புத் திருத்தம் மன்னரின் அதிகாரத்தை மேலும் பலப்படுத்தியுள்ளது. தற்போது பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளவர் அகபா பொருளாதார வலயத்தின் பொறுப்பாளியாக இருந்தவர். அம்மானில் உள்ள பிரதமர் அலுவலகத்தின் மூத்த அதிகாரிகளுள் ஒவரான உஸாம் அப்துல்லாஹ் புதிய பிரதமர் இஸ்ரேலுடன் நெருங்கிச் செயல்படுவார் எனத் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன்பாக பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்ட ''முதலீட்டுச் சட்டம்'' ஜோர்தான்-இஸ்ரேல் உறவுகளில் ஒரு புதிய திருப்பம் என்பதை வெளிப்படுத்தியுள்ளது. ஜோர்தானில் இஸ்ரேல் முதலீடு செய்வதற்கான வாய்ப்பை இச்சட்டம் அங்கீகரிக்கின்றது. குறிப்பாக சக்தி வளம் மற்றும் கீழ்க்கட்டுமானத் துறையில் இஸ்ரேல் முதலீடு செய்ய வேண்டும் என ஜோர்தான் எதிர்பார்க்கின்றது. பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்கள் இச்சட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர்.

ஆயினும், சாதாரண ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகள் கூட ஜோர்தானின் இந்த நடவடிக்கையை கடுமையாக விமர்சித்து வருகின்றனர். ஜோர்தானின் பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்தும் உரிமையை இஸ்ரேலிடம் தாரைவார்ப்பது கிட்டிய எதிர்காலத்தில் நாட்டின் தேசிய பாதுகாப்புக்கே அச்சுறுத்தலாக அமையும் என ஓய்வு பெற்ற இராணுவ ஜெனரல் மூஸா அல் அத்வான் எச்சரிக்கின்றார்.

1994-96 காலப் பகுதியில் இஸ்ரேலுடனான ஜோர்தானின் பேச்சுவார்த்தைக் குழுவில் முக்கிய இடம் வகித்தவர் பிரதமர் முல்கி. தனிப்பட்ட வகையிலும் அரசின் பிரதிநிதி என்ற வகையிலும் இஸ்ரேலுடன் நல்லுறவை பாராட்டி வருபவர் அவர்.

சியோனிஸ இஸ்ரேலுடன் ஜோர்தான் தொடங்கியுள்ள புதிய அத்தியாயம் குத்ஸில் ஜொர்தானுக்குள்ள உரிமையை மழுங்கடித்து, இஸ்ரேலின் கிழக்கு ஜெரூசலம் மீதான ஆக்கிரமிப்பை மூடி மறைத்து விடும் என மூஸா அத்வான் கவலை வெளியிடுகிறார்.

ஒரு காலத்தில் இஸ்ரேலை எதிர்த்து ஆயுத முனையில் போராடிய ஜோர்தான் இன்று அதன் தயவு தாட்சண்யத்தை வேண்டி சியோனிஸத்தின் காலடியில் மண்டியிடும் இந்தக் கட்சி நமக்கு எதை உணர்த்துகின்றது?

# எகிப்து: அங்கு என்ன நடக்கின்றது?

எகிப்தின் இராணுவ நீதிமன்றம் சகோதரத்துவ அமைப்பின் தலைவர், பொதுக் கண்காணிப்பாளர் கலாநிதி முஹம்மத் பதீஃ அவர்களுக்கு ஆயுட் கால சிறைத் தண்டனை தீர்ப்பளித்துள்ளது. அவரோடு 25 பேர் மீது இத்தண்டனை தீர்ப்பாகியுள்ளது.

2013 இல் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களில் அவரும் அவரைச் சார்ந்தோரும் தொடர்புபட்டிருந்தனர் என்பதே குற்றச்சாட்டாகும். 2013 ஓகஸ்டில் கலாநிதி முஹம்மத் பதீஃ இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டார். அன்றிலிருந்து இன்று வரை ஜனாதிபதி முர்ஸி உட்பட நூற்றுக் கணக்கான சகோதரத்துவ இயக்க உறுப்பினர்கள் சிறைத் தண்டனையை அனுபவித்து வருகின்றனர்.

உலகில் ஏதேனும் ஒரு நாட்டில் ஓர் ஆர்ப்பாட்டம் நிகழ்ந்து அதில் வன்முறைச் சம்பவங்கள் ஏற்பட்டால் அவருக்கான அதிகபட்சத் தண்டனை 40 நாட்கள் தடுப்புக் காவலில் வைப்பதே. சந்தேகிக்கப்படுபவர் இரு மணி நேரங்களில் ஜாமின் வழங்கப்படுவதுமுண்டு. நாகரிகமடைந்த மனித குலத்தின் நீதி நடவடிக்கைகளில் உள்ள நடைமுறை அனுபவம் இதுவே. எகிப்து மாத்திரம் இதில் ஒரு உலக அதிசயமாக நீடிப்பதைக் காணும்போது புருவம் மாத்திரம் உயரவில்லை. உள்ளமும் குமுறுகின்றது.

நவீன எகிப்திய வரலாற்றில் ஜனநாயக ரீதியாக தெரிவுசெய்யப்பட்ட முதல் ஜனாதிபதி கலாநிதி முர்ஸி. அவரை ஆட்சிக் கட்டிலிலிருந்து இராணுவப் புரட்சி மூலம் கவிழ்த்த மதச்சார்பற்ற கும்பல்கள் இன்று அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டு அப்பாவி இஸ்லாமியவாதிகளை சிறையில் தள்ளி, ஆயுட்கால சிறைத் தண்டனை விதிப்பதென்பது மனச்சாட்சியுள்ள எந்த மனிதனாலும் ஏற்க முடியாத ஒன்று.

வன்முறைச் சம்பவத்தோடு தொடர்பான



ஒருவருக்கு ஆயுட் சிறைத் தண்டனை விதித்திருப்பது இதுவே உலக வரலாற்றில் முதன் முறையாக இடம்பெறும் அசாதாரண நிகழ்வாகும். எகிப்தின் ஜனநாயகத்தை குப்பையில் வீசிய அமெரிக்காவும், இன்றைய எகிப்திய காட்டு தர்பாருக்குப் பின்னணியில் உள்ளதை நாம் மறந்து விடக் கூடாது.

அல்லாஹ்வின் எதிரிகளான யூதர்களும் நஸாராக்களும் விதித்த சதி வலையில் சிக்கிய சில பாலைவன நரிகளும் இன்றைய எகிப்தின் சீர்குலைவுக்குப் பொறுப்புக் கூற வேண்டும். மக்களின் விருப்பத் தேர்வுக்கு மதிப்பளிக்காத விதத்தில் சவூதி அறேபியாவும் ஐக்கிய அறபு அமீரகமும் தமது மேற்கத்திய ஷைத்தான்களோடு சேர்ந்து ஸீஸியை பதவியில் அமர்த்தியது. இன்று எகிப்தின் எல்லா அரச நிறுவனங்களிலும் ஊழலும் மோசடியும் எல்லை மீறிச் செல்கின்றது. மதச்சார்பற்ற, நாஸ்திக சிந்தனை கொண்ட ஸீஸி, ஒரு இரும்புச் சர்வதிகாரியாகவே தன்னை நிலைநிறுத்தியுள்ளான்.

லிபியாவின் கடாபியும் தூனிசியாவின் பின் அலியும் உகண்டாவின் மூஸவேனியும் பல தசாப்தங்களாக செய்த கொடுமைகளை ஒரேயொரு ஸீஸி ஓரிரு வருடங்களில் எகிப்தில் செய்து முடித்துள்ளார். அந்நாட்டின் நீதித் துறை முழுமையாக செத்து விட்டது. அல் அஸ்ஹர் பல்கலைக்கழகத்தின் மிதவாத இஸ்லாமிய குரல் களும் ஓய்ந்து விட்டன. நியாயமான உரிமைக் குரல்கள் துப்பாக்கி முனையில் மௌனமாக்கப்படுகின்றன.

2013 இல் நடந்த ஆர்ப்பாட்டத்தின் போது வட கிழக்கு மாகாணமான இஸ்மாஈலிய்யாவில் வன்முறைகள் நடந்ததாம். அதில் 70 வயதைத் தாண்டிய விஞ்ஞானி என்று போற்றப்படும் ஓர் ஆன்மீகத் தலைவர் வன்முறையில் ஈடுபட்டாராம். அதற்காக அதிகபட்சத் தண்டனை ஆயுட்கால சிறையாம்.

ஸீஸி இப்படியெல்லாம் ரீல் விடுவதற்கு முண்டுகொடுப்பது யார்? தனக்கு பக்க பலமாக இருக்கின்ற சியோனிஸ அதரவு அமெரிக்காவும் இஸ்ரேலும் மட்டுமல்ல. தமது நாடுகளை அமெரிக்காவுக்கு தாரைவார்த்துள்ள அறபு நாடுகளும்தான்.

எகிப்தில் கொண்டு வரப்படும் அரச பயங்கரவாத சட்டங்களைப் பார்த்து ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்டு எந்தவொரு மேற்கு நாட்டு அரசும் குரலெழுப்பவில்லை என்பது ஆச்சரியத்திற்குரியதல்ல. ஒரு நாட்டில் பொது மக்களுக்குரிய சிவில் உரிமைகளை பச்சையாகவே மீறிச் செயற்படும் ஸீஸியின் அரசாங்கத்தை மேற்கு நாடுகள் வேடிக்கை பார்த்து நிற்பதேன்?

ஜனநாயக வழியில் செயல்படும் அரசியல் கட்சிகள் தடைசெய்யப்படுகின்றன. கட்சி அலுவலகங்கள் அடித்து நொறுக்கப்படுகின்றன. அரசாங்கத்தை விமர்சிக்கின்றவர்கள் கம்பி எண்ணுகின்றனர். இஸ்லாமிய தஃவா நிலையங்கள் இழுத்து மூடப்படுகின்றன. பள்ளிவாயல் உரைகள் ஒத்துக் கேட்கப்படுகின்றன. ஆட்சி அதிகாரத்தைப் பேசுகின்றவர்கள் பேச்சுரிமை மறுக்கப்படுகின்றனர்.

இஸ்லாமியவாதத்திற்கு ஆதரவானவர்கள் பயங்கரவாதிகள் என முத்திரை குத்தப்படுகின்றனர். ஆயிரம் ஆண்டு பழமை வாய்ந்த ஓர் இஸ்லாமிய பல்கலைக்கழகத்தின் குரல் இராணுவத்தால் மௌனமாக்கப்படுகின்றது. இஸ்லாமிய ஷரீஆ அமுலுக்கு வர வேண்டும் என்று கோரியவர்கள் சிறைக்குச் செல்கிறார்கள். நாட்டை வளப்படுத்தி, ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் பலமாக நிலைநிறுத்த வேண்டும் எனக் கோருகின்றவர்கள் மீது ஆயுட்கால சிறைத் தண்டனை விதிக்கப்படுகின்றது.

சமீபத்தில் 12 பேருக்கு ஆயுள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. 8 முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தினருக்கு மரண தண்டனை தீர்ப்பாகியது. தாம் நிரபராதிகள் என நிரூபிப்பதற்குக் கூட வாய்ப்பளிக்கப்படவில்லை. இத்தனையும் ஜனநாயக விரோத செயல்கள் அல்லவா?

ஜனநாயகத்தைப் பற்றிப் பேசும் வொஷிங்டன் இவற்றையெல்லாம் எப்படி மௌனமாக இருந்து ஆதரிக்கின்றது. வரலாறு நெடுகிலும் எகிப்தில் ஜனநாயகம் வருவதையோ ஜனநாயக ஆட்சி மலர்வதையோ மேற்கு விரும்பியதில்லை. அதற்கு இன்று எகிப்தி மக்கள் கொடுக்கும் விலை மிகப் பாரியது. மிகப் பெரும் வலிகளையும் வருத்தங்களையும் தாங்கிக் கொண்டு வாழும் எகிப்தின் சிவில் சமூகம் மீளவும் ஒருமுறை வெடித்துச் சிதறும். அப்போது ஆட்சியாளர்களின் கொட்டம் அடங்கும். இவையெல்லாம் எதிர்பார்க்கக் கூடியதுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரி:

# இளைஞர்களுக்கான எதிர்காலத்தை உருவாக்குவதிலுள்ள சவால்கள்



மிப்றாஷ் முஸ்தபா
உதவி: ஏ.ஆர்.சாஜித் அலி

கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் பச்சைப்பசேலெனக் கண்ணைக் கவரும் வயல்களின் நடுவே கம்பீரமாய்க் காட்சி தரும் ஓர் அழகிய பிரதேசமே சம்மாந்துறை. முஸ்லிம்கள் செறிந்து வாழும் இப்பிர தேசத்தை 40 இற்கும் மேற்பட்ட பள்ளிவாயல்கள் அலங்கரிக்கின்றன.

இப்பிரதேசத்தில் வசிக்கின்ற மக்களின் பிரதான ஜீவனோபாயமாக விவசாயம் காணப்படுவதோடு செங் கல் உற்பத்தி, நன்னீர் மீன்பிடி மற்றும் சிறு கைத்தொழில்கள் என்பவற்றிலும் மக்கள் ஈடுபடுகின்றனர். சுமார் 55000 ஹெக்டேயரில் இங்கு நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. அதேபோன்று தென்கிழக்குப் பல் கலைக்கழகத்தின் விஞ்ஞான பிரிவு சம்மாந்துறையிலேயே அமைந்துள் ளது., சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரி, தொழில் பயிற்சி நிலையம் என்பனவும் இப்பிரதேசத்தில் அமைந் துள்ளமை விசேட அம்சமாகும். அந்த வகையில் இப்பிரதேசத்தில் அமைந் திருக்கின்ற சம்மாந்துறை தொழில்நுட் பக் கல்லூரி இளைஞர்களுக்கான ஒரு வரப்பிரசாதமாகும். இளைஞர் அலு வல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயற்படும் 39 தொழில்நுட்பக் கல்லூரிகளில் சம்மாந் துறை தொழில்நுட்பக் கல்லூரி பழை மை வாய்ந்ததாகத் திகழ்கிறது.

1974ம் ஆண்டு முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர் எம்.ஏ அப்துல் மஜீட் அவர்களின் வேண்டுகோளின் பேரில் அப்போதைய கல்வி அமைச்ச ராக இருந்த கலாநிதி பதியுதீன் மஹ்மூ தினால் சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. இத் தொழில்நுட்பக் கல்லூரி சம்மாந் துறையில் ஆரம்பிக்கப்பட்டமையானது குறிப்பாக முஸ்லிம் இளைஞர்க ளுக்குக் கிடைத்த பெரியதோர் வரமாகக் காணப்படுகின்றது. உள்ளூர் மற்றும் சர்வதேச தேவைகளுக்கு ஏற்ப பங்களிப்பு நல்கும் உயர் திறனுடைய மனித வலுவையும் தொழில்சார் தேர்ச்சிகளையும் வழங்கும் பிரசித்தி பெற்ற ஒரு நிறுவனமாக திகழ்தல் என்ற தூரநோக்கோடும் (Vision), போட்டி மிக்க வேலைத்தளத்தில் வெற்றிகரமான செயலாற்றுகைக்கு அவசியமான அறிவு, தொழில்நுட்பத் திறன்கள், மனப்பாங்குகள் நிறைந்த மனித வளத்தினை ஊக்கம்மிக்க சிறந்த அனுபம் வாய்ந்தவர்களைக் கொண்டு உருவாக்குதல் என்ற பணிக்கூற் றோடும் (Mission) சம்மாந்துறை தொழில் நுட்பக் கல்லூரி இயங்கி வருகின்றது.

இளைஞர்கள் ஒவ்வொரு சமூகத் தினதும் முதுகெலும்புகள். அத்தகைய இளைஞர்கள் தமது எதிர்காலத்தை அமைத்துக்கொள்வதற்கான சரியான தொழில் வாய்ப்புக்களை அடைந்து கொள்ளத் தவறும் பட்சத்தில் மோசமான வழிமுறைகளையே தேர்ந்தெடுப்பர். இதன் விளைவாக நாடு பாரிய சவால் களுக்கு முகம் கொடுக்க வேண்டிவரும் என்ற யதார்த்தத்தை அரசாங்கம் உணர்ந் ததன் விளைவாகவே இத்தகைய தொழில்நுட்பக் கல்லூரிகள் நாட்டில் தோற்றம் பெற்றன. இதன் காரணமாக, இளைஞர்கள் தலைசிறந்த தொழில் நுட்பக் கல்வியைப் பெற்று தங்களது தொழில் ஆற்றல்களை வளர்த்துக் கொள் வதற்கான சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொள்வதோடு, சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில்நுட்பவியல் பட்டப்படிப்பிற்கான நுழைவுத் தகை மையை பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப் பங்களும் அவர்களுக்கு கிடைக்கின்றன. அதே போன்று தொழில்நுட்பக் கல்லூரி யில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு பல்வேறு சலுகைகளும் வழங்கப்படு கின்றன. கற்கை நெறிகளை முழுநேரமாக அல்லது பகுதி நேரமாக தொடர்வதற்கான வாய்ப்பு, மாதாந்தம் ரூபா 1000க்கு மேற்படாத நாளாந்த கொடுப்பனவு, நவீன வசதிகளுடன் கூடிய ஆய்வுகூடம், நூலக வசதி மற்றும் பாடநெறியின் பின் னரான தொழில் பயிலுனர் பயிற்சி என் பன அவற்றுள் குறிப்பிடத்தக்கவை.

சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூ ரியின் அபிவிருத்திப் பணிகளுக்காக அர சாங்கத்தினால் பாரியளவிலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதனடிப் படையில் கல்லூரியின் பழைய கட்ட டங்கள் அனைத்தும் புதுப்பிக்கப்பட்டு வருவதோடு பல்வேறு கற்கை நெறிகளுக் காகவும் பெறுமதி வாய்ந்த உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருக்கின்றன. என்றாலும் சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரியில் கணனிகள் போதியளவு இல்லாமையினால் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப கற்கை நெறிகளைத் தொடர் வதில் மாணவர்கள் பல்வேறு சிரமங்க ளுக்கு முகம்கொடுக்கின்றனர். இத் தொழில்நுட்பக் கல்லூரி ஆரம்பித்து 40 வருடங்களை கடந்துவிட்ட நிலையில், இந்தக் கல்லூரிக்குப் பிறகு ஆரம்பிக்கப் பட்ட தொழில்நுட்ப கல்லூரிகள் பல்வேறு வசதிகளுடன் சிறப்பாக இயங்க இக்கல்லூரியில் மாத்திரம் கணனியோடு தொடர்புபட்ட கற்கை நெறிகளை இன்னும் தாங்கள் கற்ப னையிலேயே கற்று வருவதாக இங்கு கல்வி கற்கும் மாணவர்கள் அங்க லாய்க்கின்றனர். அதேபோன்று, நாட் டின் பல்வேறு பிரதேசங்களிலுமுள்ள முஸ்லிம், தமிழ் மாணவர்கள் சம்மாந் துறை தொழில்நுட்பக் கல்லூரியில் தமது கற்கைநெறிகளை தொடர்ந்து வந்தாலும் அண்மைக் காலமாக இத் தொழில் நுட்பக் கல்லூரிக்கு வரும் மாணவர்களின் வீதம் குறைந்து வருவதானது சுட்டிக் காட்டப்பட வேண்டியதோர் அம்சமாகும்.

> தனியார் கல்வி நிறுவனங்கள் காட்டும் போலிக் கவர்ச்சி களினால் மாணவர்கள் தூண்டப்படுவதானது இத் தொழில்நுட்பக் கல்லூரியில் மாணவர்களின் வருகை குறைந்து செல்வதற்கான பிரதான காரணியாகும்.

தனியார் கல்வி நிறுவனங்களின் கவர்ச்சிகளும், மாணவர்கள் அவற்றை நம்பி தரமற்ற கற்கை நெறிகளுக்கு பெரும்பணத்தினை செலவுக் செய்வ துமே இதற்கான பிரதான காரணம். இத்தகைய தனியார் கல்வி நிறுவனங் களின் போலிக் கவர்ச்சிகளினால் ஈர்க் கப்பட்டு தமது பிள்ளைகளை எவ்வ ளவு பணம் கொடுத்தாவது அங்கு சேர்க்க வேண்டும் என்ற பெற்றோர் களின் அதீத ஆர்வமும் இத் தொழில் நுட்பக் கல்லூரியில் மாணவர்களின் நுழைவு வீதம் வீழ்ச்சியடைந்திருப் பதற்கான மற்றுமொரு பிரதான கார ணியாகும்.

மேலும், இத்தொழில்நுட்பக் கல்லூரியில் இன்னும் பல புதிய கற்கைநெறிகளை ஆரம்பிப்பதற்கான வசதிகள் இருந்தாலும் அதனை நடத் துவதற்கான ஆசிரியர் பற்றாக்குறை யினால் அவற்றை தொடங்க முடியா துள்ளதாக கல்லூரி நிர்வாகம் தெரிவிக் கின்றது. எனவே, சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரியில் காணப் படுகின்ற இத்தகைய பிரச்சினைகளை அரசாங்கம் உரிய முறையில் இணங் கண்டு அவற்றுக்கு தீர்வு காண்பது இப்பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர் கள் தங்களது கற்கைநெறிகளை சிறப்பாகப் பூர்த்தி செய்து வளமான தொழில்களில் பிரகாசிக்க வழிச மைப்பதோடு, மாணவர்களும் தனி யார் கல்வி நிறுவனங்களின் போலிக் கவர்சிகளின் பின்னால் அல்லுண்டு செல்லாமல் இத்தொழில்நுட்பக் கல்லூரியில் காணப்படுகின்ற பெறு மதியான கற்கைநெறிகளில் இணைந்து பயன்பெற முன்வர வேண்டும்.

# கிழக்கு மாகாண முதலமைச்சரும் இனவாதிகளின் அரசியல் காய்நகர்த்தல்களும்





- சமூக நேசன்

கடந்த வாரம் முழுவதும் அனைத்து ஊடகங்களிலும் பேசுபொருளாக அமைந்த விடயம்தான் கிழக்கு மாகாண முதல மைச்சர் நஸீர் அஹமட்டிற்கும் கடற் படை அதிகாரி ஒருவருக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடு தொடர்பான செய்தியாகும். வெள்ள அனர்த்தம் பற் றிய செய்திகளையே தொடர்ந்து வெளி யிட்டு வந்த ஊடகங்களுக்கு இந்த விவகாரம் வாய்க்குக் கிடைத்த அவலாக மாறியது.

கடந்த 20ம் திகதி சம்பூர் மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற நிகழ் வொன்றில் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கிய கடற்படை அதிகாரி ஐ.ஆர். பிரேமரத்ன முதலமைச்சரை மேடை ஏற விடாமல் அவமதித்தமையும், இதனால் ஏற்பட்ட ஆத்திரத்தை சபையிலேயே முதலமைச்சர் கொட்டித் தீர்த்தமையும் தான் இப்பிரச்சினை ஏற்படுவதற்கான உடனடிக் காரணம். இந்தப் பிரச்சினை தொடர்பாக அரசியற் களத்தில் நேர்மறை யான வாதங்கள் இடம்பெற்றுக் கொண்டி ருக்கும் இந்த வேளையில், குறித்த விவகாரம் சுமுகமாகப் பேசித் தீர்த்திருக்க வேண்டியதொன்று என்ற கருத்தை அரசியல் அவதானிகள் முன்வைக்கின் றனர். அரசாங்கத்திற்கு நெருக்கடியை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கிலும், முதலமைச்சர் சிறுபான்மை இனத்தைச் சார்ந்தவர் என்ற காரணத்தினாலுமே இந்த விவகாரம் ஊதிப்பெருப்பிக்கப்பட் டுள்ளது என அரசாங்கம் தெரிவித்துள்ள மையும் இங்கு சுட்டிக் காட்டத்தக்கது.

ஒரு மாகாணத்தின் முதலமைச்சர் என் பவர் மக்களினால் ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட ஒரு பிரதிநிதி. ஆளுனர் மாகாணத்தில் ஜனாதிபதியின் பிரதிநிதி. மாகாணத்தோடு தொடர்பான நிர்வாக விடயங்களில் முதலமைச்சரே முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டியவர். மாகாண விடயங்களில் முதலமைச்சரின் ஆலோசனைகளோடு செயற்பட வேண் டிய பொறுப்பு ஆளுனருக்கு இருக்கிறது. குறித்த நிகழ்வுக்கு ஆளுனர் அதிதியாக அழைக்கப்பட்டிருந்த நிலையில் மாகா ணத்தை ஆளும் முதலமைச்சர் அழைக்கப் பட்டிருக்கவில்லை. ஆளுனரின் அழைப் பின் பேரில் அங்கு சென்ற முதலமைச்சர் விழாவை நடாத்திய கடற்படை அதிகாரி யால் உதாசீனப்படுத்தப்பட்டிருக்கிறார். மாகாண ஆளுனரின் தூரநோக்கற்ற செயற்பாடுகளே இந்தப் பிரச்சினை ஏற்படுவதற்குக் காரணமாக அமைந் திருக்கிறது. குறித்த நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்ட ஆரம்பத்திலேயே முதல மைச்சரும் அதிதியாக அழைக்கப்பட வேண்டும் என்ற யோசனையை ஆளுனர் ஏற்பாட்டாளர்களுக்கு வழங்கி இருக்க வேண்டும். அல்லது குறித்த விழாவுக்கு முதலமைச்சரை அழைத்து வந்த ஆளுனர் முதலமைச்சருக்கான பதவி நிலை அந்தஸ்த்து வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை விழாவை நடாத் திய குறித்த அதிகாரிக்கு முன்வைத்திருக்க வேண்டும். இவையெதையுமே செய்யா மல் பிரச்சினை ஏற்பட்டபோது மாத்திரம் ஆளுனர் முதலமைச்சரை சமாதானப் [illegible] மிடையில் சரியான உற வொன்று இல்லாமையையே சுட்டிக் காட்டுகின்றது. ஆளுனருக்கும் முதலமைச் சருக்கும் இடையிலான இத் தகைய காழ்ப்புணர்வு களினால் பாதிக்கப்படு வது அப்பாவி மக்கள் தான் என்பதை அனை வரும் புரிந்து செயற்பட வேண்டும்.

சம்பூர் விவகாரத்தை முன்னிலைப் படுத்தி இனவாதிகள் தமக்கு சார்பாக அரசியல் ரீதியான காய்நகர்த்தல்களை மேற்கொண்டு வருகின்றனர். நல்லாட்சிக் கோஷத்தோடு ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கம் நாட்டிற்காக பாடுபடும் வீரர் களை மதிப்பதில்லை எனவும், அவர்கள் இழிவுபடுத்தப்படும் போது எவ்வித நட வடிக்கையும் எடுக்காமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதாகவும் இனவா திகள் புலம்பித் திரிகின்றனர். நாட்டில் நீங்காத வடுவாக நீடித்த யுத்தத்தை முன்னின்று முடிவுக்குக் கொண்டு வந்த முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு மஹிந்த ராஜபக்ஷ வினால் மேற்கொள்ளப்பட்ட அரசியல் பழிவாங்கல்களின்போது இந்த வாய்ச் சொல் வீரர்கள் எங்கே இருந்தார்கள் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறோம். அதேபோன்று முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் மாலக சில் வா இராணுவ மேஜர் ஒருவரை தாக்கிய போது மஹிந்த அரசாங்கம் அதனை மூடி மறைத்தது. அதற்கு எதிராக எதுவும் பேசா தவர்கள் இப்போது மட்டும் ஏன் குரல் எழுப்புகின்றனர் என்ற ஓய்வு பெற்ற மேஜர் பிரதீப் உடுகொடவின் கேள்வி நியாயமானதே.

என்றாலும் குறித்த சந்தர்ப்பத்தில் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அஹமட் நடந்து கொண்ட விதத்தை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடி யாது. மாகாணத்தின் முதல்வர் என்ற ரீதி யில் அவர் நாகரிகமான முறையில் நடந்து கொண்டிருக்க வேண்டும். தவறு கள் நிகழ்ந்திருந்தால் அதனை பக்குவமாக சுட்டிக்காட்டி இருக்க வேண்டும். தனக்கு அநீதி இழைக்கப்பட்ட போது மாத்திரம் சபை என்றும் பாராது கொதித்தெழுந்த அவர் தனது சமூகம் பல்வேறு அநீ திகளுக்கும், இன்னல்களுக்கும் உள்ளாக் கப்பட்ட சந்தர்ப்பங்களில் இவ்வாறு தனது சமூகத்துக்காக எவருக்கும் அஞ்சாது குரல் கொடுத்தாரா என்ற கேள்வியை சமூகத்தின் சார்பாக முன்வைக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பலஸ்தீனின் உரிமை

யூ.கே.றமீஸ்
விரிவுரையாளர்,
பாதிஹ் கல்வி நிலையம்.

பலஸ்தீன் பூமி, அதன் புவியியல், அதன் பெறுமதி மற்றும் அதன் உரிமை தொடர்பில் நோக்கியுள்ளோம். பலஸ்தீன் தங்களது பூமி என்று பரப்புரைக்கும் யூதர்கள் அதற்கு மத, வரலாற்று வாதங்களை முன்வைப்பார்கள். மத ரீதியான வாதங்களுக்கான இரண்டு பதில்களை கடந்த இதழில் நோக்கினோம்.

அதில் நபிமார்களின் வாரிசுகளாக வருவதற்கு மிகப் பொருத்த மானவர்கள் முஸ்லிம்கள்தான் என்ற கருத்தையும் அல்லாஹ்வின் கட்டளைகளைப் பின்பற்றி நடக்கும்போதுதான் யூதர்களுக்கு அல்லாஹ் புனித பூமியை வழங்கினான். எனவே, அல்லாஹ்வுக்கு கட்டுப்படாத நிலையில் அதற்கு உரிமை கொண்டாடுவது அபத்தமானது என்றும் நோக்கினோம் அதன் தொடரை இந்த இதழில் நோக்குவோம்.

இப்றாஹீம் (அலை) அவர்களுக்கும் அவரது சந்ததிகளுக்கும் புனித பூமியை வழங்கியதாக ஒரு அல்குர்ஆன் வசனத் தை ஏற்கனவே நோக்கியுள்ளோம். இங்கு நாங்கள் விளங்க வேண்டிய ஒரு முக்கிய விடயம் இருக்கிறது.

இப்றாஹீம் (அலை)அவர்களின் சந்ததிகள் இஸ்ஹாக் (அலை) அவர் களும் அவரது சந்ததியினர்களான பனூ இஸ்ராஈல்களும் மாத்திரம்தானா? அரபு அத்னானியர்கள் இஸ்மாஈல் (அலை)அவர்கள் வாரிசுகள் இல்லையா? குறைஷி வம்சம் அத்னானியர்களோடு தான் இணைகிறது. முஹம்மத் (ஸல்) அவர்களும் இதே வம்சத்தை சேர்ந்தவர் தான். அரபிகளும் இதே வம்சம்தான். இஸ்மாஈல் (அலை) அவர்களின் சந்ததிகள்தான். எனவே புனித பூமியில் அரபியர்களுக்கும் உரிமையுண்டு என்பதனை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அல்லாஹ் இப்றாஹீம் (அலை) அவர்களையும் அவரது சந்ததிகளையும் மக்களுக்கு தலைவர்களாக ஆக்கினான் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை. இதுபற்றி அல்குர்ஆன் தெளிவாக தெரிவிக்கிறது. இப்றாஹீம் (அலை) அவர்களை அவரது இறைவன் சில கட்டளைகளை கொண்டு சோதித்தான். அதனை அவர் பூரணப்படுத்தி (வெற்றியடைந்து) விட்டார். நிச்சயமாக நான் உம்மை மனிதர்களுக்கு தலைவராக ஆக்குவேன் என்றும் கூறினான். (அதற்கு இப்றாஹீம் அலை) எனது சந்ததியிலிருந்தும் (அப்படியான தலைவர்களை உருவாக்குவாயாக) என்றார். (அதற்கு அல்லாஹ்) எனது வாக்குறுதி (உடன்பாடு) (உமது சந்ததியிலுள்ள) அநியாயக்காரர்களுக்கு சேராது என்றான் என்ற இந்த நிகழ்வை நினைவுகூர்ந்து பாருங்கள். (பகரா 124)

அநியாயக்காரர்களுக்கு அல்லாஹ்வின் வாக்குறுதி இல்லை. அவர்கள் தலைமைத்துவத்திற்கு பொருத்தமானவர்கள் அல்ல என்பது அல்லாஹ்வின் தெளிவான வார்த்தை. இஸ்ராஈலின் சந்ததிகள் (யூதர்கள்) உலகில் எத்தகைய அநியாயங்களை அரங்கேற்றினார்கள். அல்லாஹ்வுக்கு இணை வைத்தார்கள், அவனை நிராகரித்தார்கள், இறை பாதையி லிருந்து மக்களை தடுத்தார்கள், பூமியில் அட்டூழியங்களை அரங்கேற் றினார்கள், யுத்தங்களை மூட்டிவிட் டார்கள், நாடுகளை ஆக்கிரமித்துக் கொண்டார்கள், கொலை வெறிக் களங்களை அரங்கேற்றினார்கள். ஏமாற்றுவதற்கும் மோசடி செய்வதற்கும் உலகை பயிற்றுவித்தார்கள், வட்டியை உலகம் பூராகவும் பரப்பி மனிதர்களையும், நாடுகளையும் சூறையாடினார்கள். வரலாறு நெடுக என்று இன்னும்கூட இதனைத்தான் செய்து கொண்டிருக்கிறார்கள். இத்தகைய அநியாயக்காரர்கள் எப்படி புனித பூமிக்கு உரிமை கொண்டாடலாம்?

---

# பாலைவனச் சிங்கம்

## நைல் நதிக் கரையினிலே...



**(சுலைமான் ஹாதிர்) - வரலாற்று நவீனம்**

**அங்கம் - 8** - ஹமதானி

புராதன காலம் தொட்டே ''அக்கியாத்'' கிராமத்தை ஊட்டி வளர்க்கின்ற தாய் நைல் நதி சலசல என்ற சப்தத்துடன் வடக்கு நோக்கிப் பாய்ந்து கொண்டிருந்தாள். வானத்து முகடுகள் உதறித் தள்ளும் சூரிய ஒளிக் கிரனங்கள் அவளின் மேலே பட்டுத் தெறித்த போது ஜகஜோதியாய் ஒளிரத் தொடங்கினாள். சலனமற்ற நீரோட்டத்தினிடையே மூரிக் குன்றுகள் குறுக்கிட்ட பொழுது, துள்ளி எழும்பிய நீர்ப் பிரவாகம் குன்றுகளின் மேலால் மறுபுறமாக நீர் வழிந்தோடுவது ஆரணங்குகளின் வாளிப்பான முதுகை ஒத்திருந்தது.

அன்னை நைலின் ஓட்டத்திலே அவளுக்கொரு ஆணவம், என்னதான் பெருமையோ அவளுக்கு! இறைமைத்துவத்தை தனக்கு சொந்தம் பாராட்டிய பாதகன் பிர்அவ்னை தன் ஆழத்தில் தாழ்த்தி ஒழித்த பெருமையோ அது! இல்லை பனூ இஸ்ரவேலர்களை மனித அடிமைத்தளையிலிருந்து மீட்க வந்த பாலகன் மூஸா (அலை) அவர்களைத் தன் மடியே சுமந்து சீராட்டி சேமமாய் கரை சேர்த்த பெருமையோ!! அன்னை நையிலே எதை வைத்தாயினும் நீ பெருமைப்படும் காலமெல்லாம் உன்னால் பெருமைப்படத்தான் முடியும்.

ஆனால் உன்னை வைத்து எகிப்திய மக்கள் தங்களது வாழ்க்கை வண்டியையே ஓட்டுகின்றார்களே. நிறைந்த வெள்ளம் வழிகின்ற போது நதியின் இரு தீரத்திலும் படிகின்ற வண்டல்களை ஊட்டமாகக் கொண்டு வளரும் பருத்திதான் எகிப்து மக்களின் மூலாதாரப் பயிர். நைல் நதிப் பள்ளத்தாக்கிலே பல்வேறு உணவுப் பயிர்களும் கூடப் பயிரிடப்படுகின்றன. அந்த உணவினால் உரம் பெற்று அமானுஷ்யமான காரியங்களை சாதித்த சாதனை வீரர்கள் சரித்திரத்திலே அனந்தம்!

''அக்கியாத்'' கிராமத்தின் பருத்தித் தோட்டங்கள் பலவும் நதியின் இருமருங்கிலும் பரந்து காணப்படுகின்றன. ரபீஉல் அவ்வல் மாதமது. எனவே, பருத்திமரங்கள் மலர்ந்து சொரிந்து புதுமணவாளப் பெண்ணைப் போல காட்சி தந்தன. காலையில் சில மலர்கள் நனைந்து கூம்பியிருந்தன. குயில்கள் இரண்டு அரசவையில் போட்டியிடும் இரு பாவலர்களைப் போல மாறிமாறிப் பாடிக் கொண்டிருந்தன. அடிக்கடி தென்றல் பருத்தி மரங்களை ஆரத்தழுவியது. அதனால் சொரிகின்ற பருத்திப் பூக்கள் ஓடுகின்ற அன்னை நைலிற்கு மலர்ச்சரம் தொடுக்க சமர்ப்பிக்கப்பட்டன. அந்தப் பருத்தித் தோட்டதினூடே ஊடறுத்துச் செல்லும் அந்த ஒற்றையடிப் பாதை வளைந்து நெளிந்து ஒரு சிறுவீட்டுக்குப் பக்கத்தில் முடிவடைந்தது. எளிமைக் கோலம் கொண்ட அந்த இல்லத்தினுள் இருந்து.

والفجر وليال عشر والشفع والوتر

என அல்-குர்ஆன் ஓதும் சப்தம் இனிமையாக ஒலித்துக் கொண்டிருந்தது. அந்த இனிமையான குரலுக்குரியவள் சுலைமான் ஹாதிரின் தங்கை ''ஆயிஷா அர்வா''தான். காகத்தைப் போல விடிகாலையில் கண்விழித்துக் கொள்ளும் அவள், தாயுடன் பஜ்ருத் தொழுகையைத் தொழுதுவிட்டு குர்ஆனை இனிமையாக ஓதிக் கொண்டிருந்தாள். சுலைமான் ஹாதிரின் தாய், தொழுகை விரிப்பிலேயே சாந்தமு ருவாக அமர்ந்தவாறு உம்முல் முஃமினீன் ஜுவைரியா(ரழி)வுக்கு ரஸூல் (ஸல்) அவர்கள் சுபஹுத் தொழுகைக்குப்பின் மூன்று முறை ஓதிவரக் கற்றுக் கொடுத்த அந்த துஆவை ஓதிக் கொண்டிருந்தாள்.

سبحان الله وبحمده عدد خلقه ورضا نفسه وزنة عرشه ومداد كلماته

அந்த துஆவுடன் தனது வழமையான அவ்றாதை முடித்துக் கொண்டு சிந்தனையிலாழ்ந்தாள், சுலைமான் ஹாதிரின் தாய் ''செய்யிதா நமீஸா'' அவளது சிந்தையிலே சுலைமான் பற்றிய எண்ணக்கோலங்கள் சிறகடித்துப் பறந்தன. இரு தினங்களுக்கு முன் சினாயில் நடந்த சம்பவமும் அதன் விளைவாக தனது மகன் ஹாதிர் பைத்தியக்காரன் என்ற மகுடத்தில் சிறையறையில் தள்ளப்பட்டுள்ளதையும் நினைத்துப் பார்த்தாள்.

அவளது விழிகளிலே கண்ணீர் வியாபித்தது. அது நமீஸாவின் வதனம் என்ற வையகத்திலே நைலாய் ஓடி அவளது மடி என்ற கடலிலே சங்கமித்தது. அந்த மடியிலே விழுந்த கண்ணீர் திவலைகள் அதே மடியில் சீராட்டி வளர்க்கப்பட்ட சுலைமான் ஹாதிரின் இளமைப் பருவத்தை செய்யிதா நமீஸாவுக்கு ஞாபகமூட்டியது.

சுலைமான் சிறுவயது முதல் துடிப்புள்ள ஒரு சுட்டியாகத்தானிருந்தான். ஒரு கெட்ட சூழலில் வளர்ந்திருந்தால் சுலைமானின் துடுக்குத்தனம் நெறிப்படுத்தப்பட்டு ஒரு சிறந்த நெறிதவறாத வீரனாக அவனை மாற்றிவிட்டது. சூழல் தான் மனிதனிலே தேங்கிக்கிடக்கும் ஆற்றல்களை மலரச்செய்கின்றது.

ஆழ்ந்த இஸ்லாமியப் பற்றுள்ள குடும்பம் என்பதனால் தான் சின்னவன் சுலைமானை தகப்பனுக்கடங்காத தருதலையாகவோ தாயை வதைக்கும் தருக்கனாகவோ மாறாமல் சம்ரட்சிப்பதிலே கண்ணுங்கருத்துமாக இருந்தாள் நமீஸா. ஏழு வயதிலே தனது மடியிலே இருக்கச் செய்து அல்-குர்ஆனை ஓத கனிவாகக் கற்றுக் கொடுத்தாள். ரஸூல் (ஸல்) அவர்கள் குழந்தைகளுடன் அன்பாக நடந்த கதைகளையும் அஹ்லுல் பைத்தைச் சேர்ந்த ஹஸரத் ஹஸன்(ரழி) மற்றும் ஹுஸைன் (ரழி) போன்றோரின் கதைகளையும் இஸ்லாமிய வரலாற்றில் நிகழ்ந்த தீரவீர சம்பவங்கைளையும் ஒவ்வொரு நாள் இரவிலும் இனிய நடையில் இன்முகத்துடன் சொல்லி வந்தாள். ரஸூலினதும் அவர் குடும்பத்தின் மீதுமான பற்றும் வீரமும் சுலைமானுக்கு அன்பு என்ற கரண்டியிலே அமுதமென ஊற்றப்பட்டன. மொத்தத்தில் அந்த ஹதீஸின் செயலுருவமாக செய்யிதா நமீஸா திகழ்ந்தாள்.

'' உங்கள் குழந்தைகளுக்கு மூன்று பண்புகளைக் கற்றுக் கொடுங்கள். ரஸூலின் மீது அன்பு செலுத்தவும் அவர் குடும்பத்தார் மீது நேசம் பாராட்டவும் அல்-குர்ஆனை ஓதவும் கற்றுக் கொடுங்கள்.ஏனெனில், அல்-குர்ஆனை சுமந்தவன் நிழலற்ற அந்த மறுமையிலே தமது தோழர்களுடனும் நபிமார்களுடனும் தங்கி இருப்பான்'' (தபரானி)

வீட்டுவேலைகளுக்கு மத்தியிலும் வாசிக்கும் பழக்கமுடையவள் செய்யிதா நமீஸா. சுலைமான் ஏழுவயதில் இருக்கும் பொழுது, அப்பருவத்தில் எவ்வாறு குழந்தை வளர்ப்பது என்பது தொடர்பில் ஒரு இஸ்லாமிய நூலில் வாசித்த பந்தியை அவள் பிரதி பண்ணி தனது தொழும் அறையில் அலங்காரம் செய்து பொலிதீன் கவரை இட்டு சுவரில் தொங்க விட்டிருந்தாள். அது அடிக்கடி தூசுதட்டப்பட்டு புதுப் பொலிவுடன் இன்றும் காட்சி தந்தது. செய்யிதா நமீஸா புதிதா வாசிப்பது போன்று கண்களால் நோட்டமிட்டு அதனை அசைபோட்டுப் பார்த்தாள்.

''இப் பருவத்திலே (ஏழு வயதிலே) பிள்ளைகளை மிக நுணுக்கமாக அவதானித்து சிறந்த பயிற்சிகள் வழங்குவதனைத் தவறவிட்டால் வாழ்வில் தொடர்ந்தேர்ச்சையான பல தவறுகளுக்கு காரணகர்த்தாக்களாக அமையலாம் என்பது அறிஞர்களின் கருத்தாகும். அல்-குர்ஆன், ஹதீஸ் போன்ற துறைகளையும் இஸ்லாமிய வரலாற்றுக் கதைகளையும் விரிவாக இப்பருவத்தில் அவர்களது உள்ளங்களில் பதித்து விடுவது பிழையான திசைகளுக்கு இழுக்கப்படுவதிலிருந்து அவர்களைக் காப்பாற்றுவதோடு அவர்களது உள்ளம் தூய்மை பெறவும் சிந்தனை விரிவடையவும் வழிவகுக்கும்''

சுலைமான் 16 வயதினனாக இருக்கும் பொழுதே அவனது தந்தை அப்துல் கனி மௌத்தாகிவிட்டார். கூலித் தொழில் புரியும் ஒரு சாமனியரவர். தினமும் மாலையில் கிடைக்கும் சொற்ப பணத்தை குடும்ப செலவுகளுக்காக அவர் நமீஸாவிடம் கொடுப்பார். செய்யிதா நமீஸா இன்முகத்துடன் அதனை ஏற்று நாளாந்த வீட்டுச் செலவுகளுக்கு சி க்கனமாகப் பாவிப்பாள். அப்துல் கனி சில போது வெறுங்கையுடன் திரும்பவும் நாட்களும் உள. அப்பொழுதுதெல்லாம் நமீஸா நபியவர்கள் விபரித்துக் காட்டிய.

لو أحسنت إلى إحداهن الدهر كله ثم رأت منك شيئاً قالت ما رأيت منك خيراً قط.

'' நீ அந்தப் ஒருத்திக்கு காலமெல்லாம் செலவு செய்தாலும் ஒரு நாள் உன்னிடம் ஏதும் குறைகளைக் கண்டால். நீ எனக்கு எந்தவொரு நன்மையையும் அறவே செய்யவில்லையே! என்று கூறுவாள்'' (அல்-ஹதீஸ்)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முஹம்மத் பகீஹுத்தீன்



# ரமழான்: மனதை இயக்கும் வாழ்வை உயர்த்தும்



கண்ணியமிக்க ரமழான் மாதம் இதோ மீண்டும் எம்மிடம் வந்திருக்கின்றது. ரமழான் இம்மை மறுமை வாழ்வின் மாற்றத்திற்கான பயிற்சிப் பாசறையாகும். வருடா வருடம் மாற்றத்தை நோக்கிய நகர்வுக்காக வழிகாட்டும் புனித ரமழான் இம்முறையும் புதிய பாதைக்கு வழிகாட்டும் என எதிர்பார்க்கின்றோம். ரமழான் மனதை இயக்கும், வாழ்வை உயர்த்தும் என்ற நம்பிக்கோடு புனித ரமழான் மாத்தை வரவேற்கின்றோம்.

**நோன்பு ஏன் எதற்கு?**

நோன்பு ஆசைகளை அடக்குவதற்கும் மனக்கட்டுப்பாட்டுடன் நடப்பதற்கும்; அல்லாஹ்வுக்கு மாத்திரம் அடிமைபட்டு வாழ்வதற்கும் மற்றும் இறையச்சத்தை வளர்த்துக் கொள்வதற்காகவும் கடமையாக்கப் பட்டுள்ளது. உண்மையில் நோன்பு பாவத்தில் தோய்ந்துள்ள உள்ளத்தை சுத்திகரிப்பதற்கும், ஆன்மீக உணர்வை அதிகரிப்பதற்கும், காம உணர்வை கட்டுப்படுத்துவதற்கும் பெரிதும் உதவுகிறது. மேலும் நோன்பு சமூகத்தை பயிற்றுவித்தல், இறையருளை உணர்த்தல், மறுமையில் கிடைக்கப்பெறும் கூலிக்காக மாத்திரம் செயற்படுதல் போன்ற உயர் பண்புகளையும் வளர்த்து விடுகிறது.

கட்டுப்பாடின்றி வயிற்றை நிரப்பும் பேராசை, மிருகத்தனமான காம இச்சை, ஷைத்தானிய கோபாவேசம், கடிவாளமில்லாத நாவு ஆகிய நான்கும் சந்தேகமின்றி மனிதனை ஆட்டிப்படைக்கும் ஆசைகளாகும். இவை தனிநபர் வாழ்விலும், குடும்ப வாழ்விலும், சமூக வாழ்விலும், தேசத்தை கட்டியெழுப்புவதிலும் பாரிய சீர்கேட்டையும் அழிவையும் ஏற்படுத்துபவையாகும். இவை குணப்படுத்த முடியாத தொற்று நோயாக சமூகத்தில் பரவும். அந்த ஆசைகளை கட்டுப்படுத்தும் வகையில் மனதை இயக்கும் சக்தியாகவும் சிகிச்சையளிக்கும் பயிற்சிப் பாசறையாகவும் ரமழான் தொழிற்படுகிறது.

**மனிதன் ஏன் இச்சைகளோடும் ஆசைகளோடும் படைக்கப்பட்டுள்ளான்?**

இச்சை என்பது தன்னளவில் ஒரு பாவமன்று. அதனை கையாள்வதில் தான் நன்மையும் தீமையும் உருவாகின்றது. மனிதன், தான் வாழும் பூமியை வளமாக்கி பயனடைவதற்கும், சுபீட்சத்துடன் வாழ்வதற்குமே ஆசைகள் கொண்டவனாக படைக்கப்பட்டுள்ளான்.

பசி உணர்வு வாழ்வின் இருப்புக்கான அடிப்படை. காம உணர்வு மனித இன விருத்திக்கான அடிப்படைக் காரணி. ஆனால் அது இறைவழிகாட்டலுடன் பிரயோகிக்கப்பட வேண்டும். அப்போது அது கனவன், மனைவி, பிள்ளை, உறவுகள் என கட்டுக்கோப்பான குடும்ப வாழ்வுக்கு வித்திடும்.

கோபம் அதற்குரிய இடத்தில் இருந்து கொண்டால் தீமைகள் பரவாது. பதிலாக எங்கும் பாதுகாப்பு நிலவும். அல்லாஹ்வுக்கான கோபம் நன்மைகளுக்கான காவல் அரணாகவும், தீமைகளுக்கான தடுப்புச் சுவராகவும் இருப்பதுடன் மானத்தையும், வாழ்வின் இருப்புக்கான உத்தரவாத்தையும் புனிதங்களை பேணுவதற்கான காப்பாகவும் அமையும். அது நிலை மாறினால் பிளவும் பிரிவாகவும், கொலையும் கொள்ளையாகவும், சண்டை சச்சரவாகவும் மாறிவிடும்.

அவ்வாறே பேச்சு என்பது இருவரை சேர்க்கும். இரண்டு குடும்பங்களை இணைக்கும். இரண்டு ஊர்களை சமாதானமாக வாழவைக்கும். இரண்டு நாடுகளையே அமைதியாக ஆள வழிவகுக்கும். பேச்சு இறை திருப்தியை அடிப்படையாக கொண்டு இருந்தால் உயர்ந்த சுவணம் பரிசாக கிடைக்கும். முள்ளில்லாத நாவு கடிவாளமின்றி பேசத் தொடங்கினால் நரகப் படுகுழியே தங்குமிடமாக அமைந்து விடும்.

எனவே பசியுணர்வு தொடர்ந்தேர்ச்சியான வாழ்வுக்கு ஒரு அடிப்படை. காமம் மனித இன விருத்திக்கான காரணி. கோபம் அதற்குரிய இடத்தில் இருந்தால் தீமைகள் தடுக்கப்பட்டு எங்கும் பாதுகாப்பு நிலவும். பேச்சு இறை திருப்தியை அடிப்படையாக கொண்டு அமைந்;தால் உயர்ந்த சுவணம் பரிசாக கிடைக்கும். எனவே மனிதன் ஆசைகளுடனும் இச்கைளுடனும் படைக்கப்பட்டிருப்பதற்கு அர்த்தும் உண்டு. ஆசைகளை அவன் கையாளும் விதத்தை பொறுத்து அது அவனுக்கு சுவனத்திற்கான அல்லது நரகத்திற்கான பாதையாக அமையலாம்.

**வயிற்றை நிரப்பும் பேராசையின் விளைவுகள்**

1. அதிகரித்த உடல் பருமன் (Obesity) என்பது 25 இற்கும்; அதிகமான குணப்படுத்த முடியாத நோய்களுக்கு அடிப்படைக் காரணியாகும்.

2. அளவை மீறிய உடல் பருமன் தனி நபருக்கும் சமூகத்திற்கும் மேலதிக பொருளாதாரச் சுமையாகும்.

3. அதிகரித்த உடல் பருமன் சிந்திக்கும் திறனை மழுங்கடித்து, மந்த புத்தியுள்ள பலவீனர்களை உருவாக்கி விடுகிறது.

4. சோம்பல், பலவீனம், தூக்கம் போன்றன உடல் பருமன் தரும் சில பரிசுகள்.

**கடிவாளமில்லாத காம இச்சையின் விளைவுகள்:**

1. இன்று உலகின் மிகப் பெரிய இலாபகரமான வணிகம் பாலியல், ஆயுதம் மற்றும் போதைப் பொருள் வணிகமாகும். இதற்காக உலகலாவிய அமைப்புக்கள் பில்லியன்; கணக்காக செலவு செய்கின்றன. தீமை கட்டுக்கடங்காமல் பரவுகிறது.

2. எய்ட்ஸ் நோய் விபசாரத்தின் சாபக்கேடு. உலகில் ஒவ்வொரு மணி நேரத்திலும் 600 நபர்கள் எச்.ஐ.வியால் புதிதாக பாதிக்கப்படுவதுடன், ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு குழந்தை எய்ட்ஸ் மூலம் இறக்கிறது.

3. உலகில் அதிகளவில் பரவியுள்ள நோய்கள் பாலியல் நோய்களே என உலக சுகாதார அமைப்பு கூறுகிறது.

**கோபத்தினால் ஏற்படும் விளைவுகள்**

1) கோபம் என்பது ஷைத்தான் மனித உள்ளத்தில் போடும் நெருப்பு. ஷைதான் கக்கும் கோபக் கனல் மனிதனின் உள்ளத்தில் விழுந்தால் அவன்; என்ன செய்கிறான், எதைப் பேசுகிறான் என்பதை அறியமாட்டான். அதனால் கொடூரமான ஆபத்தான விளைவுகள் வருகின்றன.

2) குடும்பங்களுக்கும், உறவினர்களுக்கு மத்தியிலும் நடைபெறும் பல்வேறு கொலைச் சம்பவங்களுக்கு, கோபம் ஒரு காரணமாக இருக்கின்றது.

**கடிவாளமில்லாத நாவின் விபரீதங்கள்**

1. அர்த்தமற்ற வெற்றுப் பேச்சுக்கள் பிளவுகளுக்கான அச்சாணி. அனைத்துத் தீமைகளுக்கும் நாவு ஆணி வேர்.

**ஆசைகளை நெறிப்படுத்துவதில் நோன்பின் பங்கு**

ரமழான் உடல், அறிவு, ஆன்மா, நடத்தை ஆகிய நான்கு பகுதிகளையும் பரிசுத் தப்படுத்துகின்றது. மண்ணின் மீது ஆசை கொண்ட மனிதனை வானத்தின் பால் உயர்த்துகிறது. கறைபடிந்த உள்ளத்தை சுத்தப்படுத்துகிறது. மனிதன் வாழ்வில் ஆயிரம் இருந்தும் வசதிகள் இருந்தும் நிம்மதியில்லாமல் வாழ்வதுண்டு. காரணம் உள்ளம் மலர்வதில்லை. மனம் விசாலிப்பதில்லை. யார் இறைவழிகாட்டலை புறக்கணிக்கின்றானோ அவனது மனோநிலை இறுக்கமானதாக இருக்கும் என்று அல்லாஹ் அருள் மறையில் ஸூரா தாஹாவின் 123 வது வசனத்தில் குறிப்பிடுகிறான்.

நிம்மதி சந்தோசம் இல்லாத சுருங்கிய உள்ளத்தை நோன்பு குணப்படுத்துகிறது. மனதை இயக்கி ஆன்மீகத்தை உயிர் வாழச் செய்கிறது. அந்த வகையில் ரமழான் உடல், அறிவு, ஆன்மா, நடத்தை ஆகிய நான்கு பகுதிகளிலும் மனித ஆசைகளை கட்டுப்படுத்தி அல்லாஹ்வின் பால் உயர்வதற்கு வழிகாட்டுகிறது. அவனது ஆசைகளுக்கு கடிவாளமிடுகிறது. ரமழான் மாற்றத்தை நோக்கி மனதை இயக்குவதற்கு உதவுகிறது.

---

# முகநூல் வான்கதவுகள் திறப்பு!

அவலக் குரல்கள் முகநூலையும் விட்டு வைக்காது, அதன் வான் கதவுகளைத் திறக்க, ஆரம்பமானது இந்த பெரும் சோகம். பல திசைகளிலிருந்தும் வெள்ளம், மண்சரிவு தொடர்பான தொடர் தகவல்கள் முழு நாட்டையே திக்குமுக்காடச் செய்தது. வரலாறு இந்த நாளை எந்தப் பக்கத்தில் பதியும் என்பதறியா மக்கள் கூட்டம் இது ஒரு சாதரண நீர்மட்ட உயர்வு என எண்ணி தங்களை ஆறுதல் படுத்த முயற்சிக்க முன்னரே கழுத்து வரை தண்ணீர்.

படகுச்சேவைகள் விரைந்தன. ஊரின் பஸார் பகுதிகள் தான் ஆற்றங்கரை ஆனது. உயிர் தப்பினால் போதுமென துடித்த குரல்கள் முகநூல் சுவற்றில் குந்தியிருந்தவர்களை களத்தில் குதிக்க வைத்தன. முஸ்லிம் சமூகத்தின் மீது இதுவரை இனவாத குழுக்கள் பூசிச்சென்ற சேற்றைக் கழுவ வெள்ளம் சிறந்த களத்தை அமைத்திருந்தது.

அடையாளம்தாங்கிய பணியை சிலர் விமர்சித்தாலும், தாம் பிரதிநிதிப்படுத்தும் சமூக சேவை நிறுவன பெயர்களை உச்சம்தொட வைக்க தொண்டர்கள் சிரத்தையுடன் செயற்பட்டதை எதிர்ப்பதில் எவ்வித அர்த்தமுமில்லை. அரசாங்கமோ வெளிநாட்டு உதவிகளை கப்பல்களிலிருந்து இறக்கிக் கொண்டிருந்த பொழுதும், இந்த சகோதரர்கள்தான் வயோதிபர்கள், சிறியோர், பெறியோர் என சகலரையும் தூக்கிகொண்டு காப்பாற்ற அலைந்தனர்.

கலந்தாலோசனைகளில் அரசியல்வாதிகள் இருக்க, பலநாள் உணவு, தூக்கமின்றி ஓயாத இவர்களின் சேவையை எந்தக் கல்வெட்டிலும் பதியமுடியவில்லையே என என் மனம் ஏங்குகின்றது. விகாரைகள்தோரும் பசுமையான முஸ்லிம் முகங்கள் பலதும் பேசி, பலனும் கண்டு, பழகும் காட்சி அடடா..

பல ஊர்களிலிருந்து இளைஞர் படைகள் கொத்து கொத்தாக வெள்ளப் பாதிப்பு பகுதிகளில்



வந்திறங்கி பாதம்பதிந்தன, சுத்தமாகின பிரதேசமெங்கும், கொண்டுசேர்த்தன முகநூல் அதை தேசமெங்கும்..

வெள்ளம் வடிய ஆரம்பித்து, சுத்திகரிப்பு தீவிரமடைய, சாலைகள் தோறும் குப்பை மேடுகள் பிரம்மிட்டுக்களாய் காட்சி தந்தன. 'சுனாமிக்கும் நிதி உதவியெல்லாம் வந்துச்சு.. எதுவுமே சரியா எல்லொருக்கும் கெடைக்கல்ல, அரசாங்கம் எடுத்துக் கிட்டுது, இதுலயாச்சும்..' 'அரசாங்கம் என்னமாச்சும் சின்ன உதவி செய்யுமா எங்களுக்கு?'

'திரும்ப எங்கிருந்து ஆரம்பிப்பது என்றே தெரியல, வீடு தவி[illegible]

'நானோ வயசா[illegible] பார்த்துட்டு இருந்தம். கலியானத்துக்கு எல்லாம் புதுசா வாங்கி அவவோட அறையை அழகாக்கினோம், சகலதும் போச்சே'

'எனது garment இல் 2, 3 லட்சத்துக்கும் அதிகமான பொருட்கள் நாசம், பாருங்க'

பல கிலோ ஹேர்ட்ஸ் அதிர்வுடன் என் செவியில் பாய்ந்த குரல்கள் இவை

ஆறுதல் வார்த்தைகள் எனும் பெயரிலான சில வார்த்தைகள் பாதிக்கப்பட்ட சிலரை எரிச்சல்படுத்தியதாகவும் முறைப்பட்டுக்கொண்டனர். பாதிப்புற்றோரில் சிலர் யாரிடமும் பேசாமல் ஏதோ ஆழ்ந்த கவலையிலும், ஒருவித விரக்தியுடனும் இருந்ததை அவதானித்தேன்.

'அவங்கட சமூகத்துக்கு தான் அவங்க செய்ராங்க' என்று சொன்ன ஒரு பெரும்பான்மை இனத்தவ குரல் கேட்டு ஒரு முஸ்லிம் சகோதரர் குமுறி எழுந்து, நாம் இத்தனை பன்சலைகள், சகோதர இன மக்களின் வீடுகள் சுத்தம் செய்தோம். இனவாத பேச்சுக்களை இனிப் பேசிக்கொண்டு வர வேண்டும் என்றாராம் அவர். அந்த நபர் மௌனித்து விட்டாராம். இன்னும் சில சிங்கள சகோதரர்களும் இவருக்கு ஆதரவாகவே பேசினராம், திருப்தியுடன் என்னிடம் கூறினார். இனி நாம் அமைதி காக்க அவசியமில்லை. தைரியமாக உண்மையை பேசினால் நாட்டில் தானாக நல்லிணக்கம் மலரும் என்கிறார், மகிழ்ச்சி!

வெளியூர்களில் இருந்து வந்த இளைஞர்கள் சுத்திகரிப்புக்காக சென்ற வீடுகளில் 'இந்த பொருட்களை எங்கம்மா வைக்கனும்? இந்த [illegible]க்குப் பையில் போட்டு [illegible]டில் இருந்து அப்புரப்படுத்த வேண்டிய குப்பைகள் இன்னும் இருக்கின்றதா? பாய், தலவானிகள் உங்களுக்கு இருக்கா? சாப்பிட்டீங்களா? வேற என்ன உதவிகள் செய்யனும்?' என அடுக்கிக் கொண்டே சென்ற கேள்விகள் உளவியல் வைத்தியரை விட லாவகமாக பாதிக்கப்பட்டோரை சுய நினைவுக்கு மீட்கும் மந்திரங்களாகவே எனக்குக் கேட்டது. தங்கள் துன்பங்களையும் மறந்து இயந்திரமாய் அவர்களது உதடுகள் அசைந்து பேசின, கண்ணோரம் வரும் மிகச் சிறிய கண்ணீர் துளி அவர்களது உள்ளங்களை குளிர்வித்தன.

வழமைபோல உலர் உணவு வினியோக விடயத்தில் குழாயடி சண்டைகள், சலசலப்புக்கள் தோன்றி மறைந்திருந்தன.

ஜிஇஇ வெள்ள நிவாரண மத்திய நிலையம் உள்வாங்கிய அமைப்புக்கள் மற்றும் இன்னபிற அரச சார்பற்ற சேவை நிறுவனங்கள் சிறந்த மெக்கானிஸம்களை வெள்ளொட்டம் செய்து பார்த்தன, வெற்றியும் கண்டிருக்க வேண்டும்.

இனி நாம் எதற்கும் தயார் என்ற தேசிய ஷூரா சபையின் நகர்வுகளின் பிரதிபளிப்புக்களும் இங்கு அமைதியாக சொல்லப்படும் உண்மை.

வெள்ளமும், மண்சரிவும் ஏற்படுத்திய வடுக்கள் ஓய்ந்துவிட்டதாக பலர் எண்ணுகின்றனர். இல்லை, இனித்தான் எமது கடமைகள் கனக்கின்றது. உதவி நிறுவனங்களும் அரசும் சில நாட்களில் இவர்களை மறந்து விடலாம், உங்களால் முடிகிறதா சொல்லுங்கள். அவர்கள் பற்றிய எண்ணங்களில் இருந்து மீள முடிகின்றதா? நிம்மதியாக உறங்க முடிகிறதா? வெல்லம்பிட்டியவில் முச்சக்கர வண்டி ஒன்றில் தனிமையில் ஏக்கத்துடன் அமர்ந்திருந்த ஒரு இளம் பெண்ணின் பரிதாப முகம் இன்னும் என் கண்களைவிட்டும் அகலவில்லை.

- அனஸ் அப்பாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உல்லாசம் மற்றும் நலனோம்பல் கற்கைநெறிகள்

## Tourism Industry & Hospitality Courses

ஹனான் அஷ்ரவி



எல்லோரும் வைத்தியராவதற்கும் பொறியியளாலர் ஆவதற்கும் விரும்புவதற்கான காரணம் அத்தகைய தொழில்கள் மூலம் அதிகூடிய ஊதியத்தை மிகச் சுலபமாகப் பெறலாம் என எண்ணுவதுதான். ஆனால், தொழில் உலகம் நமது கற்பனையை விட விசாலமானது என்பதனை நாம் புரிந்து கொள்வதில்லை.

திறன் அடிப்படையிலான தொழின்மைகள் 150 இற்கு மேல் உள்ளன. அவை கௌரவமானவை. சமூக மதிப்புமிக்கவை. சுலபமானவை. உயர்ந்த ஊதியத்தை உறுதி செய்பவை. அதேவேளை, உடலுக்குக் கடினமற்றவை.

இந்த வகையில் இலங்கையில் குறிப்பாக போருக்குப் பின்னர் தொழிற்சந்தையில் வேகமான கேள்வியை ஏற்படுத்தியுள்ள கற்கை நெறியாக உல்லாசம் மற்றும் நலனோம்பல் துறை மாறியுள்ளது. வெளிநாடுகளிலும் இத்துறைக்கு அதிக கிராக்கி உள்ளது. தேசிய, சர்வதேச அளவில் உல்லாசம் மற்றும் நலனோம்பல் துறைகள் வேகமாக வளர்ந்து விருவதனால் இத்துறையில் பெருமளவிலான வேலைவாய்ப்புகள் கிடைக்கின்றன.

நலனோம்பலும் சுற்றுலா முகாமைத்து வமும் பல்வேறு கற்கைநெறிகளைக் கொண்ட ஒரு விரிவான துறையாகும். விரிவடைந்து வரும் உலகத் தொழிற்துறையில் முகாமைத்துவம், சந்தைப்படுத்தல் மற்றும் செயற்பாட்டுப் பதவிகளுக்கான நிபுணத்துவம், அர்ப்பணிப்பு, திறன்கள் ஆகியவற்றில் மாணவர்களைத் தயார்செய்வதே இக்கற்கைநெறிகளின் நோக்கமாகும்.

சுற்றுலாப் பயணிகளை மீள அழைப்பதும் புதியவர்களைக் கவர உதவுவதுமான தரமான மனிதநேய மூலதனமே நலனோம்பல் மற்றும் சுற்றுலாத் துறை வேண்டி நிற்கும் திறனாகும்.

இலங்கை பல்கலைக்கழக கற்கைநெறிகளில் இத்துறை இன்னும் உள்ளீர்க்கப்படவில்லை. சில பல்கலைக்கழகங்கள் இவற்றைத் தொடங்குவது குறித்து ஆராய்ந்து வருகின்றது. எனினும், இலங்கையிலுள்ள Sri Lanka Institute of Tourism and Hospitality Management - (SLITHM) இது தொடர்பான கற்கைநெறிகளை வழங்கி வருகின்றது.

சுற்றுலா ஹோட்டல்களில் பணியாற்ற விரும்புவோர், சுவையான சமையல் கலையில் மிளிர வேண்டும் என எண்ணுவோர் பலரும் இக்கற்கையில் இணைந்து பயில்கின்றனர். SLITHM ஆனது House Keeping, Kitchen Production, Cookering, Restuarent ஆகிய துறைகளில் கற்கைநெறிகளை வழங்கி வருகின்றது. இதேவேளை, ஐக்கிய இராச்சியத்தைத் தளமாகக் கொண்ட Association of Business Exercutive முகாமைத்துவம், வணிகம் போன்ற கற்கைநெறிகளோடு சுற்றுலா மற்றும் நலனோம்பல் கற்கைநெறிகளையும் வழங்கி வருகின்றது.

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற மலேசியப் பல்கலைக்கழகமான Management and Science University - MSU இத்துறை சார்ந்த கற்கைநெறிகளை கலாநிதிப் பட்டம் வரை வழங்கி வருகின்றது. Hospitality and Tourism Management எனும் பெயரில் MSU வழங்கி வரும் கற்கை நெறி டிப்ளோமா, இளமானி, முதுமானி, முதுகலைமானிப் பட்டங்களை வழங்குகின்றது.

சுற்றுலா முகாமை மற்றும் நலனோம்பல் துறையும் சிறப்பு இளமானி BA (Spe-Hons) பட்டத்தை வழங்கும் MSU, மாணவர்களை தொழிற் சந்தைக்குத் தயார்செய்யும் வகையில் பயிற்சிகளையும் வழங்குகின்றது. பொருளாதாரம், முகாமைத்துவம், சந்தைப்படுத்தல் ஆகிய துறைகளில் பயன்படுத்தப்படும் நவீன தொழில்நுட்பங்களில் மாணவர்கள் நன்கு பயிற்றுவிக்கப்படுகின்றனர்.

பொதுவாக இக்கற்கைநெறியில் பட்டம் பெறுவோர் பொதுவான நலனோம்பல் சுற்றுலா நடைமுறைகளைக் கையாள்வது மட்டுமன்றி, வணிகம் தொடர்பாக தீர்மானம் எடுக்கும் நடைமுறைகளிலும் ஆலோசனை வழங்குபவர்களாகப் பணியாற்றுகின்றனர்.

இக்கற்கைநெறியில் நடைமுறையிலுள்ள சுற்றுலாத் துறைசார் அறிவும் அனுபவமும் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றது. இதனால், டிப்ளோமா பட்டதாரிகள் சுற்றுலாத் துறை விவகாரங்களை கையாளும் திறன் கொண்டவர்களாக மாற்றப்படுகின்றனர். மேற்பார்வையாளர்களாகவும் முகாமையாளராகவும் பணியாற்றும் ஆற்றலைக் கட்டியெழுப்புகின்றனர்.

இத்தகைய கற்கைநெறிகளைப் பூர்த்தி செய்பவர்கள் சுற்றுலாத் துறை சார்ந்த பல்வேறு தொழில்களைப் பெற்று உயர்ந்த சம்பளத்தைப் பெறும் வாய்ப்புக்கள் உள்ளன. சர்வதேச அங்கீகாரம் பெற்ற சுற்றுலா ஹோட்டல்களில் பிரயாண ஏற்பாட்டு நடவடிக்கைகளில், பிரயாண முகவர் நிலையங்களில் மட்டுமன்றி, கூட்டுத்தாபனங்கள், சந்தைப்படுத்தல் நிறுவனங்கள் என பல்வேறு வகையான வேலைவாய்ப்புகளை இவர்களால் பெற முடிகின்றது.

கற்கைநெறிகளுக்கும் தொழிற்சந்தைக்கும் இடையிலான இடைவெளியை அதிகபட்சம் குறைக்கும் வகையிலான பாடநெறியாகவே சுற்றுலா மற்றும் நலனோம்பல் டிப்ளோமா, இளமானிப் பாடநெறிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. Association of Business Exercutive போன்றே MSU மற்றும் SLITHM என்பனவும் இலங்கையில் வழங்கி வரும் இத்துறைசார் பாடநெறிகள் அன்றாடம் பெருமளவிலான மாணவர்களைக் கவர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.

சாதாரண தரம், உயர் தரம் ஆகியவற்றைப் பூரணப்படுத்தும் மாணவர்கள் இப்பாடநெறியில் இணைந்து கற்க முடியும். www.msu.edu.lk என்ற முகவரியிலும், www.abe.lk என்ற முகவரியிலும் www.slithm.lk என்ற முகவரியிலும் மேலதிக தவல்களைப் பெறலாம்.

# இலங்கையில் அதிகரித்து வரும் நீரிழிவு நோய்

சமீபத்திய தரவுகளின்படி இலங்கையில் ஐந்தில் ஒருவர் நீரிழிவினால் பாதிக்கப்பட்டுள்ளார். பாதிப்படைந்துள்ள மூன்றில் ஒருவர் இன்னும் மிகச் சரியாக இனங்காணப்படாதுள்ளார். நீரிழிவு ஒவ்வொரு உடல் உறுப்பை யும் பாதிக்கக் கூடியது. மூளையில் கலங்கள் முதல் சுவாசப் பை வரை அதன் தாக்கம் உள்ளது. இதனால் உடல் உறுப்புக்களை வெட்டி அகற்ற வேண்டிய நிலைக்கு பலர் உட்பட்டுள்ளனர். பார்வைக் குறைபாடு மற்றும் மாரடைப்பு போன்ற நிலைமைகளையும் அது இலகுவில் உருவாக்கலாம்.



2025 ஆம் ஆண்டில் இலங்கையின் சனத்தொகையில் அரைவாசிப் பேர் இந்நோயினால் பாதிக்கப்படலாம் என எச்சரிக்கப்படுகின்றது. தற்போது இலங்கையில் 40 இலட்சம் பேர் இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வைத்தியர் பிரசாத் கடுலந்தவின் குழுவினர் நாடளாவிய ரீதியில் மேற்கொண்ட ஓர் ஆய்வின்படி பல புதிய தகவல்களும் புள்ளிவிபரங்களும் வெளியிடப்பட்டுள்ளன. பல்வேறு இன, வயது, பால் குழுவினரிடையே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. வடக்கும் கிழக்கும் இவ்வாய்வில் உள்ளடங்கப்படவில்லை. ஆயினும், 7 மாகாணங்களில் 5000 நோயாளிகளை வைத்து இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வில் ஆண்களை விட பெண்கள் நீரிழிவினால் அதிகம் பாதிக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அதேவேளை, கிராமப்புற மக்களை விட நகர்ப்புற மக்கள் இதனால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். நகர்ப்புற மக்களில் 16.4 வீதமானோர் நீரிழிவு நோயாளர்களாக உள்ளனர். கிராமிய மக்களில் இது 8.7 வீதமாக உள்ளது.

உணவுப் பழக்கமே இத[illegible] பிரதான காரணம் என அ[illegible] காணப்பட்டுள்ளது. மேல் மாகாணமே முதலிடத்தில் உள்ளது. ஊவா மாகாணம் மிகக் குறைந்தளவு நோயாளர்களைக் கொண்டுள்ளது.

வகை ஒன்று நோயாளர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளதோடு, வகை இரண்டு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது.

மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் 10.9 வீதமானோர் பெண்கள் எனவும், 9.8 வீதமானோர் ஆண்கள் எனவும் கண்டடையப்பட்டுள்ளது. சுமாராக இலங்கை மக்களில் 25 வீதமானோர் நீரழிவு நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இரத்தத்தில் குளுகோஸின் அளவு அதிகரித்திருந்தும் நீரிழிவு நோயாளர்களாக அடையாளப்படுத்த முடியாதவர்களும் இலங்கையில் அதிகம் உள்ளனர். நீண்டகாலத்தில் இரத்தச் சுற்றோட்டத் தொகுதி, இதயம், சிறுநீரகம், கண்கள், செவிப் புலன் என்பவற்றை நீரிழிவு பாதிக்கின்றது என்பதை இந்த ஆய்வு எடுத்துக் காட்டியுள்ளது.

ஆரம்பத்தில் நோயை இனங்கண்டால், முறையான சிகிச்சையின் மூலம் உள்ளக உறுப்புக்கள் பாதிக்கப்படுவதை பெருமளவு தடுக்கலாம் என வைத்தியர்கள் கருதுகின்றனர்.

# மீள்பார்வை 20 ஆவது ஆண்டு நிறைவில்...

28.06.2002 வெள்ளிக்கிழமை நாம் எமது வாகனத்தில் வாழைச்சேனை நகரை வந்தடைந்தோம். முந்தைய தினம் அங்கு மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களால் அந்நகரம் வரலாறு காணாத அழிவுகளைக் கண்டிருந்தது. தீயில் வெந்து கொண்டிருந்த நகரெங்கும் புகைந்து கொண்டிருந்தது. போர்க்கால சூழல் போல வீதிகள் வெறிச்சோடிக் கிடந்தன. ஒரு மயான அமைதியும் மக்கள் முகங்களில் பதற்றமும் சம விகிதத்தில் கூடாரமடித்துக் குடியிருந்தது.

அச்சம் படர்ந்த முகங்கள், அழுகை நிரம்பிய குரல்கள், ஆதங்கம் தெறிக்கும் கண்கள். நேற்றைய தினம் புலிகள் நடத்திய நர வேட்டையால் பல கோடிப் பெறுமதியான முஸ்லிம்களின் கடைகள் சாம்பல் மேடாய் காட்சி தந்தன. எல்லைப் புறங்களில் பல பள்ளிவாயல்களில் ஜும்ஆ நடைபெறவில்லை. அவசர அவசரமாக நகரைப் பார்வையிட்ட நாங்கள் ஜும்ஆவில் கலந்து கொள்வதற்கு எல்லைக் கிராமமான செம்மண்ஓடை தக்வா பள்ளிவாயலை அடைந்தோம்.

எமது வாகனத்தை 100மீற்றர் தொலைவில் நிறுத்திவிட்டு பள்ளி வளாகத்திற்குள் நுழைய ஒரு சில எட்டுக்களே எஞ்சியிருந்தன. இமாம் குத்பா ஓதுவது எம் காதுகளில் விழுந்தது. திடீரென குண்டுகள் சரமாரியாக வீசப்படும் சத்தம் எம் காதுகளைப் பிளந்தது. பள்ளிவாயல் வளாகத்திலிருந்து வெளியே பாய்ந்தோம். ஆச்சரியத்தில் சிறிது நேரம் உறைந்து போனோம். அச்சம் பரவியது, பதற்றம் நீடித்தது.

ஒரு சில கணங்களில் மீளவும் பள்ளிவளாகத்தை நோக்கி விரைந்தோம். அங்கு கண்ட [illegible]ட்சி உள்ளங்களைக் குமுற வைத்தது. கண்ணீரை வரவழைத்தது குண்டு பட்ட குருவிகள் போல் எங்கள் முஸ்லிம் சகோதரர்கள் அங்கு இரத்தத்தில் தோய்ந்து கிடந்தனர். மக்கள் அல்லோலகல்லோலப்பட்டனர். சிலர் அங்கிருந்து ஓடினர். செய்வதறியாது பலர் திகைத்திருந்தனர். உடனே நாம் வாகனத்தை நோக்கி வந்தோம். அது ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த காலம். எந்தவொரு வாகனமும் குறிப்பிட்ட பிரதேசத்திற்குள் நுழையவோ அங்கிருந்து செல்லவோ அனுமதியில்லை. ஒட்டு மொத்த பிராந்தியமும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது.

நாம் சென்ற வாகனம் அப்போதைய ரணில் அரசாங்கத்தில் கைச்சாத்திடப்பட்ட ரணில்–புலிகள் போர்நிறுத்த ஒப்பந்தத்தை கண்காணிப்பதற்கு நோர்வே அரசினால் வழங்கப்பட்ட வாகனம். அந்த வெள்ளை நிற கெப் வண்டியில் SLMM (Sri Lanka Monitoring Mission) என காட்டமாகப் பொறிக்கப்பட்டிருந்தது. இத்தகைய வாகனத்தை தனிப்பட்ட நோக்கத்திற்காக பயன்படுத்த முடியாது.

LTTE இன் பக்கமோ இலங்கை அரச படையினரின் பக்கமோ நடக்கும் யுத்தமீறல் சம்பவங்களை கண்காணிப்பதற்காகவே அக்குழுவில் இருந்தவர்களுக்கு வாகனம் வழங்கப்பட்டது. போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவில் ஒரேயொரு முஸ்லிமே இடம் பெற்றார். அவர் பொறியியலாளர் அப்துர் ரஹ்மான். அவரும் அவரது சாரதியும் பிர்தௌஸ் நளீமியும் நானுமே அவ்வாகனத்தில சென்றோம்.

நாம் கொழும்புக்கு மீள திரும்புவதற்கு வாகனத்தில் ஏறினோம். ஆனால், நாம் எதிர்பாராத காட்சியை அங்கு காண நேர்ந்தது. ஒரு கூட்டம் காயப்பட்டவர்களை தூக்கிக் கொண்டு எமது வாகனத்தைச் சூழ்ந்து கொண்டது. அவர்களை உடனடியாக பொலன்னறுவை வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல வேண்டுமென்று வற்புறுத்தினர். மறுப்புத் தெரிவித்தால் எம்மைத் தாக்கும் நிலைக்கு வரலாம் என்பதை உணர்ச்சிக் கொந்தளிப்புமிக்க அவர்களது குரல்கள் எமக்குச் சொல்லியது. சிலர் வெளிப்படையாகவே மிரட்டுவதற்கு ஆரம்பித்து விட்டனர்.

எமக்கு மிகப்பெரும் தர்ம சங்கடம். நாங்கள் எல்லோரும் முஸ்லிம்களாக இருந்தோம் என்பதுதான் அவர்களின் கோரிக்கைக்கு எங்களைப் பணிய வைத்தது. காயப்பட்டவர்களை வண்டியின் பின்பக்கத்தில் இரண்டு பேரையும், முன்பக்கத்தில் இரண்டு பேரையும் ஏற்றிக் கொண்டோம். துணைக்கு இரண்டு பேர் ஏறினர். வண்டி காற்றைக் கிழித்துக் கொண்டு பறந்தது. காயப்பட்டவர்களில் முபாரக் என்பவரின் நிலை சற்று கவலைக்கிடமாக இருந்தது. அவரது உயிர் எந்த வேளையிலும் பிரிந்து விடலாம் என்பதை பெருக்கெடுத்த அவரது இரத்தம் உறுதி செய்தது.

காயப்பட்டவர்களை ஏற்றிக் கொண்டு நானும் பிர்தௌஸும் நின்றவண்ணமே சென்றோம். ஒரு கடும் கோடை. அனல் தகிக்கும் வெயில். பாதுகாப்பற்ற சூழல், உயிருக்கு எந்த உத்தரவாதமுமில்லை. செல்லும் வழியிலும் புலிகள் ஒழிந்திருக்கின்றனர். பசி வேறு வயிற்றை எரித்துக் கொண்டிருக்கிறது. இவ்வாறான இக்கட்டான நேரத்தில் இரத்தம் தோய்ந்த அந்த சகோதர்களை சுமந்து கொண்டு நகர்கிறோம்.

இவற்றையெல்லாம் நினைத்துப் பார்த்த பொழுது கன்னத்தில் சில கண்ணீர் திவலைகள் வடிந்தோடின. முஸ்லிம் சமூகம் எதிர்கொண்டிருந்த நெருக்கடிகளையும் சோதனைகளையும் கண்களால் பார்த்த அந்த அக்கினி அனுபவம் பசுமரத்தாணி போல் இன்னும் நெஞ்சில் எஞ்சியுள்ளது.

பொலனறுவை வைத்தியசாலையில் அவர்களை அனுமதித்துவிட்டு வாழைச்சேனைக்கு மீண்டும் திரும்பினோம். அப்போது மணி ஐந்தரையைத் தாண்டிவிட்டது. பகலுணவு அதற்குப் பின்னர்தான் கிடைத்தது. ஆறரை மணியளவில் ஒரு ஆதங்கமான செய்தி கேள்விப்பட்டோம். சீரியஸான நிலையிருந்த முபாரக் உயிர் துறந்துவிட்டார் என்பதுதான் அந்த செய்தி.

செம்மண்ணோடை தக்வா பள்ளிவாயலைத் தாக்குவதற்கு கருவாக்கேணி தமிழ் கிராமத்திலிருந்து ஆயுதங்களுடன் திரண்டுவந்த புலிகளும், தமிழ் காடையர்களும்தான் பள்ளிவாயல் வளாகத்தை நோக்கி கைக்குண்டை வீசினார்கள் என்பது பின்னர் எங்கள் விசாரணைகளிலிருந்து தெரிய வந்தது.

2002 இல் ரணில்–பிரபா மேற்கொண்ட போர்நிறுத்த ஒப்பந்தம் முஸ்லிம்களை நடுத்தெருவில் அநாதைகளாக விட்டதோடு, புலிகளின் பாசிஸத்திற்கு எவ்வளவு உரமூட்டியது என்பதை மூதூரில் தொடங்கி வாழைச்சேனையில் முடிந்த [illegible]வரம் தெளிவாகக் காட்டியது.

அபூ ஆகிப் ஸெய்ன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராணுவம்... (1ம் பக்கத் தொடர்)



முப்படைகளினால் தடை விதிக்கப் பட்டிருந்தது. முதலமைச்சர் கலந்து கொள்ளும் நிகழ்வுகளை புறக்கணிக்கப் போவதாகவும் முப்படையினரால் அறி விக்கப்பட்டிருந்தது. தற்பொழுது இந்தத் தடை நீக்கப்பட்டிருப்பதாக முதலமைச் சரின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இந்த முடிவு ஜனாதிபதி நாட்டில் இல்லா நேரத்தில் முப்படையினரால் எடுக்கப்பட்டிருந்த நிலையில் அரசியல் பின் புலத்தில் எடுக்கப்பட்ட முடிவு என கிழக்கு மாகாண முதலமைச்சர் நசீர் அஹமத் இது தொடர்பில் தமது கண்ட னத்தையும் வெளிப்படுத்தியிருந்தார்.

முதலமைச்சருக்கு இராணுவம் விதி த்த தடையானது அவர் முஸ்லிம் என்ப தனாலும், அவர்களை அடக்கி வைக்க வேண்டும் என்ற மனோபாவத்தினாலுமே நடந்துள்ளதாகவும் கருத்துக்கள் தெரிவிக் கப்பட்டு வருகின்றன.

முதலமைச்சர்களுக்கு தடைவிதிப்ப தற்கு எந்தவொரு அமைச்சுக்கோ அல் லது படையினருக்கோ அதிகாரம் கிடை யாது. கிழக்கு மாகாண முதலமைச்சர் முஸ்லிம் என்ப தனாலேயே எதிர் ப்புக்கள் கிளம் பின என வாராந்த அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவிய லாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்ட அமைச்சரவை பேச்சாளர் ராஜித்த சேனா ரட்ன குறிப்பிட்டார்.

அமைச்சரவை பேச்சாளரின் இந்தக் கருத்துக்கள் முஸ்லிம் சமூகத்தின் மத்தி யில் இராணுவத்தின் நடவடிக்கைகள் தொடர்பிலான சந்தேகத்தை வலுவடை யச் செய்துள்ளன. அரசாங்க ஊழியர் ஒருவருக்கு ஏசியதற்காக முதலமைச்சர் தொடர்பிலேயே இராணுவம் இவ்வாறு நடவடிக்கை எடுக்கும் என்றிருக்கும் போது சாதாரண முஸ்லிமின் நிலை எப் படி இருக்கப் போகிறது என்பது குறித் தான கேள்விகள் எழத் துவங்கியுள்ளன.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் நிகழ்ந்த கறுப்பு ஜூன் சம்பவங்களின் போதும் இராணுவம் அளுத்கமையில் முஸ்லிம்களுக்குப் பாரபட்சம் காட்டிய தாகப் பலரும் தெரிவித்திருந்தனர். அதே போல கடந்த ஆட்சிக் காலத்தில் தாண்ட வமாடிய பொதுபலசேனா அனர்த்தங் களின் போதும் இராணுவம் முஸ்லிம் களைப் பாதுகாக்கத் தவறியிருந்தது. இந்த நிலையில் இராணுவத்தின் இத்த கைய இனவாத நிலைப்பாடுகள் நல் லாட்சி அரசாங்கத்திலும் தொடரக்கூடாது என முஸ்லிம் சமூகம் எதிர்பார்க்கிறது.

## ஹஜ் முகவர்களின்... (1ம் பக்கத் தொடர்)

சேவைகள், பராமரிப்புக் கட்டணம் அனைத்தும் இந்தக் கட்டணத்துக்குள்ளால் அடங்கும். குர்பானி செலவுகள் கட்டணத்துடன் சேர்க்கப்படவில்லை.

பட்டியலில் குறிப்பிட்டுள்ள தொகைக்கு மேலதிகமாக செலுத்துவதைத் தவிர்ந்து கொள்ளுமாறும், பட்டியலில் குறிப்பிடப்படாத முகவர்களைத் தவிர்ந்து கொள்ளு மாறும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எச்.எம். ஸமீல் யாத்திரிகர்களைக் கேட்டுக் கொள்கிறார்.

## கொழும்பில் சேரும்... (1ம் பக்கத் தொடர்)



நீண்ட நாட்களாகத் தேங்கி இருப்பதற்குக் கார ணமாகச் சொல்லப்படுகிறது. இதனை நிவர்த்திக் கும் வகையில் புதிதாக இரண்டு சுரங்க வாயில் களை அமைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ள தாக மாநகர, மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சி ன் செயலாளர் நிஹால் ரூபசிங்ஹ தெரிவித்தார்.

பெளத்தாலோக மாவத்தையிலிருந்து பம்பலப் பிட்டி வரை ஒரு சுரங்க வாயிலும், கொழும்பு துறைமுகத்துக்கு வடக்காக தற்போதுள்ள முகத்துவார சுரங்கவாயிலுக்கு பக்கவாட்டில் அதனைவிடப் பெரிய சுரங்க வாயி லொன்றும் அமைக்கப்படவிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இதற்கென உலக வங்கி 100 மில்லியன டொலர்களை வழங்கியிருப்பதாகவும் அடுத்த இரண்டு வருடங்களில் இந்தத் திட்டம் நிறைவேற்றி முடிக்கப்படவிருப்ப தாகவும் புதிய சுரங்கவாயில்கள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் தற்போது கடலுக்குச் செலுத்தப்படுகின்ற நீரின் அளவை இரண்டு மடங்காக அதிகரிக்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தற்போது நான்கு சுரங்கவாயில்கள் கொழும்பிலே இருக்கின்றன. வெள்ளவத்தை, தெஹிவல, முகத்துவாரம் சுரங்க வாயில்கள் கடலுக்கு நீரைச் செலுத்தக் கூடிய வகையிலும், நாகலம்வீதி சுரங்கவாயில் களனி கங்கைக்கு நீரைச் செலுத்தும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ளன.

புதிய சுரங்கவாயில்கள் அமைக்கப்பட்டதன் பின்னர் வெல்லம்பிட்டிய பகுதிகளில் நீர் தேங்கும் நிலைமை உருவாக மாட்டாது என எதிர்பார்க்கப்படுகிறது.

## வெள்ளத்தில்... (6ம் பக்கத் தொடர்)

ஜமாஅத்தினருடன் முறுகல் நிலை தோன்றியிருக்கிறது. நிலைமை தீவிரமடையு முன்னர் நிவாரணப் பணிக்கு வந்தவர்கள் அங்கிருந்து திருப்பி அனுப்பப்பட்டி ருக்கின்றனர்.

சுனாமி போல் பாரிய சேதங்களை விளைவித்த இந்த வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட வீடுகளையும் பாதைகளையும் மல்வானையின் மைந்தர்களே சுத்தி கரித்து முடிப்பது என்ற தீர்மானத்தை அறியாது களப்பணியில் இறங்கிய ஜமா அத்தினருடனும் கைகலப்பு நடந்திருக்கிறது. இது பொலிசார் தலையிட்டு இணக்கப் படுத்தும் அளவுக்கு எல்லை கடந்து போயிருக்கிறது.

இந்தச் சம்பவங்களில் யார் சரி, யார் பிழை என்பதை விவாதிப்பதை விட சமூகத்தில் கவனிக்கப்படாது விடப்பட்ட பிரிவினைகள் கூர்மை அடைந்திருப்பதனை சமூகத் தலை மைகள் கவனத்தில் எடுக்க வேண்டும். அரசாங்கம் ஹெலிகொப்டரில் கொண்டு வந்து கொட்டிய உணவுப் பார்சலை விட முஸ்லிம் சமூகம் வழங்கிய உணவுப் பார்சலை தமக்கு ஆகாத ஒன்றாகக் கருதும் அளவுக்கு நிலைமை தீவிர மடைந்திருப்பதை சமூகத் தலைமைகள் இனியாவது சிந்திக்க வேண்டும்.

குறிப்பிட்டுச் சொல்லக் கூடியதான சமூகத் தலைமையொன்று இல்லாமல் இலங்கை முஸ்லிம் சமூகம் தடுமாறிக் கொண்டிருக்கும் நிலையில் கட்டுக்கோப்பான தலைமைத்துவத்துடன் இந்தச் சிந்தனைப் பிரிவினர் கட்டுக்கோப்புடன் இயங்கி வருகின்றனர். இவர்களுக்கென தனியான சமூக அமைப்பொன்றை அமைத்து இவர்கள் செயற்படுகின்றனர். இலங்கை முஸ்லிம் சமூகத்துடன் சேர்ந்து இவர்கள் பெருநாள் கொண்டாடுவதில்லை. இவர்களுக்கென தனியான தொழுகை நேரம் கூட இருக்கிறது. இலங்கை முஸ்லிம் சமூகத்தின் எந்தக் கட்டுக் கோப்புக்குள்ளாலும் அடங்காத வகையில் இவர்கள் பிரிந்தே செயற்படுகின்றார்கள்.

வெள்ள நிவாரணப் பணிகளின் போது நடைபெற்ற சம்பவங்கள் இந்தப் பிரிவினை யின் ஆழத்தை படம் போட்டுக் காட்டுகிறது. சில வேளைகளில் முஸ்லிம் சமூகத் துக்குள்ளாலேயே பல கூறுகள் பிரிந்து ஒருத்தரை ஒருத்தர் எதிரிகளாகக் கருதும் அளவுக்கு இந்தப் பிரிவினைகள் இட்டுச் செல்லக் கூடும் என்பதை முன்னறிவிப்ப தாகவும் இந்தச் சம்பவங்களைப் பார்க்க முடியும்.

இந்த சிந்தனைப் பிரிவைச் சேர்ந்த 131 பேர் இணைந்து முஸ்லிம் சமூகத்தின் மற்றொரு பிரிவைச் சேர்ந்த ஒருவரைக் கொலை செய்தமையும் அல்லது கொன்றதாகப் பொய்ச் சாட்சி சொன்னமையும் கடந்த காலங்களில் நடந்திருக்கின்றன. கொலை செய்தவர்களை மாலையிட்டு ஊர் வலமாக அழைத்துச் சென்ற கொண்டாட்டங்களும் மல்வானையில் நடந்திருக்கின்றன.

நாளும் பொழுதும் இப்படிக் கூர்மையடைகின்ற சமூகத்துக்கு உள்ளேயான பிளவுகள் தொடர்ந்தும் கவனிக்காமல் விடப்படுமானால் முஸ்லிம் சமூகத்தின் கட்டுக்கோப்பை தாரை வார்த்து விட நேரிடும். வெள்ள அனர்த்தத்தின் போது பல மடைந்த முஸ்லிம் சமூகத்தின் கட்டுக்கோப்பிலிருந்து யாரும் தனிமையாகி விடாமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். தனித்திருக்கும் ஆட்டைத்தான் ஓநாய் பிடிக்கிறது என்பது எல்லோருக்கும் பொதுவான நாயக வாக்கு. ஒவ்வொரு பிரிவினரும் உலமாக்கலும் ஓடத்திலே தனித்தனியாக ஓட்டை போட அதனை ஏனையவர்கள் பார்த்துக் கொண்டிருப்பார்களானால் முழு சமூக ஓடமும் மூழ்கிப் போகும்.

## மக்கள் மீது... (7ம் பக்கத் தொடர்)



என்ற தகவல்கள் எமக்கு கிடைத்துள் ளன. எனவே அப் போதிருந்த இராணு வத் தலைமைகளும் பாதுகாப்புத் துறை பிரதானிகளுமே இதற்கு பொறுப்பு சொல்ல வேண்டும். அப்போதைய பாது காப்புச் செயலாளருக்கு அச்சுறுத்தல் நிலவியபோது அதனோடு சம்பந்தப் பட்டவர்களை கைதுசெய்து சிறையில் அடைத்தார்கள். அவ்வளவு திறமையான அதிகாரிகள் உள்ளார்கள். ஆனால் லச ன்தவின் கொலையுடன் தொடர்புடைய வர்கள் எவரும் இதுவரையில் கைது செய்யப்படவோ விசாரிக்கப்படவோ இல்லை.

இலங்கை இராணுவம் உலகில் சிற ந்த ஒழுக்கமிகு இராணுவம் என சொல் லப்படுகிறது. அவ்வாறு நற்பெய ருள்ள இராணுவமொன்று ஒருபோதும் உத்தர வொன்றில்லாமல் இராணுவ முகாமை விட்டும் வெளியே செல்வதில்லை. இவர்கள் கட்டளை பிரகாரம் செயற் படுபவர்கள். இவர்களுக்கு எங்கிருந்து உத்தரவுகள் வந்தது?

- **பல்லின மக்கள் வாழும் இலங்கை சூழலில் நல்லிணக் கத்தை கட்டியெழுப்புவதில் ஊடகங்களின் பங்களிப்புகள் திருப்திகரமானதாக உள்ளதா?**

யுத்தத்திற்கு பின்னர் சமூகங்களுக் கிடையிலான உறவுகளை வலுப்படுத்து வதற்குரிய நல்ல சூழல் காணப்பட்ட பொழுதிலும் அது முறையாக கைக் கொள்ளப்படவில்லை. பதிலாக சமூகங் களுக்கிடையிலான உறவுகளை அறுத் தெறியும் வகையிலான இனவாதப் பிர சாரங்கள் திட்டமிட்ட முறையில் முன் னகர்த்தப்பட்டு வந்தன. சில ஊடகங் களும் இனவாத அமைப்புக்களின் ஊது குழல்களாக செயற்பட்டன.

நல்லிணக்கம் என்றால் என்ன என் பதனை சரியாக மக்களுக்கு தெளிவு படுத்தும் பொறுப்பை ஊடகங்கள் ஏற்க வேண்டும். தீவிரவாத அமைப்புக்க ளுக்கு இடமளிக்கப் போவதில்லை என்ற நிலைப்பாட்டில் சகல ஊடகங் களும் ஒன்றிணைய வேண்டும். ஊடகங் கள் வெள்ளப்பெருக்கு தொடர்பில் பேசின. வடக்கு மக்களும் வெள்ளத் தால் பாதிக்கப்பட்டார்கள். ஆனால் அங் குள்ள மக்கள் எதிர்கொண்ட பிரச்சினை கள் தொடர்பில் எத்தனை ஊடகங்கள் குரல் எழுப்பின? சில போது அங்குள்ள வெள்ளப்பெருக்கு இங்கு ஏற்பட்ட தைப் போன்று கடுமையற்றதாக இருக்க லாம். ஆனால் அவர்களும் ஒருவகை யில் பாதிக்கப்பட்டார்கள்.

வடக்கிலுள்ள பெரும்பாலான மக்க ளுக்கு நிலையான வீடுகள் இல்லை. அவர்கள் தற்காலிக கூடாரங்களில் வாழ் கிறார்கள். கடுமையான காற்றுடன் கூடிய மழை ஏற்படும் பொழுது அக் கூடாரங்கள் உடைந்து விழும் நிலையில் உள்ளன. அவை பற்றியும் ஊடகங்கள் பேச வேண்டும். அப்போது தான் எல் லோரும் ஒன்று என்கின்ற மனநிலை வாசகர்கள் மத்தியில் உருவாகும். நாம் வித்தியாசமான அணுகுமுறைகளை காண்பிப்பது பொருத்தமல்ல. எல்லோ ரும் ஒன்று என்ற நிலையைத் தோற்று விக்க வேண்டும்.

- **வெள்ள அனர்த்தம் கொழும்பில் ஏற்படுத்திய பாதிப்புக்களுக்கு கடந்த அரசாங்கம் பொறுப்புச் சொல்ல வேண்டுமல்லவா?**

தற்பொழுது கிடைக்கப் பெற்றுள்ள தகவல்களின் படி அனர்த்த முகாமைத் துவ திட்டங்களுக்கென வழங்கப்பட்ட நிதி வேறு திட்டங்களுக்கு பயன்படுத் தப்பட்டுள்ளமை ஊர்ஜிதமாகியுள்ளன. அது போன்று பெருமளவிலான நிவார ணப் பொருட்களும் மோசடி செய்யப் பட்டுள்ளன. இன்னும் பல அனர்த்த முன் எச்சரிக்கை கருவிகள் சேதமடைந்த நிலையில் பழுதுபார்க்கப்படாமல் உள் ளன. அனர்த்த முகாமைத்துவ அமைச் சொன்றும் நிறுவப்பட்டுள்ளது. ஆனால் குறித்த அதிகாரிகள் எவரும் இதற்கு பொறுப்புச் சொல்ல முன்வருவதில்லை. இலங்கையில் வருடத்திற்கு ஒரு முறை ஏதாவதொரு அனர்த்தம் இடம்பெற்றுக் கொண்டுதான் உள்ளது. எனவே அனர்த்த முகாமை தொடர்பில் இங்கு பாரியதொரு பிரச்சினை உள்ளது.

ஏதாவதொரு அனர்த்தம் நிகழும் பொழுது செயற்படக்கூடிய முறை தொடர்பிலான பொறிமுறையொன்று எம்மிடம் இல்லை. அனர்த்தமொன்று ஏற்படும் பொழுது குறிப்பிட்ட பிரதேசத் திலுள்ள பொறுப்பு வாய்ந்த அரச அதி காரிகள் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு சென்று பாதிக்கப்பட்டவர்களை கணக் கில் எடுத்து நிவாரணப் பணிகளை செய்ய வேண்டும். இல்லாவிட்டால் சில ருக்கு நிவாரணம் கிடைக்கும். இன்னும் சிலருக்கு கிடைக்காது போகும்.

- **புதிதாக வளர்ந்து வரும் ஆய்வு ரீதியான தகவல்களை வெளிக் கொணரக்கூடிய ஊடகவியலா ளர்களுக்கு ஒரு புலனாய்வுப் பத்திரிகையின் ஆசிரியர் என்ற வகையில் கூற விரும்பும் செய்திகள் என்ன?**

புலனாய்வுத் துறை ஊடகவியல் என்பது இயல்பாகவே ஒருவருக்குள் வரவேண்டியதொரு விடயம். நாம் அக் காலப்பகுதியில் இக்கலையை மிகவும் கஸ்டப்பட்டுப் படித்தோம். நீண்ட தூரம் பிரயாணம் செய்ய வேண்டி வரும். சிலபோது முக்கிய தகவல்களை பெற சிலரை தொடர்புகொள்ள முடியாமலும் போகும். அப்போது அங்கு செல்ல நேரிடும். மழையில் நனைய வேண்டி யேற்படும். வெயிலிலும் காய வேண்டி வரும்.

குறித்த விடயம் தொடர்பிலான தக வலைப் பெற வேண்டும் என்ற ஆர்வம், தேவை எம்மில் இருக்க வேண்டும். எம்மில் ஆர்வம் இருந்தால் செய்ய முடியாதது ஒன்றும் இருக்காது. நான் என்ன செய்கிறேன் என்பது பற்றிய மனப்பூர்வ உணர்வும் அதில் நம்பிக்கை யும் காணப்பட வேண்டும். நான் இதை ஏன் செய்கிறேன் என்பது தொடர்பிலான விளக்கம் எம்மிடம் இருக்க வேண்டும்.

இவை எல்லாம் ஒருவரிடம் இணை யும் போதே ஒருவருக்கு சிறந்ததொரு புலனாய்வுத் துறை ஊடகவியலாளராக முடிகிறது. திறந்த மனதோடு இதனை ஆரம்பிக்க வேண்டும். எந்தவொரு விவ காரத்தையும் பற்றி ஆராய முன்னர் அது பிழை இது பிழை என்கின்ற இடத்தி லிருந்து ஆரம்பிக்கக் கூடாது.

இவ்வாறானதொரு விடயம் ஏற்பட் டுள்ளது என்னும் அமைப்பில் அதை திறந்த மனதுடன் ஆரம்பிக்க வேண்டும். அதன் உண்மைத் தன்மை என்ன என் பதை தேடிப்பார்க்க வேண்டும் என்ற உணர்வுடனேயே செல்ல வேண்டும்.

நாம் ஒரு முடிவோடு அங்கு செல் லும் போது ஒரு தரப்பினருக்கு அத னால் அநீதி ஏற்படும். புலனாய்வுத் துறை ஊடகவியலாளர் ஒருபோதும் தனிப்பட்ட உணர்வுகளுக்கு அடிபணி யக் கூடாது. எல்லோருக்கும் நீதியை நிலை நாட்ட வேண்டும். சமூக உயர்வும் எம்மில் மேலோங்கியிருக்க வேண்டும்.

## ஊழல் குற்றச்சாட்டுகள்... (5ம் பக்கத் தொடர்)



திவிநெகும அபிவிருத்தித் திட்ட நிதியிலிருந்து 204 மில்லியன் ரூபாய் செலவில் தேர்தல் கால போஸ்டர்கள் அச்சிடப்பட்டுள்ளன. இது தேர்தல் சட் டங்களை மீறுவதோடு, இந்நிதியும் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டுள் ளது. சட்டமா அதிபர் திணைக்களம் இவ்வழக்கை 2015-04-21/CR/5/15 எனப் பெயரிட்டுள்ளது. பிரதான குற்ற வாளிகளாக பசில் ராஜபக்ஷவும் ரண வக்க என்பவரும் அடையாளப்படுத்தப் பட்டுள்ளனர்.

அதேபோன்று முன்னாள் வெளிவிவ கார அமைச்சினால் 35.9 மில்லியன் பெறுமதியான இரண்டு ஆடம்பர பேரூந்துகள் சட்டவிரோதமாகக் கொள் வனவு செய்யப்பட்டுள்ளன. வழக்கு இலக்கம் 2015-05-29/CR/5/15. குற்ற வாளிகளாக ஷசிந்திரா ராஜபக்ஷ, சஜின் வாஸ் குணவர்தன, பிரிகேடியர் கொமின் ரணசிங்க குற்றவாளிகளாக்கப்பட்டுள்ள னர்.

தவிரவும் தருணியட அதக் மற்றும் இலங்கை டெலிகொம், திவிநெகும, கோட்டை மாநகர சபை, தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக் குழு, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் என ஏகப்பட்ட அரச நிறுவ னங்களின் இடம்பெற்ற ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுகள் மிகுந்த சாட்சியங்களு டனும் தகுந்த ஆதாரங்களுடனும் நிரூ பணமாகியுள்ளன. ஆனால், எவரும் இதுவரை கைதுசெய்யப்படவில்லை.

ஒன்றரை ஆண்டுகள் கழிந்து எதுவும் நடக்கவில்லை என்பது மக்களின் சந்தே கத்தை வலுப்படுத்துவதோடு, நம்பிக் கையையும் மழுங்கடித்து வருகின்றது. அவ்வப்போது எள்ளலாகவும் துள்ள லாகவும் பேசிவரும் பிரதமர்தான் ராஜ பக்ஷாக்களை காப்பாற்றி வருகிறாரா அல்லது தனது கட்சி, பிளவுகளால் சிதை ந்து விடும் என அஞ்சும் ஜனாதிபதி அவர்களைக் காப்பாற்றி வருகிறாரா என்ற சந்தேகம் மக்களிடையே வலுவாக வளர்ந்து வருகின்றது.

எளியவனின் கழுத்தைப் பிடித்து நசுக்கும் சட்டம், வலியவன் தப்பித்துக் கொள்ளும் வகையில் அதிகார பீடங்க ளால் மாற்றப்பட்டிருப்பது மிகவும் ஆபத்தானது. சிவில் சமூகம் இறுதியாக நம்பிக்கை வைக்கும் ஒரே இடம் நீதி மன்றங்களாகும். இலங்கையில் கடந்த ஒன்றரை ஆண்டுகள் நடந்தேறி வரும் சம்பவங்களால் நீதித்துறை மீதான மக்கள் நம்பிக்கையும் சிறிது சிறிதாக தகர்ந்து வருகின்றது.

நல்லாட்சி என்பது நாம் எல்லோரும் எப்போதும் கண்டு வரும் ஒரு கன வாகத்தான் நீடிக்குமோ என்ற அச்சம் நம்மை ஆட்கொள்கின்றது.


மீள்பார்வை **உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மீள்பார்வை தனிப் பிரதி | - ரூபா 40.00 | இந்தியா | | மத்திய கிழக்கு நாடுகள் | - 4000.00 | ஐக்கிய இராச்சியம் | - 5500.00 |
| 13 இதழ்கள் | - ரூபா 650.00 | தனிப் பிரதி | - ரூபா 100.00 | மலேசியா | - 4000.00 | அமெரிக்கா | - 6500.00 |
| 26 இதழ்கள் | - ரூபா 1300.00 | ஒரு வருடம் | - ரூபா 3500.00 | ஐக்கிய அறபு இராச்சியம் | - 4000.00 | அவுஸ்திரேலியா | - 4700.00 |
| | | | | | | சீனா | - 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்:

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline: 077 3207569, People's Bank A/C: 056100153678164 (Branch: Sri Sangaraja Mawatha)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கொஞ்சம் முயற்சிக்கலாமே?

| | | | | |
|---|---|---|---|---|
| B | R | A | V | E |
| | E | B | R | |
| | | V | | B |
| | B | R | | |
| | | E | B | |



மேலே உள்ள அட்டவணையில் Brave என்ற ஆங்கில் சொல் நிரலாகவும் நிறையாகவும் எல்லா வரிகளிலும் வரவேண்டும். கொஞ்சம் முயற்சி செய்து பாருங்கள்.



## ரமழானில் நான் என்ன செய்ய வேண்டும்

சிறுவர்களே ரமழானில் என்ன செய்யப் போகிறீர்கள். நிச்சயமாக வீண் விளையாட்டுக்களில் ஈடுபடமாட்டீர்கள் என்று உறுதியாக நம்புகின்றோம். அல்குர்ஆனை ஓதுவதற்கு திட்டமிட்டிருப்பீர்கள். தராவீஹ் தொழுகைக்கு செல்ல திட்டமிட்டிருப்பீர்கள். உங்களது திட்டமிடல்களுக்கு ஒரு வழிகாட்டலாக இந்தக் குறிப்புகள் உதவும் என்று நினைக்கின்றோம்.

1. உங்கள் பெற்றோர், சகோதர சகோதரிகள், நண்பர்களிடம் ரமழான் பற்றி கேட்டு தெரிந்து கொள்ளுங்கள். ரமழானின் முக்கியமான நோக்கம் என்ன என்பது பற்றி தெரிந்து கொள்ளுங்கள். ரமழானை எப்படிப் பயன்படுத்தலாம் என்பதற்கான வழிகாட்டல்களை வாசித்தும் தெரிந்து கொள்ளலாம்.
2. ரமழானை வரவேற்பதற்கான வாழ்த்து அட்டைகள், ரமழான் மாதத்தின் சிறப்புக்கள் பற்றிய அட்டைகளை தயாரித்து உங்கள் வீட்டின் பல பகுதிகளிலும் காட்சிப்படுத்துங்கள்.
3. ரமழானில் நிறைய வரலாற்று நிகழ்வுகள் நடை பெற்றுள்ளன. அவற்றை தேடி வாசியுங்கள்.
4. கைப்பணி பொருட்களை செய்து பாருங்கள்.
5. உங்கள் நண்பர்களை அழைத்து சிறிய இப்தார் நிகழ்வொன்றை மேற்கொள்ளுங்கள்.
6. வயது முதிர்ந்தவர்களுக்கு ஏதேனும் சிற்றுண்டிகளை இப்தாருக்கு கொண்டு சென்று, வழங்கிடுங்கள்.
7. ஒவ்வொரு தொழுகைக்குப் பின்னரும் அல்குர் ஆனை ஓதிடுங்கள்.

## வரலாற்றில் ஒரு நிகழ்வு

தொகுப்பு: ஏ.ஸீ.எம். நதீர்

யர்முக் போரில் சுவாரஸ்யமான சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. ரோமப் படைக்கு தலைமை தாங்கி வந்திருந்த தளபதிகளுள் ஒருவரான ஜர்ஜாஹ் என்பவர் காலித் பின் வலீத் (ரழி) அவர்களைச் சந்தித்து, காலித் பின் வலீத் அவர்களே..! நான் கேட்கும் கேள்விகளுக்கு ஒளிவு மறைவின்றி, உண்மையான பதிலை நீங்கள் கூற வேண்டும் என்றார்.

காலித் பின் வலீத் (ரழி) அவர்கள்: கேளுங்கள்..! நிச்சயமாகப் பதிலளிக்கின்றேன்.

உங்களது இறைத்தூதர் (ஸல்) அவர்கள் வானத்திலிருந்து பிரத்தியேகமாக வாளொன்றைப் பெற்று உங்களிடம் கொடுத்துள்ளார்களோ..! ஏனெனில், உங்களைச் சந்திக்கும் எதிரிகள் எல்லோரும் தோற்று ஓடுகின்றார்களே..! அதனால்தான் கேட்கின்றேன் என்றார், ஜர்ஜாஹ்.

இல்லை.. இல்லை..! வானத்திலிருந்து பிரத்தியேகமாக எந்த வாளும் வரவில்லை. இது காலித் பின் வலீத் (ரழி) அவர்களின் பதிலாக இருந்தது.

பின் ஏன் உங்களை ஸைபுல்லாஹ் (அல்லாஹ்வின் வாள்) என்றழைக்கின்றார்கள்?

அல்லாஹ் எங்களுக்கு வழிகாட்ட இறைத்தூதரை அனுப்பி வைத்தான். சிலர் அவர் கூறிய கருத்துக்களை ஏற்றுக் கொண்டார்கள், அவர் மீது அன்பு கொண்டார்கள். இதயங்களில் ஏற்றுக் கொண்ட அந்த கொள்கையை உயிரை விடவும் நேசித்தார்கள். தூதருக்குக் கட்டுப்பட்டார்கள். பலர் அவரை எதிர்த்தார்கள், அவர் கொண்டு வந்த கொள்கையை ஏற்க மறுத்து உதாசீனம் செய்தார்கள்.

முன்பொரு காலத்தில் இறைத்தூதர் (ஸல்) அவர்களையும், அவர்களைப் பின் பற்றியவர்களையும் குறிப்பாக இஸ்லாத்தின் கொடிய விரோதியாக இருந்தவன் தான் நான். அல்லாஹ் எனது இதயத்தில் இஸ்லாத்தின் வெளிச்சத்தை ஏற்றி வைத்தான், நான் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் முன்னிலையில் சத்தியத்தை ஏற்றுக் கொண்டேன், இஸ்லாமிய அணியில் நானும் ஒருவனானேன்.

ஒரு முறை இறைத்தூதர் (ஸல்) அவர்கள் என்னை பார்த்துக் கூறினார்கள்: காலித் பின் வலீத் (ரழி) அவர்களே..! நீங்கள் அல்லாஹ்வின் வாள்..! உங்களது வாள் வலிமையானது. எதிரிகளின் வல்லமையை அழித்தொழிக்கும்.

எனவேதான், அன்றிலிருந்து எனது பெயருக்கு முன் ஸைபுல்லாஹ் என்ற பட்டம் இணைந்து கொண்டது. நாங்கள் ஓரிறைக் கொள்கையை மக்கள் முன் வைக்கின்றோம். இறைவன் ஒருவனே..! வணங்கத்தக்க இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்று சான்று பகருமாறு மக்களை அழைக்கின்றோம் என்று கூறினார் காலித் பின் வலீத் (ரழி) அவர்கள்.

இந்தக் கொள்கையை நான் ஏற்றுக் கொண்டால் நீங்கள் பெற்றிருக்கக் கூடிய இதே நற்பேறுகளை நானும் அடைந்து கொள்ள முடியுமா? இன்னும் காலித் பின் வலீத் (ரழி) அவர்களே..! குறிப்பாக உங்களைப் போன்றே நானும் ஆக முடியுமா? என்று கேட்டார் அந்த ரோமப் படைத் தளபதி.

ஏன் முடியாது. நிச்சயமாக முடியும். இன்னும் என்னை விட நீங்கள் உயர் தகுதிகளைப் பெற்றுக் கொள்ளவும் முடியும் என்றார்கள் காலித் பின் வலீத் (ரழி) அவர்கள். காலித் பின் வலீத் (ரழி) அவர்களின் விளக்கத்தினால் கவரப்பட்ட ஜர்ஜாஹ் என்ற அந்த ரோமப் படைத்தளபதி, காலித் பின் வலீத் (ரழி) அவர்களே..! நான் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள விரும்புகின்றேன். எனக்கு ஷஹாதாவை கற்றுத் தாருங்கள். வணங்கத்தக்க இறைவனாக அல்லாஹ்வை ஏற்றுக் கொள்கின்றேன், அவனால் அனுப்பி வைக்கப்பட்ட தூதர் முஹம்மது (ஸல்) அவர்களையும் ஏற்றுக் கொள்கின்றேன் என்று கூறி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்.

காலித் பின் வலீத் (ரழி) அவர்களின் ஆலோசனைப்படி, குளித்துத் தன்னைத் தூய்மைப்படுத்திக் கொண்டு வந்த ஜர்ஜாஹ் அவர்கள், காலித் பின் வலீத் (ரழி) அவர்களின் திருக்கரங்களினால் இஸ்லாத்தினை ஏற்றுக் கொண்டார்கள். இரண்டு ரக்அத் தொழுகைகளையும் தொழுது, நேர்வழி காட்டிய இறைவனுக்கு நன்றிக் கடன் செலுத்திக் கொண்டார்.

## ஒரு சின்னக் கணக்கு

திருமதி ஜோன் ஒரு தளபாட கடைக்குச் சென்று, சில தளபாடங்களை வாங்கினார். கடை உரிமையாளர் அவள் வாங்கிய பொருட்களுக்கு மொத்தமாக 70 டொலர்கள் செலுத்த வேண்டும் என கூறினார். அவர் இரண்டு 50 டொலர்கள் பெறுமதியான தாள்கள் என நினைத்து, 100 டொலர்கள் பெறுமதியான இரண்டு தாள்களை கொடுத்தார்.

கடை உரிமையாளரும் பணத்தை அவதானிக்காது, ஏதோ யோசனையில் வாங்கி எடுத்துக்கொண்டு 10 டொலர் பெறுமதியான தாள்கள் என நினைத்து, மூன்று 50 டொலர்கள் பெறுமதியான தாள்களை வழங்கினார். திருமதி ஜோன் மீதிப் பணத்தை சரிபார்க்காது தனது பணப்பையில் இட்டார். உண்மையில் இந்த கொடுக்கல் வாங்கலில் யாருக்கு நஷ்டம் ஏற்பட்டது.

**முறையாக, செய்கை முறையுடன் கணக்கினை செய்து பாருங்கள்.**

## வரைகின்ற கனவுகளை வாசிப்பவன்



விடியற்காலையில் பூக்கின்ற அழகிய
புத்துணர்ச்சியைப் போல தனிமையை
நான் அதிகம் நேசிக்கிறேன்.

அந்தத் தனிமையில் புலப்படுகின்ற
அமைதியில் ஆர்ப்பாட்டங்கள் ஏதுமின்றி
எனது மனம் மற்றுமொரு
பிரம்மாண்டத்திற்குள்
என்னைக் கூட்டிக் கொண்டு செல்கிறது.

எவ்வளவு அதிர்வுகளிலும் நூலகத்தில்
புலப்படுகின்ற
அமைதியைக் கிழித்துக் கொண்டு
இலக்கோடு பயணிக்கின்ற
புகையிரதத்தைப் போல
அந்தத் தனிமையில் விரக்தி, வெறுப்பு
அல்லது கவலையென்று
எதையுமே நான் பொருட்படுத்தியதில்லை.

அந்தத் தனிமைக்கு நான்
கனவு என்றும் பெயர் சூட்டி
வைத்திருக்கிறேன்.
ஏனென்றால் அந்த தனிமையில்
விழிக்கின்ற கனவில்தான்
அப்துல் கலாமின் பற்கள்
ஆயிரம் புன்னகையை எனக்குள்
இசையாய் வாசிக்கின்றது.

-நஸார் இஜாஸ்

## தொழில்நுட்பம் தான் மாறியிருக்கிறதே தவிர, காமிராவுக்குப் பின்னால் இருக்கிற நபரின் நோக்கமோ, வேலையோ மாறியதாக நான் நினைக்கவில்லை.



செழியன். தமிழில் நல்ல சினிமாவுக்காக தொடர்ந்து எழுதியும் பங்காற்றியும் வருபவர். இவரது உலக சினிமா நூல் புகழ்பெற்றது. புதிய இயக்குனர்கள், புதிய கதைக் களங்களில் கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக அர்ப்பணிப்புடன் இயங்கி வருகிறார். அண்மையில் அவர் தமிழ் இந்துவிற்கு வழங்கிய நேர்காணலின் சில பகுதிகள்

**★ டிஜிட்டல் தொழில் நுட்பம் வந்தபிறகு, சினிமாட்டோகிராபருக்கான சவால்கள் என்ன?**

பிலிம் இருந்தபோது அதில் எப்படிப் பதிவாகிறது என்பதைப் பார்ப்பதில் ஒரு த்ரில் இருக்கும். டிஜிட்டல் தொழில்நுட்பம் அறிமுகமான பிறகு அந்த சிலிர்ப் புணர்வை இழந்து விட்டோம். ஆனால் ஒரு காட்சியை உயிர்ப்புடன் எடுக்க வேண்டுமென்று நினைக்கும்போது, அது பிலிமாக இருந்தாலும் டிஜிட்டலாக இருந்தாலும் அதன் பின்னால் இருக்கிற கலைஞனின் அழகுணர்வு என்பது இன்னமும் இருக்கவே செய்கிறது. பழையதுதான் சிறந் தது என்று புதியதை ஒதுக்குவதும் தேவையில்லை. தொழில்நுட்பம் தான் மாறியிருக்கிறதே தவிர, காமிராவுக்குப் பின்னால் இருக்கிற நபரின் நோக்கமோ, வேலையோ மாறியதாக நான் நினைக்கவில்லை.

**★ ஒளிக்கும் காட்சிக்குமான தொடர்பு என்ன?**

ஒரு காட்சியைப் பார்த்தவுடன் அது சோகமானதா, சந்தோஷமானதா என்பதை அதன் ஒளியே சொல்ல முடியும், சொல்ல வேண்டும். ஒரு ப்ரேமில் இருக்கும் இரண்டு கதாபாத்திரங்களுக்குள் இருப்பது இணக்கமா, முரண்பாடா என்பதை ஒளியே சொல்லிவிட முடியும். ஒளியைப் புரிந்து கொள்வதற்கும், ஒளியைக் கையாள்வதற்கும், ஒளி உருவங்களோடு எப்படி விளையாடி உணர்வுகளை உருவாக்குகிறது என்பதையும் ஒளிப்பதிவாளன் தொடர்ந்து கற்றுக் கொண்டே இருக்கிறான். மொத்தத்தில் ஒளியை நான் புரிந்து கொள்வதற்கான முயற்சிதான் எனது திரைப் படங்கள்.

ஒளியினுடனான தொடர்ந்த தேடலில் அதன் மொழி இப்போது எனக்குப் புரிகிறது. அதன் தன்மையும் விளையாட்டும் புரிகிறது. சினிமா போன்ற கூட்டுக் கலை வடிவத்தில் சரியான ஒளிக்காகக் காத்திருப்பதும் பதிவு செய்வதும் எல்லா நேரத்திலும் சாத்தியமில்லை. என்றாலும் சில சமயங்களில் ஒளி நம்மிடம் கைகுலுக்கும் அனுபவம் நிகழ்கிறது.

ஒரு ஓவியன் கித்தானில் தீற்றிக்கொண்டே இருக்கிறான். எந்தக் கணத்தில் அவன் ப்ரஷ்சை தூர எடுக்கிறான்? எப்போது எது அவனைப் போதும் என்று நிறுத்தச் சொல்கிறது. அது போலதான் ஒரு ப்ரேமில் ஒளி, உருவம் வெளி என்று எல்லாம் சேர்ந்து உருவாகும்போது ஒரு கட்டத்தில் போதும் நிறுத்து என்று அதுவே சொல்லும். படப்பிடிப்பின் சத்தங்களுக்கு நடுவில் அதைக் கேட்பதற்கான அமைதி நம் மிடம் இருக்க வேண்டும். அவ்வளவுதான்.

**★ ஒரு நல்ல ஒளிப்பதிவாளராக அடிப் படையாக என்னென்ன திறன்கள் தேவை?**

ஒளியைப் படிப்பதுதான் ஒளிப்பதிவாளரின் அடிப்படை. அதைக் கற்றுக் கொள்ள ஓவியங் களைப் பார்க்க வேண்டும். சிறந்த புகைப்படக் கலைஞர்களின் புகைப்படங்களைப் பார்க்க வேண்டும். சினிமா ஒளிப்பதிவைப் பொறுத்தவரை, அசைவுகள் மிகவும் முக்கியம். ஒரு உருவம் நகரும்போது எப்படி அதற்கு ஒளியூட்டப் போகிறோம் என்பதைத் திரைப்படங்களைப் பார்ப்பதன் வழியாகவே கற்க முடியும்.

நிஜ வாழ்க்கையிலும் கற்கலாம். இது எல்லாம் தொழில்நுட்பம். இதைத்தாண்டி சுற்றியுள்ள வாழ்க்கையை அவதானிக்க வேண்டும். கதைகள், கவிதைகளைப் படிக்க வேண்டும். தொழில்நுட்பமும், சுயமான கற்பனையும் தான் செய்கிற வேலையில் முழுமையான அர்ப்பணிப் புணர்வும் சேரும்போதுதான் தனித்துவமான ஒளிப் பதிவாளன் உருவாக முடியும் என்று நான் நம்புகிறேன்.

## தொலைக்காட்சி நம் குழந்தைகளின் வளர்ச்சியை எவ்வாறு பாதிக்கும்?

நூல் அறிமுகம்

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை நீண்ட நேரம் பார்ப்பது, நமது குழந்தைகளின் அறிவுத்திறன் வளர்ச்சியைக் குறைக்கிறது; சிந்தனையை மந்தமாக்குகிறது; படைப்பாக்கத்தின் குரல் வளையை நெரிக்கிறது; நேரத்தைத் திருடிக் கொள்கிறது; தூக்கத்தைக் கெடுக்கிறது; விளையாட்டு நேரத்தைக் கொள்ளையடிக்கிறது...இப்படி நிபுணர்களின் ஆய்வுக் கருத்துகளின் வாயிலாக பெற்றோர்களை எச்சரிக்கை செய்கிறது இந்தப் புத்தகம்.



உருவாக்கம்: பினாங்கு பயனீட்டாளர் சங்கம்
தமிழில்: பொன். தனசேகரன்
வெளியீடு: அடையாளம், இந்தியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## ஒலிம்பிக்கில் வதைபடும் சிறுவர்கள்





ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பிப்பதற்கு இன்னும் இரண்டு மாதங்கள் மாத்திரமே உள்ளன. 4 வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் ஒலிம்பிக் போட்டிகள் இம்முறை பிரேஸிலில் இடம்பெறவுள்ளது. 2008ல் சீனாவில் இடம்பெற்ற ஒலிம்பிக் போட்டியில் பதக்கப்பட்டியலில் சீனா முதலிடம் பெற்றிருந்தது. எதையும் செய்வதற்கு திறமையானவர்கள் உள்ள நாடு என்பதாக சீனா அடையாளப்படுத்தப் படுகிறது. கடந்த ஒலிம்பிக் போட்டியில் அதிகமான பதக்கங்களை வெற்றி கொள்வதற்கு சீனா கடுமையாக முயற்சித்திருந்தது. அதன் மூலம் சீனா உலகில் முதற்தர நாடாக வரவேண்டுமென்பதே இலக்காக இருந்தது. ஆனால் அவ்வெதிர்பார்பை நிறைவேற்றிக் கொள்ள அப்பாவிக் குழந்தைகளினுடைய சிறு பராயத்தை பறித்தெடுப்பது கவலைக்குரிய விடயமொன்றாகும். சீன ஜிம்னாஸ்டிக் அணிக்கு திறமையானவர்களே தெரிவு செய்யப்படுகிறார்கள். அதற்காக வேண்டி சிறுவயது முதலே சீனக் குழந்தைகள் பயிற்று விக்கப்படுகிறார்கள். குறிப்பிட்ட பயிற்சிகளின் போது இவ் அப்பாவிக் குழந்தைகள் எந்தளவு தூரம் பாதிப்புக்களுக்கு உட்படுகிறார்கள் என்பதை இப் புகைப்படங்கள் வாயிலாக அறிய முடிகிறது. இவ்விடயம் அவ்வப்போது உலக அரங்கில் பேசப்பட்டு வந்தது. ஆனாலும் அது நிறுத்தப்படவில்லை. இன்னும் அவ்வகையிலேயே இடம்பெறுகிறது. உள ரீதியாகவும் உடல் ரீதியாகவும் பாதிப்புக்களுக்கு உட்படுகின்ற இச்சிறுவர்கள் நாட்டிற்காக வேண்டி விளையாடுவது தமது சுய விருப்பத்தின் பேரிலா என்பது பாரிய பிரச்சினையாக உள்ளது.

## கிரிக்கட் சபை அதிகாரிகள் குடும்பத்தோடு இங்கிலாந்தில்

இலங்கை கிரிக்கட் நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் குடும்பங்கள் சகிதம் இங்கிலாந்து சுற்றுப் பயணத்தில் கலந்து கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு 18 குடும்பங்கள் இங்கிலாந்து சென்றுள்ளதாகவும் அதில் கிரிக்கட் சபை அதிகாரிகளின் மனைவிமார், பிள்ளைகள், மாமன் மாமிமார் மற்றும் பாட்டன் பூட்டிமார்கள் உள்ளடங்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் தங்களதுசொந்தச் செலவில் பயணிப்பதாக குறிப்பிட்டிருந்த பொழுதிலும் இறுதியில் அவர்களுடைய பயணச் சுமையை இலங்கை கிரிக்கட் நிறுவனமே சுமக்கவிருப்பதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இது அதிசயமல்ல நல்லாட்சியினுடைய வித்தியாசமான போக்கு என்பதாக ஊழியர்கள் குறிப்பிடுகிறார்கள்.

## இனவாதம் காரணமாக விலக்கப்பட உள்ளேன்

**- கரீம் பென்ஜீமா குற்றச்சாட்டு**



பிரான்சின் முன்னணி கால்பந்தாட்ட வீரரான கரீம் பென்ஜீமா, தேசிய கால்பந்துக் குழுவின் மேலாளர் இனவாதிகளுக்கு தலைவணங்கி யூரோ 2016 கால்பந்து போட்டியில் பங்கேற்கவுள்ள அணியில் இருந்து தன்னை விலக்க முடிவு செய்துள்ளதாக குற்றஞ்சாட்டியுள்ளார்.

தற்போதுள்ள எந்த பிரெஞ்சு கால்பந்து விளையாட்டு வீரரைக் காட்டிலும் பென்ஜீமா பிரான்சுக்கு அதிக கோல்களைப் போட்டவராவார்.

ஆனால் தனது குழுவை சேர்ந்த வீரருக்கு பாலியல் ஒலிநாடா ஒன்றை வைத்து மிரட்டியதாக எழுந்த குற்றச் சாட்டுகளால் குழுவிலிருந்து நீக்கப்பட்டார்.

பென்ஜீமா தனக்கு இந்த விவகாரத்தில் தனது ஈடுபாடு இருந்ததாகக் கூறப்படுவதை மறுத்துள்ளார். அவர் கடந்த ஆண்டு தேசிய அணியில் இருந்து இடை நீக்கப்பட்டார்.

ஆனால் ஸ்பெய்ன் சஞ்சிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில், பிரான்சில் அதிகரித்து வரும் இனவாத அரசியல் கட்சிகளின் செல்வாக்கால் தான் தனது தொடர் விலக்கல் ஏற்பட்டுள்ளது என்றும் மிரட்டல் குறித்த குற்றச்சாட்டால் அல்ல என்றும் தெரிவித்துள்ளார்.

ஸ்பெயினில் உள்ள ரியல் மாட்ரிட் கால்பந்து கிளப்புக்காக அவர் விளையாடுகிறார்.

## சந்தேகத்துக்குரிய பந்துவீச்சுப் பாணி : சிக்கினார் ஷமிந்த எரங்க



பந்தை வீசியெறிகிறார் என்ற சந்தேகத்தின் பேரில், இலங்கை அணியின் வேகப் பந்து வீச்சாளர் ஷமிந்த எரங்க மீது, உத்தியோகபூர்வக் குற்றச்சாட்டு பதிவு செய்யப் பட்டுள்ளது.

இங்கிலாந்து அணிக்கெதிரான இரண்டாவது போட்டியின் முடிவைத் தொடர்ந்தே, இந்த முறைப்பாடு பதிவு செய்யப் பட்டுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் விதிகளின்படி, இவ்வாறு குற்றச்சாட்டுப் பதிவுசெய்யப்பட்டு 14 நாட்களுக்குள் ஒருவரது பந்துவீச்சைச் சோதனைக்குள்ளாக்க வேண்டும். சோதனை முடிவு வெளிவரும்வரை, குறித்த பந்துவீச்சாளர் தொடர்ந்தும் பந்துவீச முடியும்.

## கோலியை தலைவராக்குங்கள்

**-ரவி சாஸ்த்ரி**



இந்திய டெஸ்ட் அணியின் தலைவரான விராத் கோலிக்கு, இந்தியாவின் அனைத்து வகையான போட்டிகளின் தலைமைத்துவமும் செல்வதற்கான பொருத்தமான நேரம் இதுவெனத் தெரிவித்துள்ளார் ரவிசாஸ்த்ரி. தலைவராகக் கோலி நியமிக்கப்பட்டாலும், அணியின் வீரராக மகேந்திரசிங் டோனி தொடர்ந்தும் பங்களிக்க முடியுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## வாகனக் கொள்வனவில் இலங்கை கிரிக்கட் நிறுவனம்

நிதி ரீதியில் நெருக்கடிகளை சந்தித்துவரும் இலங்கை கிரிக்கட் நிறுவனம் 150 மில்லியன் ரூபா செலவில் பல வாகனங்களை கொள்வனவு செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



நான்கு மோட்டார் வண்டிகள், 45 ஆசனங்கள் கொண்ட இரண்டு பஸ் வண்டிகள் மற்றும் 26 ஆசனங்கள் கொண்ட பஸ் வண்டியொன்றும் சிறியரக லொறியொன்றுமே இவ்வகையில் கொள்வனவு செய்ய விருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இந்நாட்களில் கடுமையான நிதி நெருக்கடிக்குள்ளாகி வருகின்ற கிரிக்கட் நிறுவனம் இது போன்ற அவசரமான கொள்வனவுகளில் ஈடுபடுவதற்கூடாக பலரது பொக்கட்டுக்கள் நிரப்பப்படுவதற்குரிய சாத்தியங்களே உள்ளதென அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

# வெள்ள நிவாரணப் பணிகள்




Published by Focus Media (Pvt) Ltd, 49, Sri Mahinda Dharma Mawatha, Colombo 09.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org